

கல்கி
KALKI 2.1.1977
75 காசு
நாயகி
இதழில்













BRITANNIA
GLUCOSE
BRITANNIA
Glucose-D
இப்போது கண்கவரும் புதிய பேக்கிலே



1977 ஜனவரி 2
அநல
மார்கழி 18
கல்கி
போடு புதிர்!
ஒரு வட்டத்தை அதிகபட்சமாக நான்கு நேர் கோடுகளால் எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம்?
எஸ். கோமதி
(விடை. 58ம் பக்கம் பார்க்க)
"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



க்ளியர்டோன்
என்றாலே
Kleertone
வாட்டர் ஹீட்டர்.
கீஸர்.
அதோடு, வாட்டர் பாயிலர்,
இம்மர்ஷன் ராடுகள்,
ரூம் ஹீட்டர்,
ஃபான் ஹீட்டர்.
Kleertone
தி நேஷனல் ரேடியோ & எலக்ட்ரானிக்ஸ் கோ. லிட்.



எங்களுக்குச் "சிறிய-நோக்கமா?" எப்படி?

எங்களுடைய நோக்கில் "சிறிய-வாடிக்கையாளர்கள்" என்பதே இல்லை.

ஏனெனில், எந்த வாடிக்கையாளரும் எங்களுக்குப் பெரியவர்கள் தான்; ஒரு லாரியின் சொந்தக்காரராயினும் சரி, ஒரு நூறு வண்டிகளைப் பெற்றிருப்பவராயினும் சரி.

நீங்கள் ஒரே காருடையவராயினும் பல கார்களுக்குப் பொறுப்பாளராயினும்—

நீங்கள் லாரியின் சொந்தக்காரரோ, டாக்ஸி ஓட்டுபவரோ அல்லது பெரிய தொழில் அதிபரோ—

வாடிக்கையாளராகிய நீங்கள் தான் டிவிஎஸ்-க்கு முக்கியமானவர். ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் நாங்கள் அளிப்பது முதல் தரமான வரவேற்பு.

அவர் பெறுவது தரத்தில் உயர்ந்த பணியும் பராமரிப்பும்—மிக விரைவாக. டிவிஎஸ்ஸின் மிகத் திறமையான, பயிற்சி பெற்ற ஊழியர்கள், திறன் மிக்க இயந்திரங்களைக் கொண்டு இப்பணியினை உங்களுக்கு வழங்குகிறார்கள்.

நினைவிருக்கட்டும், டிவிஎஸ் பணிமனைகள் உபயோகிப்பது புகழ் பெற்ற தயாரிப்பாளர்களின் அசல் மோட்டார் உறுப்புகளே.

டிவிஎஸ்ஸின் இப்பணிகளுக்காக நீங்கள் வெகுதூரம் செல்லத் தேவையில்லை. எங்கள் பணிமனை உங்கள் அருகிலேயே இருக்கிறது. மதுரை, திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம், கோயம்புத்தூர், திருவனந்தபுரம், எர்ணாகுளம், சென்னை, பங்களூர், மைசூர், செகந்திராபாத், மற்றும் விசாகப்பட்டினம்.

சொல்லுங்கள்! எங்கள் "சிறிய-நோக்கம்" சீரிய நோக்கம் தானே?

**உங்கள்
நம்பிக்கைக்குரியது
டிவிஎஸ்**

டி வி சுந்தரம் அய்யங்கார் அண்ட் சன்ஸ் லிமிடெட்
மதுரை மற்றும் கிளைகள்.

SAA/TVS/2305

பாட்டுப் பற்றிய பேச்சு!

கல்கி மலர் 36 இதழ் 23

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அறுசுவை விருந்தை ஒரு கை பார்க்கலாம் என்று நாவில் ஜலம் சொட்ட உட்கார்ந்திருக்கும்போது, '''கத்திரிக்காய் கொத்சுவைக் கம்ப்யூட்டர் உதவியுடன் தயாரிப்பது எப்படி?' என்று ஒரு சொற்பொழிவைக் கேட்டுவிட்டுப் பிறகு இலையில் கை வைக்கலாம்'' என்றால் எப்படி இருக்கும்!

அப்படிப்பட்ட நிலைதான் பாட்டைப் பற்றிப் பலர் பேச ஆரம்பிக்கும்போது நமக்கு ஏற்பட்டு விடுகிறது. ஆனால் அதிர்ஷ்ட வசமாக இந்த ஆண்டு சங்கீத சீசனின் தொடக்க விழாக்கள் மூன்றிலும் பங்கு பற்றிய அறிஞர்கள் அழகாகப் பேசக்கூடிய ஆற்றலுள்ளவர்களாகவும் அமைந்தார்கள்.

பொன் விழா ஆண்டில் சங்கீத வித்வத் சபையில் பொன்னான கருத்துக்களை உதிர்த்தார் டாக்டர் கரன் சிங். 'பேசியது மட்டும் போதாது; மேடையிலே பாடவும் வேண்டும்' என்று அழைப்பு வந்தபோது, 'இப்படியெல்லாம் அழைத்தால் பாட மாட்டேன்' என்று சிரித்தபடியே முறுக்குப் பண்ணிக்கொண்ட திரு கரன் சிங் சிறந்த இசைக் கலைஞர் என்பதை நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள். சுகாதார அமைச்சராகிய அவர், மக்களின் உடல் சுகாதாரத்துடன் உள்ளத்தின் சுகாதாரத்தையும் கவனிக்கும் கடமை தமக்கு உண்டு என்பதை உணர்ந்தவராகப் பேசியிருக்கிறார். ''தேசத்தின் அரசியல் பொருளாதார முன்னேற்றத்துக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறோமோ அதே அளவு முக்கியத்துவம் கலாசார மலர்ச்சிக்கும் தரப்பட வேண்டும்'' என்றார். இளம் பாடகர்களுக்கு ஒரே வரியில் தெளிவான அறிவுரை வழங்கி விட்டார் டாக்டர்: ''இசையில் முன்னேறக் குறுக்கு வழி ஒன்றும் கிடையாது!''

தலைமை வகித்த ஸ்ரீமதி பிருந்தா மிகவும் சிரமப்பட்டு, தமிழ் நாட்டில் மொத்தம் எத்தனை கோயில்கள் உள்ளன, அவற்றில் உபரி வருமானம் உள்ளவை எத்தனை, வருடாந்தர வருமானம் எவ்வளவு கிடைக்கிறது என்றெல்லாம் புள்ளி விவரங்களைச் சேகரித்து அரசுக்கு இவற்றிலிருந்து இரண்டரைக் கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது என்று கண்டுபிடித்துச் சொல்லியிருக்கிறார். அதிலிருந்து கணிசமான தொகையை இசை வளர்ச்சிக்கு என்று அரசு ஒதுக்க வேண்டும் என்பது அவரது கோரிக்கை. இதில், அரசு கலைகளின் வளர்ச்சிக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டும் என்ற கோரிக்கைதான் முக்கியமே ஒழிய, எந்த வருமானத்தைக் கொண்டு செலவு செய்ய வேண்டும் என்பது முக்கியமில்லை. விற்பனை வரி வருமானத்திலிருந்து செலவழிக்கட்டும், அல்லது லாட்டரிச் சீட்டு வருமானத்திலிருந்துதான் செலவழிக்கட்டும். எப்படியோ கலைகளின் வளர்ச்சிக்குக் கணிசமான நிதி ஒதுக்கினால் சரி.

'கலைகளின் மூலம் தேசிய ஒருமைப்பாடு' என்பது வழக்கமான பல்லவிதான் என்றாலும் ஆளுனர் சுகாதியா இதனை ஆழ்ந்து நோக்கிப் புது மாதிரி நிரவல் பண்ணியிருக்கிறார். தமிழிசைச் சங்கத்தில் பேசுகையில், 'ஹிந்து மதத்தின் அடிப்படை உண்மைகளை உள்ளடக்கியதான தியாகையர் கிருதிகள் தேசிய ஒருமைப்பாட்டுக்கு மட்டுமல்ல, உலக ஒற்றுமைக்கே கூட உதவக்கூடியன' என்று எடுத்துக் காட்டியுள்ளார். 'சங்கீதம் செவிக்கினிமையாக இருக்கிறதா, நெஞ்சைத் தொடுகிறதா என்பனதாம் முக்கியம். அதில் ஒருவர் அடையும் மற்ற விதமான வித்வத்துகள் இரண்டாம் பட்சம்தான்' என்றும் ஆளுநர் வலியுறுத்தியிருக்கிறார்.

தலைமை வகித்து இசைப் பேரறிஞர் பட்டம் பெற்ற திரு கோவிந்தராஜ பிள்ளை அவர்கள் கூறிய யோசனையை அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் ஏற்கெனவே பின்பற்ற ஆரம்பித்துவிட்டன. நாம்தான் பின்தங்கி நிற்கிறோம்! 'சங்கீதம் கற்றுத் தரும் கல்வி நிலையங்கள் பெரிய பெரிய மேதைகளின் இசையை டேப்பில் பதிவு செய்து வைத்திருந்து தினம் ஒரு மணி நேரமாவது

மாணவர்களுக்குப் போட்டுக் காட்ட வேண்டும்' என்ற யோசனையை அமல்படுத்த இனியும் நாம் தாமதிக்கக் கூடாது.

இந்திய நுண்கலைக் கழகத்தின் இசை விழாவைத் தொடங்கி வைத்த திரு சி. வி. நரசிம்மன், ஐ. நா. சபையில் உயர் பதவி வகித்து உலகப் பிரச்னைகளுடன் அன்றாடம் போராடுகிறவர். அத்தனை சிக்கல்களுக்கு இடையில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் அவருக்கு அவ்வப்போது மன அமைதியை அளிப்பது முசிரி அவர்களிடம் அவர் கற்றுக் கொண்ட இசைக் கலைதான். 'நமது இசையின் ஜீவனே அதிலுள்ள இறையுணர்வுதான்' என்று ஆரம்பித்து அழகாகத் தொடர்கிறார் திரு சி. வி. என்.: ''ஒரு கலைஞர் தமது வித்வத்தை யெல்லாம் காட்டி ரசிகர்களை மலைக்க வைக்க முடியும்; ஆனால் அவர்கள் இதயத்தைத் தொட முடியாது. அதற்கு வித்வான் சாகித்தியத்தின் அர்த்த பாவத்தைப் புரிந்து கொண்டு, தாமே பக்தியில் திளைத்து, அடக்கத்துடன் பாட வேண்டும். இது எளிதில் கைவரப் பெறக் கூடியதல்ல.''

எளிதல்ல என்பதால் விட்டு விடலாமா? பெறுவதற்குரிய உபாயத்தையும் கூறுகிறார்: ''இசைப் பள்ளிகளில், கல்லூரிகளில் சங்கீதம் போதிப்பதுடன், சங்கீதத்தை அனுபவிப்பதற்கான வகுப்புக்களையும் நடத்த வேண்டும். இந்த ரசனை வகுப்புக்களில் கீர்த்தனைகளின் பொருள்களையும் அவை உருவாக நேர்ந்த சந்தர்ப்பச் சூழ்நிலைகள் முதலானவை பற்றியும் கீர்த்தனைகளின் வடிவ அமைப்பு, விசேஷத் தன்மைகள் முதலானவை குறித்தும் சொல்லித் தரவேண்டும்.''

சங்கீத வித்வத் சபையில், 'ராம நீ சமானமெவரு?' என்று பாடியபடியே திரு எம்.டி. ஆர்., தமக்கு இருபுறமுமிருந்த ராமபத்திரனையும் ஜெயராமனையும் சுட்டிக் காட்டினார். ஆனால் எதிரே இருந்த ரசிகர்களுக்குத் தெரியாதா, நடுவே இருப்பவரும் ஒரு ராமநாதன்தான், அவருக்குச் சமானமானவரும் இல்லை என்று? எனவே இந்திய நுண்கலைக் கழகத்தில் தலைமை வகித்து அவர் ஓர் அருமையான கருத்தை வெளியிட்டதில் நமக்கு வியப்பு ஏற்படவில்லை. திரு சி. வி. என். பேச்சுக்கு விரிவுரை வழங்குவதே போல் அவர் சொன்ன அந்த விஷயம் இதுதான்: ''இந்த நாளில் குருகுலவாசம் என்பது சாத்தியப்படாது. எனவே குருகுலவாசத்தின் தேவையற்ற அம்சங்களை விடுத்து, சிறப்பு இயல்புகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டவையாக இன்றைய சங்கீதப் பள்ளிகளும் கல்லூரிகளும் இயங்க வேண்டும்.''

இசை விழாவைத் தொடர்ந்து நடன விழா!

இசைவிழாவைத் தொடர்ந்து சென்னையில் நடன விழா நடக்கிறது. திருவான்மியூரில் இந்நாள் வரை நடைபெற்று வந்த கலாக்ஷேத்திராவின் வருடாந்திரக் கலைவிழா சென்னை நகரின் மையத்துக்கு, மயிலை மியூசிக் அகாடமிக்கே வருகிறது. திருவான்மியூர் வரை சென்று வர முடியாமல் சிரமப்பட்ட ஏராளமான கலை அன்பர்களுக்கு இது இனிக்கும் செய்தி.

இந்த நடன விழாவில் முதல் நாளன்று இன்னிசைக் கச்சேரிக்கும் இடமுண்டு. ''இசை இல்லாமல் நாட்டியமேது?'' என்பதை உணர்த்துவது போல.

கலை விழாவை ஆளுநர் திரு சுகாதியா ஆரம்பித்து வைக்கிறார்; மத்திய அமைச்சர் திரு வி. சுப்பிரமணியம் ராமாயண நாட்டிய நாடகத் தொடரை ஆரம்பித்து வைக்கிறார்.

ஜனவரி ஏழாம் தேதி முதல் பத்தாம் தேதி வரை கலாக்ஷேத்திரத்தின் குமார சம்பவம், ஆண்டாள், மீனாட்சி விஜயம் ஆகிய நாட்டிய நாடகங்கள் நடக்கின்றன. பன்னிரண்டாம் தேதி முதல் ராமாயண நாட்டிய நாடகத் தொடர் ஆரம்பம். இடையில் பதினோராம் தேதி குவாலியரைச் சேர்ந்த ஒரு நடனக் குழு (Ranga Sri Little Ballet Troupe) பஞ்ச தந்திரக் கதைகளை நாட்டிய நாடகமாக வழங்குகிறது.

நடன விழா வெற்றி பெற ரசிகர்களின் அமோக ஆதரவைக் கலாக்ஷேத்திரம் கோருகிறது.


ராஜாஜி சிந்தனை

ராஜ ரிஷிகள் மூவர்

ஜனக மகாராஜாவுக்குப் பின் உலகத்தில் புகழ்பெற்ற ராஜரிஷிகள் இருவராவர். ஒருவர் பரத கண்டத்தை ஆண்ட அசோக மன்னன். மற்றொருவர் மேல் நாட்டில் ரோம ராஜ்யத்தை ஆண்ட மார்க்க அரேலிய சக்கரவர்த்தி. இவர் அசோகருக்குப் பின் சுமார் நானூறு வருஷங்களுக்குப் பிறகு கி.பி. 161 முதல் 180ம் வருஷம் தேக வியோகமாகும்வரை அரசு புரிந்தார்.

மார்க்கருடைய ''**ஆத்ம சிந்தனை**'' பிறர் படிக்க வேண்டி எழுதிய ஒரு நூல் அன்று. அவர் இறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின் கையெழுத்து ஏடுகள் கிடைத்துப் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டது. ஒரே காலத்தில் எழுதியதுமல்ல. அவ்வப்போது தமக்குள் தோன்றிய எண்ணங்களைத் தம் மனநிலையைத் திடப்படுத்திக் கொள்ளுமாறு தமக்குத் தாமே உபதேசித்துக் கொண்ட முறையில் அவர் எழுதிய குறிப்புக்கள். அவற்றில் நீ என்பது மார்க்கரே. பிறருக்குச் செய்யும் உபதேசமல்ல. தம் உள்ளத்தோடு தாமே ஆட்சேபணை சமாதானம் சொல்லிக் கொண்டு போகிறார். ஆனால் அவர் தமக்காக எழுதிய இக்குறிப்புக்களின் தொகை உலகத்தார் எக்காலமும் படிக்கத்தக்க சிறந்த வைராக்கிய தீபமாக விளங்கும் நூலாகும்.

— ஆத்ம சிந்தனை நூலின் முன்னுரை


கம்யூனிஸ்ட் கட்சியின் உள் நோக்கங்களை பிரதமர்
அம்பலப்படுத்தி இருக்கிறார்!
பதவி
ரே
டில்லி
ஆதரவு
இந்திரா
காங்கிரஸ்
ராஷ்டிரபதி
ஆட்சி
குஜராத்
காங்கிரஸ்
ஆட்சி
ஒரிஸ்ஸா



ஜீவகாருண்யம்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

ஏகப்பட்டதாகப் பரோபகாரங்களைச் சொல்லிக் கொண்டே போயிருக்கிறேன். பொதுவாகப் பரோபகாரம் என்றே நினைக்காத சில விஷயங்களைக்கூட இந்தப் பெரிய 'லிஸ்ட்'டில் சேர்த்துச் சொல்லியிருக்கிறேன். இதிலே இன்னொன்று: அவனவனும் தன் உடம்பையும் புத்தியையும் சுத்தமாக வைத்துக்கொள்வதே பெரிய பரோபகாரம்தான். துர்ப்பழக்கங்களால் ஒருத்தன் வியாதியைச் சம்பாதித்துக் கொள்கிறான் என்றால், அப்புறம் அவனால் எப்படிப் பரோபகாரம் பண்ண முடியும்? இது மட்டுமில்லை. இவனுடைய வியாதி பிறத்தியாருக்கும் பரவக்கூடும். அதனால் நம் அஜாக்கிரதையால், துர்ப்பழக்கத்தால் வியாதியை வரவழைத்துக் கொள்கிறபோது பர அபகாரமும் பண்ணி விடுகிறோம். நம்மை மீறி வந்தால் அது வேறே விஷயம்.

இந்தக் காலத்தில் எல்லோரும் நோயும் நொடியுமாக அவஸ்தைப்படுகிற மாதிரி நாற்பது, ஐம்பது வருஷங்களுக்கு முந்தியெல்லாம் இல்லை. காரணம் என்னவென்றால் இப்போது அநேகருக்கு மனஸில் நெறியில்லாமல் இருப்பதும், அநேக துராசாரங்கள் வந்திருப்பதும்தான். ''சாஸ்த்ராய ச, ஸௌகாய ச'' என்பார்கள் — அதாவது சாஸ்திரப் பிரகாரம் நெறியோடு, ஆசாரத்தோடு இருப்பதுதான் சௌக்கியமாக, ஆரோக்கியமாக இருக்கவும் உதவுவது என்று அர்த்தம். இப்போது எச்சில் தீண்டல் பார்க்காததாலேயே அநேக வியாதிகள், தொத்துநோய்கள் பரவிக் கொண்டு வருகின்றன.

சரீர வியாதிதான் தொத்துகிறது என்றில்லை. எண்ணங்களும் பிறத்தியாரைப் பாதிக்கவே செய்கின்றன. இப்போது ஸயன்ஸில் கூடச் சொல்கிறார்கள், 'மூளை எண்ணங்களாக வேலை செய்வது கூட ஓர் எலெக்ட்ரிக் கரண்ட்தான்; சிந்தனா சக்திக்குப் (Thought-Power) பிறரையும் பாதிக்கிற தன்மை இருக்கிறது' என்று. அதனால் நாம் சரீரத்தையும், புத்தியையும் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பதாலும் பிறரின் தேக, மன ஆரோக்யங்களுக்கு உபகாரம் பண்ணியவர்களாகிறோம்.

நேராக மூளையைச் சுத்தப்படுத்திக்கொள்கிறேன் என்று உட்காருவதைவிட, நான் சொன்ன அநேக தினுசான பரோபகாரங்களை — எல்லாவற்றையுமோ, சிலவற்றையோ — ஓயாமல் செய்து கொண்டிருந்தாலே, தானாகச் சித்தம் சுத்தமாகிவிடும்.

பரோபகாரம் சித்த சுத்திக்கு உதவவேண்டுமானால் அதற்கு உயிர்நிலை, அகங்காரம் என்பது லவலேசம்கூட இல்லாமல் தொண்டு செய்வதுதான். 'நாம் பெரியவர்; உபகாரம் பண்ணுகிறோம்' என்ற நினைப்பே தலையெடுக்க விடக்கூடாது. கொஞ்சம் அப்படி நினைத்தாலும் அது உபகாரம் பண்ணுவதன் பலனை — சித்த சுத்தியை — சாப்பிட்டு ஏப்பம் விட்டு விடும். இரண்டாவது, (இதிலேயே அதுவும் அடக்கம்தான்) பிரதிப் பிரயோஜனத்தைத் துளிக்கூட எதிர்பார்க்கக் கூடாது. உபகாரம் செய்வதால் நமக்கு ஸித்திக்கிற சித்த சுத்தியேதான் பெரிய பிரயோஜனம்.

அவரவரும் தம் நிலையில் தன் வருமானம், குணம், சரீர வசதி, ஆற்றல் இவைகளுக்கு ஏற்றபடி எவ்விதங்களில் பரோபகாரம் செய்ய முடியுமோ அப்படியெல்லாம் செய்ய வேண்டும். உடம்பிலே எந்த அவயவத்துக்குத் துன்பம் வந்தாலும் கண் அழுகிறதல்லவா? அதைப் போல், உலகத்தில் எங்கே யாருக்குத் துன்பம் உண்டானாலும் நாம் மனம் கசிந்து, ஒவ்வொருவரும் நம்மாலான உதவியைச் செய்ய வேண்டியது நம் கடமை. இதில் பெருமைக்காகச் செய்வது எதுவும் இல்லை. பிறத்தியார் வற்புறுத்தலுக்காகவும் செய்ய வேண்டியதில்லை. லோகம் முழுக்க பகவத் ஸ்வரூபம் என்று மனஸில் வாங்கிக் கொண்டால், தன்னால், ஸ்வபாவமாக, பிறர் துயரத்தை நிவிருத்தி செய்வதில் ஈடுபடு

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

வோம். இதிலே நமக்குச் சிரமம் வந்தால் கூட அது சிரமமாகவே தெரியாது. எத்தனை தியாகம் செய்தாலும் அதுவே பரமானந்தமாக இருக்கும். இப்படித் தியாகம் பண்ணுவதற்கு எல்லையே இல்லை. உபகரிக்கப்பட்டவன் முகத்தில் மகிழ்ச்சி தவழப் பார்க்கிறோமே, அந்த ஆனந்தத்துக்கு எத்தனை தியாகமும் ஈடாகாது என்றுதான் தோன்றும்.

தினமும் தூங்கப் போகும் முன்பு இன்று ஜன சமுதாயத்துக்கு நாம் ஏதாவது கைங்கரியம் பண்ணினோமா என்று கேட்டுக் கொள்ள வேண்டும். 'ஈச்வரனைப் பற்றிப் 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்று தேவாரத்தில் சொல்லியிருக்கிறது. அந்த மாதிரி, நாம் பரோபகாரம் பண்ணாமலே ஒரு நாள் போயிற்று என்றால், அது நாம் பிறவா நாளே — அன்றைக்கு நாம் செத்துப் போனதற்குச் சமம்தான் — என்று வருத்தப்பட வேண்டும். பந்துக்கள் செத்துப்போனால் நமக்குத் தீட்டு என்று ஒரு புண்ணிய காரியத்துக்கும் உதவாமல் ஒதுக்கி விடுகிறார்கள். நாமே செத்த மாதிரி என்றால் இதுதான் பெரிய தீட்டு: பரோபகாரம் செய்யாத ஒரு தினத்தில் புண்ணியத்தின் பக்கத்திலேயே நாம் போகவில்லை — என்று *feel* பண்ண வேண்டும்.

நாம் எத்தனை சின்னவர்களாக இருந்தாலும் நம்மாலும் முடியக் கூடிய சின்னத் தொண்டு இல்லாமலில்லை. இப்படி அவரவரும் தனியாகவோ, ஸங்கமாகச் சேர்ந்தோ ஏதாவது பொதுநல கைங்கரியம் பண்ணியே ஆகவேண்டும். தண்ணீரில்லாத ஊரில் ஒரு பத்துப் பேர் சேர்ந்து கிணறு வெட்டுவது; ஏதோ ஒரு பிள்ளையார் கோவில் மதில் இடிந்திருந்தால் அதை நாலு பேராகச் சேர்ந்து கட்டுவது; பூஜை நின்றுபோன ஒரு கிராமக் கோயிலில் ஒரு கால பூஜைக்காவது நாலு பேரை யாசித்து மூலதனம் சேகரித்து வைப்பது; பசுக்கள் சொறிந்துகொள்வதற்கு ஒரு கல்லேனும் நாட்டுவது; நாம் படித்த நல்ல விஷயங்களை நாலு பேருக்குச் சொல்லுவது, எழுதுவது; இரண்டு சுலோகமாவது, பாசுரமாவது பாடி நாலு பேர் மனஸில் பகவானைப் பற்றிய நினைப்பை உண்டாக்குவது; குப்பை கூளங்களைப் பெருக்குவது — இந்த மாதிரி ஏதாவது தொண்டு அன்றன்றும் செய்ய வேண்டும். ஓசைப்படாமல் செய்ய வேண்டும் என்பது முக்கியம்.

குடும்பக் கடமைகளை விட்டுவிட்டு ஸோஷல் ஸர்வீஸ் என்று கிளம்ப வேண்டியதில்லை. அதையும் விடாமலே, இதுவும் கடமை என்ற உணர்வோடு சேர்த்துக் கொண்டு செய்ய வேண்டும்.

மேல் நாடுகளில் பெரிதாக ஸ்தாபன ரீதியில் *institutionalise* செய்து பரோபகாரப் பணிகள் செய்கிறார்கள். இப்படித் தனி ஸ்தாபனங்கள் இல்லாமலே, தனியாகவும், சங்கமாகவும் பொதுநலப் பணி புரிவது நமது வைதிக தர்மத்துக்கும் ஆதாரமான ஓர் அம்சமாகத்தான் ஆதியிலிருந்து இருந்து வந்திருக்கிறது.

வேத தர்மம் என்பது சுருக்கமாக: நம்மிடத்தில் இருக்கும்படியான எல்லா சக்திகளும் ஈச்வர சக்தியில் துளித் துளிதான். இந்தச் சக்திகளை ஈச்வரனுக்கே அர்ப்பணிக்க வேண்டும். நாவினாலே அவன் நாமாவைச் சொல்வது, மனஸினாலே தியானம் பண்ணுவது, சரீரத்தாலே பூஜை பண்ணுவது என்று, எல்லாம் ஈச்வர சம்பந்தமாக்க வேண்டும். பூஜை என்பதில் கர்மாவைச் செய்வதும், கடமையைச் செய்வதும் அடக்கந்தான். ஆசாரியாள் முடிவாகப் பண்ணின ''ஸோபான பஞ்சக''த்தில் கர்மாவைப் பண்ணுவதுதான் ஈச்வர பூஜை என்று நிர்த்தாரணம் செய்திருக்கிறார். ஸ்வதர்மப்படி அவரவருக்கு ஏற்பட்ட கர்மாவோடு, சர்வ ஜனங்களுக்கும் ஏற்பட்ட கர்மா இந்தப் பரோபகாரம் என்பது. அதனால், நாவால் நாமா சொல்வது போலவும், மனஸால் தியானம் செய்வது போலவும், சரீரத்தால் அன்றன்றும் கொஞ்ச நேரமாவது வெட்டியோ கொத்தியோ வேறு திருப்பியோ ஏதாவது பரோபகாரம் பண்ணினால் அதுவும் ஈச்வரார்ப்பணமாகிறது. இதுதான் நம்முடைய பூர்வீகர்கள் போன வழி. இதுவே நம் சாஸ்திரத்தை அநுசரித்த மார்க்கம். அந்த வழியிலேயே நாமும் போனால் ஈச்வரப் பிரஸாதத்தால் சகல சிரேயஸும் அடையலாம்.

நம: பார்வதி பதயே!
கோவிந்தநாம ஸங்கீர்த்தனம்!

கலை எழில் துலங்கும் கண்கவர் ஆடைகளை வழங்குவது கோ-ஆப்டெக்ஸ்



ஒவ்வொரு விழாக்காலத்திலும் கோ-ஆப்டெக்ஸ் எழில் வண்ணத் துணிகளை அளித்துவருகிறது. இனித்திடும் இப்பொங்கல் விழாவுக்கும் அப்படியே வண்ணமயமான ஏராளத் துணி வகைகள் புதிதாக வந்துள்ளன! உங்களை மகிழ்விக்கக் காத்திருக்கிறது கோ-ஆப்டெக்ஸ்.

சேலைகள்— யமுனா, **அஜந்தா, சாமுண்டி**
பிரிண்டட் சேலைகள், காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி, பரமக்குடி, மதுரை கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.

வேட்டிகள்


துவாலைகள் — டர்கிஷ் மற்றும் சாதா வகைகள். மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் ரகங்கள்

படுக்கை விரிப்புகள் — நவீன வடிவங்களில் சோததியான செசவு, மற்றும் தலையணை உறைகள்.

லுங்கிகள்— கோடிட்ட மற்றும் கட்டமிட்ட பல வகைகள்.

அலங்காரத் துணிகள் மற்றும் உடுப்புகளுக்கான துணிகள்

சம்பளம் பெறுவோருக்கு வழக்கம்போல் கடன் வசதி உண்டு



20-1-1977 வரை

பொங்கல் சிறப்புத் தள்ளுபடி
பருத்தி **10%**
பட்டு **15%**

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

20-1-77 வரை ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் விற்பனை உண்டு

பம்பாய் & டெல்லியில் கோ - ஆப்டெக்ஸ் நிலையங்கள் :

கோ - ஆப்டெக்ஸ் அஜந்தா ஹவுஸ், 164, டாக்டர் D. N. ரோடு, பம்பாய்-1 மற்றும் பம்பாயிலுள்ள மற்ற கோ-ஆப்டெகஸ் நிலையங்கள்.

யமுனா கோ - ஆப்டெக்ஸ் கைத்தறி சூப்பர் மார்க்கெட், ஸ்டே கட்டிடம், 41-42, நைவாலா, பிளாக் L, பாங்க தெரு, கரோல் பாக், புது டெல்லி-5 மற்றும் புது டில்லியில் உள்ள மற்ற கோ-ஆப்டெக்ஸ் நிலையங்கள்.



ஸ்கூட்டரை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி விட்டு ஆஷாவைப் பின் தொடர்ந்தேன். அகர உயரக் கதவுகளை இரு கைகளாலும் தள்ளித் திறந்த ஆஷா, ''வெல்கம் ஜவஹர்'' என்று புன்னகை செய்தாள். அந்தப் பிரும் மாண்டமான தோட்டத்தில் ஆங்காங்கே நீல நிற பாதரச விளக்குகள் சிறுசிறு ஒளிக் கோலங்களை அள்ளித் தெளித்திருந்தன.

தோட்டத்தைத் தாண்டி வீட்டை யடைந்த போதுதான் அந்த மோட்டார் சைக்கிளைக் கவனித்தோம். ''என் அப்பாவை யாரோ தேடி வந்திருக்கிறார்கள் போலிருக் கிறது'' என்று கூறிக் கொண்டே வாசல்கத வில்லை வைத்துத் தள்ளித் திறந்தாள் ஆஷா. வீட்டினுள்ளே இருளின் வெறுமை படர்ந் திருந்தது. வீட்டினுள் நுழைந்ததுதான் தாம தம், மாடியிலிருந்து ஒரு கர்ஜனை கேட்டது.

''ராஸ்கல், நீ வளைத்தபடி வளைந்து கொடுத்தேன், இன்னும் என்ன வேண்டும் என்று தொந்தரவு செய்ய வந்திருக்கிறாய்?''

அந்தக் குரலில் அதிர்ந்த ஆஷா ஸ்விச் சைப் போடாமலேயே கையை 'வெடுக்' கென்று இழுத்துக் கொண்டாள். ''என் அப்பாவின் குரல். எதற்காக இப்படிக் கூச் சல்போடுகிறார்?'' அவள்குரல் கிசுகிசுத்தது. பயத்தால் அவள் உடல் வெடவெடத்தது.

''ஏய், கிழவா, சத்தம் போட்டு ஊரைக் கூட்டாதே'' என்று ஒரு குரல் சற்றுப் பதறிய நிலையில் மிகவும் சன்னமாகக் கரகரத்தது.

''எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது'' என்று உதடுகள் நடுங்கக் கூறினாள் ஆஷா. ''சப்தம் போடாமல் என்னோடு வா. ஒரு டார்ச்சை எடுத்துக்கொள்'' என்றேன், அவள் தோள்களை அணைத்தவாறே.

மெதுவாகப் படிமேல் அடி வைத்து நாங்கள் இருவரும் மேலேறினோம். மாடியை நெருங்க நெருங்கப் பேச்சுக் குரல் சமீபித்தது.

திடீரென்று ஆஷாவின் அப்பா, ''ஐயோ!'' என்று அலறினார். அந்த அலறலில் வீடே கிடுகிடுத்தது. ஆஷா வேகமாக ஓடி வந் தாள். நான் ஒரே தாவலில் அந்த அறையை அடைந்து, கதவைக் கால்களால் உதைத்துத் திறந்து..என் டார்ச் வீசிய ஒளி வட்டத்தில்...

ஆஷாவின் அப்பா கட்டிலில் குப்புற விழுந்து கிடந்தார். அவருடைய பிடரியில் மூழ்கி எழுந்திருந்தது ஒரு கத்தி. பீறிட்டுக் கொண்டிருந்த ரத்தம் சட்டை வழியே கால் வாயாக வழிந்து மெத்தையைக் கறைபடுத் தப் பரவிக் கொண்டிருந்தது.

''ஐயோ அப்பா!'' என்று அலறிய ஆஷா அப்படியே என் மீது மயங்கிச் சாய்ந்தாள். அவள் சாய்ந்த வேகத்தில் என் கையிலிருந்த டார்ச் தூரச் சென்று விழுந்தது. என் கண்கள் திடீரென்று அவனைக் கவனித்தன.

வானத்தில் மெல்லப் பரவியிருந்த நிலவின் ஒளியில் 'ஜன்னல் வழியே ஒருவன் அவசரம் அவசரமாக வெளியேற முனைந்து கொண் டிருந்தது தெரிந்தது. ஒரே தாவலில் ஜன் னலை அடைந்த நான் அவனைப் பிடித்து உள்ளே எறிந்தேன். என் திடீர்த் தாக்குதலை எதிர்பார்க்காத அவன் தரையில் மடங்கி விழுந்தான். தரையில் கிடந்த டார்ச்சைச் சட்டென்று எடுத்து வெளியே எறிந்தான்

அவன். இருந்த சிறிதளவு வெளிச்சமும் பறந்து விட அறையில் இருள் சூழ்ந்தது.

சட்டென்று அவன் மேல் பாய்ந்தேன் நான். இருவரும் சில நிமிடங்கள் தரையில் புரண்டோம். திடீரென்று என் கழுத்தில் ஓங்கி ஒரு வெட்டு. நிலைகுலைந்த நான் அவன் சட்டையை இறுகப் பிடித்தேன். என்னை உதறி விட்டு எழுந்தான் அவன். அந்த வேகத்தில் அவனுடைய சட்டைத் துணி சர்ரென்று கிழிந்து என் கையோடு வந்தது. அம்பு போல் சீறிப் புறப்பட்ட அவன் ஆஷாவைத் தாண்டி மாடிப் படிகளில் வேகமாக இறங்கி மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளம்பிக் காம்பவுண்டைத் தாண்டிய போதுதான் என்னால் எழுந்திருக்கவே முடிந்தது.

இருட்டில் தடுமாறி விளக்கைப் போட்டேன். 'கார்த்திக்'கிற்கு மூச்சு இருக்கிறதா என்று பார்த்தேன். இல்லை. இடது கையில் கிழிந்து வந்த அந்தச் சட்டைத் துணியை அப்படியே பாண்ட் பைக்குள் திணித்துவிட்டு டெலிபோனில் நாறைச் சுழற்றினேன்.

ஆறு முறை கடிகாரத்திலிருந்து வெளியே எட்டிப் பார்த்த குருவி இசைத்த 'குக்' 'குக்' என்ற ஒலி நிசப்தத்தைக் கிழித்தது. சோபாவில் அப்படியே துவண்டு படுத்திருந்த ஆஷா என்னை நிமிர்ந்து பார்த்தாள். அழுது அழுது வீங்கியிருந்த கன்னத்தில் கண்ணீரின் ஈரம் இன்னும் காயவில்லை.

''ஆஷா! நான் கேட்பதற்குச் சரியாகப் பதில் சொல்ல வேண்டும். உன் அப்பாவுக்கு யாரேனும் எதிரிகள் உண்டா?'' என்றேன்.


ஆஷா நிமிர்ந்து உட்கார்ந்தாள். ''போலீஸார் தொண்ணூற்றென்பதுமுறை கேட்டாகி விட்டது. நீ கேட்பது நூறாவது முறை. பதில்; கிடையாது, கிடையாது. எனக்குத் தெரிந்த வரை என் அப்பாவுக்கு எதிரிகள் யாரும் கிடையாது!''

போலீஸ் என்றதும் எனக்கு முந்தைய இரவு போலீசார் செய்த அமர்க்களம் நினைவு வந்தது. என்னை எப்படிப் பிழிந்து விட்டார்கள்! 'நீ யார்? ஏன் இங்கு வந்தாய், உனக்கும் கார்த்திக்குக்கும் என்ன தொடர்பு, கொலை நடந்த போது எங்கிருந்தாய்? அறையில் ஏதேனும் தடயங்களைக் கலைத்து விட்டாயா?' இன்னும் என்னென்னவோ ஆயிரம் கேள்விகள். அவர்கள் வேலையை முடித்துக் கொண்டு உடலை எடுத்துக் கொண்டு போன போது மணி பதினொன்றைத் தாண்டி விட்டிருந்தது. 'நான் எங்கேயும் ஓடிப்போய் விட மாட்டேன்' என்று நூறு முறை சத்தியம் செய்த பின்னர் தான் இன்ஸ்பெக்டர் வெளியேறினார்.

திடீரென்று நினைவு வந்தது எனக்கு. போலீஸிடம் ஒரு முக்கியமான தடயத்தை ஒப்படைக்க மறந்து விட்டேனே. என்னுடன் சண்டை போட்டவனுடைய சட்டைத் துணி கிழிந்து என் கையோடு வந்ததே, அதை... அதை எங்கே வைத்தேன்? ஆங். இதோ பாண்ட் பையிலிருக்கிறது. அதை வெளியே எடுத்தேன். துணியுடன் சேர்ந்து ஏதோ சரசரத்தது. பிரித்துப் பார்த்தால் ஒரு காகிதம். என் கையோடு கிழிந்தது சட்டையின் பை போலும். அதனுடன் ஒட்டிக்



இப்போதே இருபது!



ஜெர்மனியின் ஜனத்தொகையில் பாதிப் பேருக்கு மேல் அதிக எடை உள்ளவர்களாக இருக்கிறார்கள். எடை குறைக்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடையே அதிகரித்து வருகிறது. இதற்கு அனுகூலமாக லுஃப்தான்ஸா விமானத்தில் பயணம் செய்வோருக்கு ஒலிபெருக்கிக் கருவி மூலம் விமான உபசாரிணி நன்கு தேகப்பயிற்சி செய்யக் கற்றுத் தருகிறாள்! தேசமெங்கும் தேகப்பயிற்சி கூடங்கள் முளைத்து வருகின்றன. பூங்காவனம் கடற்கரை என்று எங்கே போனாலும் சரி, ஓர் அறிவிப்புப் பலகை கண்ணுக்குத் தட்டுப்படாமல் போகாது:

"ஆரோக்கியமாக வாழுங்கள். இப்போதே இருபது தண்டால் எடுங்கள்!" - ஜெர்மன்இண்டர்நேஷனல்

கொண்டு வந்து விட்டது இந்தக் காகிதம். அது என்னவென்று பார்த்தேன். அது ஒரு நன்கொடை ரசீது.

"நண்பர்கள் கால்பந்து குழு, திரு கேசவன் என்பவரிடமிருந்து நன்கொடையாக ரூபாய் ஐந்து மிக்க நன்றியுடன் வரப்பெற்றோம்" என்று ஆங்கிலத்தில் அச்சிடப்பட்டிருந்தது. கீழே அந்தக் குழுவின் முழு விலாசமும் கொடுக்கப்பட்டிருந்தது.

துள்ளி எழுந்தேன் நான்.

"வாருங்கள் சார்" என்று என்னை வரவேற்றான் அந்த இளைஞன். 'நண்பர்கள் கால்பந்துக் குழு' என்று பொறிக்கப்பட்ட பாட்ஜ் ஒன்று அவன் சட்டையில் நெஞ்சருகே பளபளத்தது.

"இதோ இந்த ரசீது யாருக்குக் கொடுக்கப்பட்டது — அவருடைய விலாசம் என்ன சொல்ல முடியுமா?" என்று கேட்டேன்.

"ஒரு நிமிஷம்" என்றவன் ரசீதை வாங்கிப் பார்த்தான். "ரசீது எண் 877. அப்படியென்றால் மணிதான் விற்றிருக்க வேண்டும். 800-லிருந்து 900 வரை அவன்தான் விற்றான். அவனுக்கு ஒருவேளை தெரிந்திருக்கலாம்" என்றான்.

"மணியின் விலாசம்..." என்றேன்.

"இதோ" என்று மணியின் விலாசத்தை ஒரு காகிதத்தில் எழுதி நீட்டினான்.

ஸ்கூட்டர் மந்தைவெளியை அடைந்து மணியின் அறையைக் கண்டுபிடித்தபோது கடிகாரம் மணி பத்து என்று பறைசாற்றியது.

கதவை நான் தட்டியதும், ஓர் இளைஞன் வந்து திறந்தான். அவனுடைய தலை வாரப்படாமல் வைக்கோல் போல் சிதறிக் கிடந்தது. உடலில் ஓடும் அத்தனை ரத்தமும் கண்களில் குடியேறி விட்டாற் போன்ற சிவப்பு. கசங்கிய உடை.

"மிஸ்டர் மணி என்பது...."

"நான்தான். உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றான் கரகரத்த குரலில்.

"கொஞ்சம் உள்ளே வரலாமா? உங்களுடன் ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும்."

"மன்னிக்கணும்! எனக்கு உடல் நலம் சரியில்லை. தொந்தரவு செய்யாதீர்கள்!"

"தொந்தரவுக்கு மன்னித்துக் கொள்ளுங்கள். இதை யாருக்கு விற்றீர்கள்? அவருடைய விலாசம் என்ன?" என்றேன்.

"இது எப்படி உங்களுக்குக் கிடைத்தது?" என்றான் வியப்போடு.

"அந்த விவரம் இப்பொழுது முக்கியம் இல்லை. அந்தக் கேசவனைப் பற்றிய தகவல்கள் தான் எனக்குத் தேவை. எனக்கு மட்டுமல்ல, போலீஸுக்கும்."

போலீஸ் என்றதும் அவன் முகம் கலவரம் அடைந்தது. "போலீஸா? போலீஸ் விவகாரத்திலெல்லாம் என்னை இழுக்காதீர்கள்!"

"போலீஸுக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்காது. தைரியமாகச் சொல்லுங்கள்."

"ஸாரி சார்! கேசவனுடைய விலாசம் எனக்கு உண்மையிலேயே தெரியாது. நான் இந்தச் சீட்டை விற்றதே ஒரு சின்னக் கதை. சென்ற செவ்வாய்க் கிழமை அடையாற்றில் ஓர் இடத்துக்குச் சென்று விட்டு பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தேன். வெகு நேரம் ஆகியும் பஸ் ஒன்று கூட வரவில்லை. திடீரென்று ஒரு மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. அதில் அமர்ந்திருந்தவர், 'மந்தைவெளிக்கென்றால் ஏறிக் கொள்ளுங்கள், நான் அங்கேதான் போகிறேன்' என்றார். நான் ஏறிக் கொண்டேன். வழியில் என்னைப் பற்றி மெதுவாக விசாரித்தார். 'நண்பர்கள் கால்பந்து குழு'வின் அங்கத்தினன் என்றும், நன்கொடைச் சீட்டு ஒன்றை விற்பதற்காக அடையாறு வந்ததாகவும் கூறினேன். 'அதற்காகவா இந்தக் கொளுத்தும் வெய்யிலில் அலைகிறாய்? எனக்கு வேண்டுமானால் ஒரு சீட்டுக் கொடு. வாங்கிக் கொள்ளுகிறேன்' என்றார் பெருந்தன்மையாக. அவருக்குக் கொடுத்த சீட்டுதான் இது. பெயரைச் சொன்னாரே தவிர விலாசத்தைச் சொல்லவில்லை" என்றான் மணி.

ஊதிக் கொண்டே வந்த பலூன் திடீரென்று 'பட்'டென்று வெடித்து விட்டாற் போன்ற ஏமாற்றம் எனக்கு.

அந்த ரசீதை வாங்கி மீண்டும் பத்திரப்படுத்திக் கொண்டேன். "அந்த மோட்டார் சைக்கிளின் நம்பராவது தெரியுமா?"

"தெரியாது சார். ஒருவேளை பின்னால் நினைவுக்கு வந்தால் உங்களுக்கு போன் செய்கிறேன். நம்பரைக் கொடுத்து விட்டுச் செல்லுங்கள்" என்றான்.

என் டெலிபோன் நம்பரைச் சொல்லி விட்டு வெளியேறினேன்.

என்னை வரவேற்க ஆஷா வாசலிலேயே காத்திருந்தாள். அவள் முகத்தில் கலவரம்.

"ஜவஹர்! நல்ல வேளை வந்து சேர்ந்தாய். யாரோ ஒருத்தன் உள்ளே வந்து தகராறு செய்கிறான். அவனுக்குத் தெரியாமல் போலீஸுக்கு போன் செய்யத்தான் கிளம்பிக் கொண்டிருக்கிறேன்" என்று பரபரப்புடன் சொன்னாள். 'இதென்னடா புதுக் குழப்பம்' என்று எண்ணமிட்டவாறே ஆஷாவைத் தொடர்ந்தேன். நாற்காலி ஒன்றில் ஓர் இளைஞன், பதினேழு அல்லது பதினெட்டு வயதிருக்கும், உட்கார்ந்திருந்தான். 'சரக்' 'சரக்' என்ற எங்களுடைய காலடி ஓசை கேட்டு அவன் நிமிர்ந்தான். அவனுடைய கண்கள் வற்றிய குளம்போல் ஜீவனின்றிக் கிடந்தன.

"யார் நீ?" என்றேன் அதட்டலாக.



ஒரே பரிபூரண ஆரோக்கிய பானம்...
சுவைமிகு
சாக்கலேட் மணத்துடன்!
நீங்கள்
ஆரோக்கியமுடனும்
சக்தியுடனும் விளங்கத்
தேவையான
இந்த 23 அத்தியாவசிய
''ஊட்டச் சத்துக்கள்''
அனைத்தும் நிறைந்த ஒரே பானம்
காம்ப்ளான்®
மட்டுமே.
புரதம்
கார்போஹைடிரேட்
கால்ஷியம்
லிப்பிடுகள்
பாஸ்பரஸ்
சோடியம்
குளோரைடு
(cl வடிவில்)
பொட்டாஷியம்
இரும்புச் சத்து
அயோடின்
வைட்டமின் 'ஏ'
வைட்டமின் பி$_1$
ரிபோஃப்ளேவின்
நிகோடினமைடு
கோலின்
கால்ஷியம்
பென்டோதெனேட்
பைரிடாக்ஸின் (பி$_6$)
வைட்டமின் பி$_{12}$
ஃபாலிக் அமிலம்
வைட்டமின் ஸி
வைட்டமின் டி
வைட்டமின் ஈ
வைட்டமின் கே
''ரவி சாப்பிட மிகவும் படுத்துவான். நல்ல வேளை, சாக்கலேட் சுவை நிறைந்த காம்ப்ளான் அவனுக்கு மிகவும் பிடிக்கிறது. அவனுக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் அனைத்தையும் அது தருகிறது'' என்கிறார் ரவியின் அன்னை.
காம்ப்ளானில் உள்ள 23 அத்தியாவசிய ஊட்டச் சத்துக்கள் தரும் 'பரிபூரண' போஷாக்கை வேறு எந்த ஆரோக்கிய பானமும் தருவதில்லை. எனவே அவனுக்கு எத்தகைய போஷாக்குப் பற்றாக்குறை யிருந்தாலும், காம்ப்ளான் அவனை ஆரோக்கியமுடன் வைத்திருக்கும்.
ஏலக்காய்-கேசரி, மற்றும் சாதாரண காம்ப்ளான் கூடக் கிடைக்கிறது.
Glaxo
Complan®
THE COMPLETE PLANNED FOOD
CARDAMOM-SAFFRON FLAVOUR
காம்ப்ளான்®
வேறு எந்த ஆரோக்கிய பானமும் பரிபூரணமானதல்ல.
உலகெங்கும் உபயோகிக்கப்படுவது. க்ளாக்ஸோ ஆராய்ச்சியால் உருவானது.
CMGC 20-203 TM

அவன் அலட்சியமாக நிமிர்ந்தான். ''நான் யாரென்பது பிறகு பார்க்கலாம். முதலில் அதே கேள்வியை நான் கேட்கிறேன்; நீங்கள் யார்?''

''நான் யாரா? நான்... நான் ஆஷாவை-இந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவன். இது ஆஷாவின் வீடு. இங்கு வர எனக்கு உரிமையிருக்கிறது. உனக்கு என்ன உரிமை இருக்கிறது?''

''நான் 'கார்த்திக்'கின் மகன். சொந்த மகன். உங்களை விட நூறு மடங்கு உரிமை எனக்கு இருக்கிறது.''

''இதையே தான் என்னிடமும் உளறினான்'' என்றாள் ஆஷா.

''பதினெட்டு வருடங்களுக்கு முன்பு சேலத்துக்குக் கார்த்திக் வந்திருந்தார். அங்கே மல்லிகா என்ற இளம் பெண்ணைச் சந்தித்தார். பிறகு வழக்கமான கதை. கார்த்திக்குக்கு மல்லிகா வளைந்து கொடுத்ததில் விளைந்தவன் நான். என் அன்னைக்குக் கார்த்திக் அன்புடன் பரிசளித்த மோதிரம் இதோ.''

''கே'' என்ற எழுத்து பொறித்த அந்தத் தங்க மோதிரத்தை வாங்கிப் பார்த்தேன். நான் பேச வாயெடுத்ததும் அவன் இடைமறித்தான். ''நான் முடித்து விடுகிறேன். பிறகு பேசுங்கள். என் அன்னை ஆறு மாதங்களுக்கு முன் திடீரென்று இறந்து விட்டாள். இறப்பதற்கு முன்னால்தான் நான் கார்த்திக்கின் மகன் என்பதைச் சொன்னாள். நான் 'நியாயம் கேட்கிறேன்' என்று சீறிப் புறப்பட்டபோது அவள்தான் என்னை அடக்கினாள். 'அவருக்குக் கொள்ளி போடுவதைத் தவிர வேறு எந்த உரிமையையும் நீ எதிர்பார்க்கக் கூடாது. என் மீது ஆணை' என்று கூறி என் வாய்க்குப் பூட்டுப் போட்டாள். அன்றிலிருந்தே நான் நடைப் பிணமானேன். இன்று காலை பேப்பரில் கார்த்திக் கொலையுண்ட செய்தியைக் கண்டேன். என் அன்னையின் இறுதி விருப்பத்தை நிறைவேற்ற—என் தந்தைக்குக் கொள்ளி போட — வந்திருக்கிறேன். வேறு எந்தவித உரிமையும் எனக்கு வேண்டாம்!'' அவன் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது.

''நீ சொல்வது எத்தனை தூரம் உண்மை என்று எனக்கு எப்படித் தெரியும்?''

''அதற்கும் வழியிருக்கிறது. வக்கீல் சிவத்தை உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டான் அவன்.

''எனக்குத் தெரியும்'' என்றாள் ஆஷா. ''அப்பாவின் ஆத்ம நண்பர். பெங்களூரில் இருக்கிறார். அவ்வப்பொழுது சென்னை வருவார். அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''


''கார்த்திக், என் அன்னையுடன் நடத்திய குடித்தனம் பற்றிச் சிவத்திடம் சொல்லியிருக்கிறார். இந்த விஷயம் மட்டுமல்ல. வேறு எந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டாலும் சிவம் பதில் சொல்வார்.''

''சிவமே இன்று மாலை வருகிறார். தந்தி வந்திருக்கிறது'' என்றாள் ஆஷா.

''அதுவரை பொறுத்துத்தான் ஆக வேண்டும். உன் பெயர் என்ன?'' என்றேன்.

''பார்த்திபன்'' என்றான் அவன்.

குடையும் கல்யாணமும்



மத்திய பிரதேசத்தில் உள்ள ஆதிவாசிப் பெண்மணிகள் இசைக்கேற்ப நடனமாடுவார்கள். ஆடவர்கள் குடையைப் பிடித்துக் கொண்டு நின்று பார்த்து ரசிப்பார்கள். குடை பிடித்துள்ள ஓர் ஆடவர் அருகில் ஆதிவாசிப் பெண் ஒருத்தி வந்து நின்றுகொண்டு விட்டால், அவர் பாதுகாப்பை அந்தப் பெண் நாடிப் பெற்றுவிட்டாள் என்று அர்த்தம். தன் குடை நிழலில் வந்து நின்ற ஆதிவாசிப் பெண்ணை அந்த ஆதிவாசி ஆடவர் பிறகு மணம் புரிந்து கொண்டு வாழ்க்கை நடத்தத் தொடங்குவார்!

பி. எஸ். எம்.

''பார்த்திபன், நீ ஆஷாவுக்குத் துணையாக இரு. எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்றேன்.

''எங்கே கிளம்பி விட்டாய்?'' என்றாள் ஆஷா.

''கேசவன் என்பவனுக்கும் எனக்கும் ஒரு கணக்கு தீர்த்துக்கொள்ள வேண்டிய பாக்கி இருக்கிறது. அதுவரை எனக்கு ஓய்வில்லை.''

சுற்றி அலைந்து திரிந்து பலனின்றித் திரும்பியபோது ஆஷா வாசலிலேயே நின்றிருந்தாள். ''ஜவஹர்! உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறோம். சிவம் வந்து விட்டார்'' என்றாள்.

ஓடாத குறையாக உள்ளே விரைந்தேன். பார்த்திபனைக் கூர்மையான பார்வையால் துளைத்துக் கொண்டு அமர்ந்திருந்தார் சிவம். சம்பிரதாயமான அறிமுகங்கள் முடிந்தன. விரைவிலேயே விஷயத்துக்கு வந்தோம்.

''இந்தப் பையன் சொல்வது அத்தனையும் உண்மைதான். கார்த்திக் மல்லிகா என்ற பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்ததும், அவர்களுக்கு ஒரு மகன் பிறந்ததும் எனக்குத் தெரியும். ஆனால் அந்த மகன் இவன் இல்லை. ஏனென்றால் கார்த்திக் தன் மகனைச் சென்ற மாதம் என்னிடம் அழைத்து வந்திருந்தான். அவன் இவன் இல்லை'' என்றார் சிவம்.

எங்கள் கண்களிலும் அதிர்ச்சி. ''கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்'' என்றேன்.

''சொல்கிறேன். ஐந்து மாதங்களுக்கு முன்பு திடீரென்று ஒருவன் கார்த்திக்கைச் சந்தித்து இந்த மோதிரத்தைக் காண்பித்தான். நான்தான் உங்கள் மகன் என்றான். கார்த்திக் நம்பினான். இளமையில் செய்து விட்ட தவறுகளுக்கு வருந்தினான். ஆனால் அதே சமயம் தன் பழைய அந்தரங்கங்கள் வெளியுலகுக்குத் தெரிய நேர்ந்தால் சமூகத்தில் கௌரவம் குறைந்து விடும் என்று பயந்தான். மகன் கேட்ட தொகையைக் கொடுத்து அனுப்பினான். இது மீண்டும் மீண்டும் நேர்ந்தது. இப்படி நிரந்தரமில்லாமல் அவ்வப்பொழுது பணம் பெறுவதற்குப் பதிலாகச் சாசுவதமாகச் சொத்தில் ஒரு பகுதியைத் தனக்கு எழுதி வைத்து விடுமாறு அந்த மகன் நெருக்கினான். கார்த்திக் என்னிடம் யோசனை கேட்டான். 'உன் மகனை அழைத்து வா. அவனுக்கு எதிரிலேயே ஒரு போலி உயிலைத் தயாரித்து அவனைத் திருப்தி படுத்தலாம்'



திண்டுக்கல்லில் 'செண்ட்ரல் தியேட்டரில்' சினிமா பார்க்கச் சென்றிருந்தோம். 1-96 காசுகள் கொடுத்து டிக்கட் வாங்கினோம். சில்லறை நான்கு காசுகள் தருவதற்குப் பதில் மூன்று மிட்டாய்கள் கைகளில் வந்து விழுந்தன. ஏன் இப்படி? சில்லறை இல்லாத குறையைத் தீர்க்கச் சமயோசிதமாக மிட்டாய்களைத் தந்து இனிப்பாக நம்மை தியேட்டருக்குள் அனுப்புகிறார்கள்!

-கவிலா

என்று சொன்னேன். அதன்படி அவன் சென்ற மாதம் தன் மகனை அழைத்து வந்தான்.''

கதை வேறு பாதையில் திரும்புவதைக் கண்டு வியந்தேன் நான். ''அப்படியென்றால் கார்த்திக் அழைத்து வந்தது இவனில்லையா?''

''இல்லை'' என்றான் பார்த்திபன். ''இங்கு வேறு ஏதோ குழப்பம் நடந்திருக்கிறது.''

சட்டென்று என் மூளையில் ஒரு பொறி தட்டியது. ''நீங்கள் உயிலை எழுதும்போது கார்த்திக்கின் மகன் பெயரைக் கேசவன் என்று தானே எழுதினீர்கள்?'' என்றேன் சிவத்திடம்.

''இல்லையே'' என்றார் சிவம். ''அவன் பெயர் மணி. 'நண்பர்கள் கால்பந்துக் குழு'வில் அஸிஸ்டெண்ட் மானேஜராக இருப்பதாகச் சொன்னான்.''

''மணியா?'' என்று அலறினான் பார்த்திபன்.

''மணியை உனக்குத் தெரியுமா?''

''மணியையா? நான் உடலென்றால் அவன் உயிர் என்று சொல்லுமளவுக்கு நாங்கள் உயிர்த் தோழர்கள்'' என்றான் பார்த்திபன். சிவம் ஒன்றும் புரியாமல் விழித்தார்.

என் மூளை சுறுசுறுப்பாக இயங்கியது.

போலீஸ் ஜீப் மணியின் அறையை அடைந்தபோது இரவு எட்டு மணி. ஒரு தடவை தட்டியதுமே கதவைத் திறந்தான் மணி. என்னுடன் போலீஸாரும் இரண்டு வந்திருப்பதைப் பார்த்ததும் அவன் கண்கள் அச்சத்தால் விரிந்தன. சட்டென்று கதவை மூடிவிட முயன்றான். கதவிடுக்கில் தம் ஷூக் காலைக் கொடுத்து உள்ளே நுழைந்தார் இன்ஸ்பெக்டர். அடிபட்ட புலியெனச் சீறினான் மணி. ஒரே நிமிடத்தில் அவனை நெருக்கிப் பிடித்தார்கள் இரு கான்ஸ்டபிள்கள்.

துவண்டு அமர்ந்தான் மணி. பையிலிருந்து நூறு ரூபாய் நோட்டுக்கள் சிலவற்றை உருவி எடுத்து டார் டாராகக் கிழித்துத் தரையில் எறிந்தான். பிறகு விசித்து விசித்து அழலானான். ''மணி! என்ன ஆயிற்று உனக்கு?'' என்று பார்த்திபன் அவனை நெருங்கி அரவணைத்தான்.

மணி மெதுவாக நிமிர்ந்து பார்த்தான். அவன் பேச ஆரம்பித்த போது குரல் உடைந்திருந்தது. ''பார்த்திபா! என்னை மன்னித்து விடு. இந்தப் பணம் தந்த மோகத்திலே நான் உன் தந்தையையே கொன்று விட்டேன். உன் அன்னை அன்று கூறியவற்றையெல்லாம் நீ என்னிடம் சொன்னதும் என் மூளை குறுக்கு வழியில் பாய்ந்தது. உன்னிடமிருந்து இரவல் வாங்கிச் சென்ற மோதிரத்தைக் காண்பித்துக் கார்த்திக்கிடம் அவருடைய மகனாக அறிமுகப்படுத்திக் கொண்டேன். பணம் கேட்டேன். கொடுத்தார். அவருடைய சொத்தில் நிரந்தரமான பங்கு கேட்டேன். என் பண வெறிக்குப் பணியாவிட்டால் அவருடைய அந்தரங்கங்கள் ஊராருக்குத் தெரிய வரும் என்று அச்சுறுத்தினேன். பணிந்தார். உடனே உயிலும் எழுதி வைத்தார், அதுவும் என் கண்ணெதிரிலேயே! மகன் என்று குறிப்பிடாமல் பொதுவாகப் பெயரைக் குறிப்பிட்டு எழுதினார். பண வெறி மீண்டும் தலை தூக்கியது. உயில்படி சொத்தை அடையக் கொலைகாரனானேன்.''

''உயிலில் உங்கள் பெயருக்குச் சொத்தில் பெரும் பகுதி வருவதைப் பார்த்ததுமே போலீஸார் உங்களைச் சந்திப்பார்கள் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?'' என்று இன்ஸ்பெக்டர் குறுக்கிட்டார்.

'படார், படார்' என்று தலையில் அடித்துக் கொண்டான் மணி. ''பண வெறியில் என் புத்தி பேதலித்து விட்டது. பின் விளைவுகளைப் பற்றிச் சிறிதும் யோசிக்க நேரமில்லாமல் போய்விட்டது. பார்த்திபா! என்னை மன்னித்துவிடு!''

''அப்பொழுது ஆஷாவின் வீட்டில் என்னைத் தாக்கி விட்டு ஓடியது நீதானா? உனக்கு ஏது மோட்டார் சைக்கிள்?'' என்றேன்.

''என் நண்பனிடமிருந்து இரவல் வாங்கிய மோட்டார் சைக்கிள் அது. அவன் பெயருக்குத்தான் நன்கொடை ரசீது எழுதிப் பையில் வைத்திருந்தேன். மறுநாள் அவனிடம் கொடுக்கு முன்னரே அந்தச் சீட்டு உங்கள் கையில் கிடைத்துவிட்டது. நீங்கள் இன்று காலை என்னை வந்து பார்த்தபோது நான் கதையைச் சற்று குழப்பி விட்டேன்!'' கீழே கிடந்த நூறு ரூபாய்த் துண்டுகளை அவன் கால்களால் எட்டி உதைத்தான்.

போலீஸ் சம்பிரதாயங்கள் முடிந்தன. நாங்கள் ஆஷாவின் வீட்டுக்குத் திரும்பினோம்.

''பார்த்திபனை என்ன செய்வதாக உத்தேசம்?'' என்றேன் ஆஷாவிடம்.

''என் அப்பா செய்யத் தவறிய கடமைக்குப் பிராயச்சித்தமாக நான் நடந்து கொள்ள விரும்புகிறேன். பார்த்திபன் இப்பொழுது எனக்குத் தம்பியாகி விட்டான். அவன் என்னுடனேயே — நம்முடனேயே தங்கட்டும்'' என்றாள் ஆஷா பாசத்தோடு.

''வேண்டாம்'' என்றான் பார்த்திபன். ''என்னுடைய உயிர் நண்பனைக் கொலைகாரனாக்கிவிட்ட இந்தச் சொத்தும், சொந்தமும் எனக்கு வேண்டாம். தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடமைகளை முடித்த கையோடு நான் விலகுகிறேன். உங்கள் இருவருக்கும் என் வாழ்த்துக்கள்.''

பார்த்திபன் எழுந்து தளர்ந்த நடையோடு வாசலை நோக்கி நகர்ந்தான். அவன் கண்களிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்த ஆஷாவின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

ப்ரூ: அதன் சுவையே தனி,
ஸ்ட்ராங்கானதில் அது பாங்கானது



சிறப்பான காபி
விரும்பும் அனைவருக்கும்
ப்ருவின் தனிப்பட்ட சுவை, அதற்கு நாடெங்கும் மகத்தான வரவேற்பு அளித்திருக்கிறது. மேலும் இன்ஸ்டன்ட் காபிகளில் இதற்கு முதன்மையான இடம் அளித்திருக்கிறது. ஒவ்வொரு நாளும் அதன் தனிப்பட்ட சுவையும் ஸ்ட்ராங்கான குணமும் வெகுவேகமாகப் பரவுகிறது. ஒவ்வொரு முறையும் ப்ருவின் சுவையும் மணமும் குணமும் உங்களுக்கு நிறைவையே தரும். இன்றே ப்ரு காபி பருகிப்பாருங்கள்.

தென்னிந்தியாவின் முதன்மையான இன்ஸ்டன்ட் காபி ப்ரூ
வெகுவேகமாக நாடெங்கும் எல்லோரும் விரும்பும் காபியாகி வருகிறது.

OBM-4756A/3 TAM

ஷில்லாங்

எஸ்.வி.எஸ்.



○ காஸி பெண்களின் இரு விதமான அலங்காரம்.

○ வனத்தினிடையே ஒரு வீடு.



கோவை நகரத்துக்குப் போய்விட்டீர்களானால், அங்குள்ள நண்பர்கள், ''ஸார்! ஊட்டிக்குப் போய் வாருங்கள். இவ்வளவு தூரம் வந்து விட்டு ஊட்டிக்குப் போகாமலிருப்பார்களோ?'' என்பார்கள்.

அது போல் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் கூட்டத்தைப் பார்வையிட அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள கோஹாட்டிக்குச் சென்றபோது அங்கே நண்பர்கள், ''ஸார்! ஷில்லாங் பார்க்காமல் திரும்பாதீர்கள்'' என்று வற்புறுத்தினர்கள்.

ஷில்லாங் ஒரு காலத்தில் அஸ்ஸாம் மாநிலத்துக்கே தலைநகராக இருந்திருக்கிறது. இப்போது அஸ்ஸாம் மாகாணத்திலிருந்து பெரும் பகுதியைப் பிரித்து ''மேகாலயா'' என்று ஒரு புது மாநிலத்தை ஏற்படுத்தி அதன் தலைநகரமாக ஷில்லாங்கைச் செய்திருக்கிறார்கள். இதில் கோஹாட்டிவாசிகளுக்கு ஓர் ஏமாற்றம்; தாபம். 'தங்களது அருமையான நகரை இழந்து விட்டோமே' என்று!

'நாட்டின் நலனுக்காக எப்படிப்பட்ட தியாகம் செய்து விட்டோம் பாருங்கள்' என்று மற்ற மாநிலக்காரர்கள் உணர வேண்டும் என்பது கோஹாட்டியில் வசிக்கும் அஸ்ஸாம் மாநில மக்களின் ஆசை. அதனால்தான் நம்மை ஷில்லாங்குக்கு வழி அனுப்பி வைக்கிறார்கள்.

'ஷில்லாங்' கோஹாட்டியிலிருந்து தெற்கே 103 கிலோமீட்டர் தூரத்தில் மலைகளின் மடிப்புக்களில், சுமார் 1500 கிலோமீட்டர் உயரத்தில் இருக்கிறது.

கோஹாட்டியிலிருந்து காரிலோ பஸ்ஸிலோ தான் போக வேண்டும். கோஹாட்டி பஸ் நிலையத்துக்குச் சென்றேன். ஒரு ஜன்னலின் மீது ''ஷில்லாங்'' என்று எழுதியிருந்தது. ஒரு ''க்யூ''வும் நின்றிருந்தது. நானும் நின்றேன். சிறிது நேரத்தில் நான் டிக்கெட் வாங்கும் முறை வந்தது. டிக்கெட் வழங்கும் உத்தியோகஸ்தர், ''அப்பர் கிளாஸா? லோயர் கிளாஸா?'' என்று கேட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. விளக்கத்தைக் கேட்டு க்யூவில் நிற்போ

ரைத் தாமதப்படுத்த விரும்பாமல் சடார் என்று 'அப்பர் கிளாஸே' கொடுங்கள் என்றேன். அவர் ஏதோ எழுதிக் கொண்டு டிக்கெட்டுகள் கிழிக்கத் தொடங்கினார். சற்றுக் கலவரத்துடன் ''மேல் வகுப்புக்கும் கீழ் வகுப்புக்கும் கட்டணத்தில் எவ்வளவு வித்தியாசம்'' என்று கேட்டேன். ''ஒன்றரை ரூபாய்'' என்றார். நல்ல வேளை! அதிக நஷ்டமடையவில்லை என்று மனத்துக்குள் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

பஸ்ஸின் முன் பாதி மேல் வகுப்பென்றும், பின்பாதி கீழ் வகுப்பென்றும் பிரித்துள்ளார்கள். பஸ் ஓடும் போது முன் பாதியில் உட்கார்ந்திருப்பவர்களை அவ்வளவாகத் தூக்கிப் போடாதாம். பின்பாதியிலிருப்பவர்களைத் தூக்கிப் போட்டுக் குலுக்கி எடுத்து விடுமாம்! அதனால் கட்டணமும் குறைவு!

கோஹாட்டியிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தூரம் சமவெளிப் பிரதேசத்தில் பஸ் செல்கிறது. பிறகு மலைப் பகுதிதான்! ஆகா! அதன் எழிலை, இயற்கையின் வனப்பை என்னவென்று சொல்வது. மலைச் சரிவுகளில் எல்லாம் விவசாயம் நடக்கிறது. மலையில் பரந்த படிகள் கட்டினாற் போல் செதுக்கி அப்படிகளில் வயல்கள் அமைத்து விவசாயம் நடத்துகிறார்கள். பார்க்கக் கொடுத்து வைக்க வேண்டும். ஒரு பக்கம் மரங்களும் மூங்கில் புதர்களுமாகக் காட்சி தர, மறுபக்கம் பச்சைப் பசேல் என்ற வயல்களும் நீரோடைகளும் மெய் புளகிக்கச் செய்கின்றன.

தமிழ்நாட்டுப் பெண்கள் கொசுவம் வைத்துக் கட்டிக் கொள்ளும்போது எத்தனை அழகான அடுக்கடுக்கான மடிப்புக்களைக் காண்போமோ, அத்தனை அடுக்குகளும் மடிப்புக்களும் கொண்ட மலைப் பிரதேசம் மேகாலயம். இந்த மாநிலத்தில் எப்போதும் மழை மேகங்கள் முட்டி மோதிக் கொண்டிருப்பதால் இதற்கு மேகாலயம் என்று பெயர் ஏற்பட்டது. நான் மூன்றாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது, இந்தியாவில் அதிகமான மழை பெய்யும் ஊர் எது என்ற கேள்விக்குப் பதிலாக 'சிரபுஞ்சி', 'சிரபுஞ்சி' என்று நெட்டுரு போட்டேன். அந்த ஊர் மேகாலயத்தில்தான் இருக்கிறது. அதுவும் ஷில்லாங்குக்கு வெகு அண்மையில் இருக்கிறது என்று இப்போது தெரிந்து கொண்டேன்.

இந்த மலைப் பிரதேசம் மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ளது, காஸி மலைகள், ஜயந்திய மலைகள், காரோ மலைகள் என்று. இவற்றில் வாழும் மக்கள், காஸி மக்கள் என்றும், ஜெயந்தியா மக்கள் என்றும், காரோ மக்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர். இந்த மலைவாழ் மக்கள் பிரம்மபுத்ரா பாயும் சமவெளிப் பிரதேசங்களுக்கு இறங்கி வந்து அப்பகுதி மக்களோடு பழகியவர்களல்ல. அதேபோல் சமவெளிப் பிரதேச மக்களும் இம் மலைப் பகுதி சகோதரரைப் பற்றிக் கவலை கொண்டதே கிடையாது. பிரிட்டிஷ் அரசாங்கம் மலைவாசிகளை வயப்படுத்த முடியாமல் போகவே, அவர்களைச் சுதந்திரமாகவே வாழ விட்டு வந்தனர். ஷில்லாங்கில் ஒரு காஸி இன மக்கள் தலைவர் ''பிரிட்டிஷார் உங்கள் மைசூர் மகாராஜாவை எப்படி நடத்தினரோ, அப்படி எங்களை நடத்தினர். நாங்கள் யாருக்கும் அடிமைப் பட்டிருக்கவில்லை'' என்றார் பெருமிதத்தோடு.

இவர்களது உயர்ந்த பண்பை ஒரு சரித்திர நிகழ்ச்சி உணர்த்துகிறது. இம்மலை வாழ் மக்களில் ஒரு குழுவின் தலைவராக இருந்த ரூபா சிங் என்பவர் 1856ல் இறந்து விட்டார்.

○ ''ரகசியமாகச் சொல்கிறேன் கேட்டுக்க...'' — காரோ மக்கள்.



பிரிட்டிஷ் அரசாங்கம் ராம்சிங் என்பவனைத் தலைவனாக நியமித்தது. உடனே பன்னிரண்டு குழுக்களில் அடங்கிய அந்தப் பகுதி மக்கள் அத்தனை பேரும் போர்க்கோலம் பூண்டு விட்டனர்! கடும் உள்நாட்டுப் போரே நடந்ததாகக் கூறலாம். கடைசியாக பிரிட்டிஷ் அரசாங்கம் அவர்களைத் தங்களுக்கு இஷ்டமானவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு அனுமதித்து விட்டது. உடனே பன்னிரண்டு இனத்தாரும், யார் நியமனத்தை எதிர்த்துப் போர் தொடுத்தார்களோ, அதே ராம்சிங்கைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆம், மலைவாழ் மக்களுக்கு, ''ராம்சிங்'' என்ற தனி நபர் மேல் கோபமில்லை. அவர்கள் கடைப்பிடித்து வரும் ஜனநாயகத் தேர்தல் முறையைத் தூக்கி எறிந்து விட்டு எதேச்சாதிகார முறையில் நடந்த நியமனத்தைத்தான் எதிர்த்தார்கள்!

காஸி, ஜெயந்தியா, காரோ மக்களின் வாழ்க்கை முறைகளையும் ஆட்சி முறைகளையும் கவனித்தால் அவர்கள் *Tribals* —காட்டு மனிதர்கள் — நாகரிகமற்றவர்கள் என்று வர்ணிப்பது எவ்வளவு அறியாமை என்பது புலப்படும். அவர்கள் தலைவர்களைத் தேர்தல் நடத்தித் தேர்ந்தெடுக்கிறார்கள். யாரும் பிறப்பினால் தலைவராக முடியாது. தலைவருக்கு மந்திரிகள், ஆலோசனை சபை யாவும் உண்டு.

பெண்களுக்கு மிக முக்கியமான இடமுண்டு. பெண்தான் குடும்பத் தலைவி. ஓர் ஆடவன் கல்யாணமாகிற வரைக்கும் தான் பிறந்த வீட்டில் இருக்கலாம். கல்யாணமானவுடன் மனைவியின் வீட்டுக்குப் போய்விட வேண்டியதுதான். சம்பாதிப்பதையெல்லாம் மனைவியினிடம் கொடுத்துவிட வேண்டியதுதான். வீட்டுக்கரசி வைத்ததே நாட்டாண்மை. கேரள நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன் வரை நிலவி வந்த மருமக்கள் தாயமுறை இன்றும் இம்மலைவாழ் மக்களிடை காண்கிறோம். கேரளம் எங்கே இருக்கிறது! மேகாலயம் எங்கே இருக்கிறது! இப்படி பாரதத்தின் தென் மேற்குக் கோடியையும் வட கிழக்குப் பிரதேசத்தையும் பின்னிப் பிணைக்கும் பல ஒற்றுமைகளைக் காணலாம்.

நில உரிமை விஷயத்திலும் இந்தப் பூர்வ குடிமக்கள் மிக முன்னேறியவர்கள். பண்படுத்தி விவசாயம் செய்யும் நிலம், சமுதாயத்தின் பொதுச் சொத்து. யாருக்கும் தனி உரிமை கிடையாது!. நிலத்தில் உழுது காணும் கண்டு முதலில் ஒரு சிறிது தலைவனுக்கு வழங்கிவிட்டு மிருதியை யெல்லாம் பாடுபட்ட குடும்பம் அனுபவிக்கலாம். இப்படித் திருத்திப் பண்படுத்திப் பயிரிட்ட நிலத்தைத் தன்னுடையது என்று உரிமை கொண்டாட முடியாது. இதைக் காட்டிலும் சிறந்த சோஷலிஸம் எங்கே காண முடியும்!

''ஆனால் இப்பொழுதெல்லாம் பிரதமரின் இருபது அம்சத் திட்டத்தின் கீழ் இப்படி விவசாயம் செய்யும் மக்களுக்கு அவரவர் பயிரிடும் நிலங்களை உரிமையாக்கிப் பட்டா வழங்கி வருகிறோம்!'' என்றார், ஷில்லாங்கில் நான் சந்தித்த நிர்வாக அதிகாரி.

எனக்கு உடனே இதிலுள்ள முரண்பாடு தான் தட்டுப்பட்டது. ''நமது அரசாங்கம் ஸோஷலிஸம்தான் லட்சியம் என்று கூறுகிறது. இந்த மலைசாதியினரிடம் லட்சிய சோஷலிஸம் கார்ல்மார்க்ஸையோ என்ஜில்ஸையோ படிக்காமல் நிலவுகிறது. இவர்களை ஏன் தனிஉடைமையுள்ள மிராசுதாரர்களாக்கப் பார்க்கிறீர்கள்?'' என்றேன்.

அதற்குள் அந்த அதிகாரி, ''நீங்கள் சொல்வதெல்லாம் மேலிடத்து விஷயம். கொள்கைகள் சம்பந்தப்பட்டவை. அவற்றைப் பற்றி நான் சர்ச்சை செய்ய இயலாது. இந்தப் பக்கத்து விவசாயிகள் ஏழைகள். அவர்களுக்கு உரம் மற்ற விவசாய சம்பந்தப்பட்ட பொருள்கள் வாங்க அரசாங்கம் பல வித கடன்கள் கொடுக்க வேண்டும். அந்தக் கடன்களை எதன் மீது கொடுப்பது? அதனால் அவர்களுக்கு நிலப்பட்டா வழங்கிச் சொத்துக்குரியவனாக்கிக் கடன் தருகிறோம்!'' என்றார்.

இந்தப் பக்கத்து விவசாய முறை விநோதமானது. இதற்கு ஜூம்மிங் என்கிறார்கள். ஒரு குடியைச் சேர்ந்த தலைவரும், ஆலோசகர்களும், காட்டில் ஒரு பகுதியை அதன் மண்ணின் தன்மையையும் நிறத்தையும் பார்த்துத் தேர்ந்தெடுப்பார்கள். பிறகு அந்தப் பகுதியிலுள்ள மரம் செடிகளையெல்லாம் வெட்டி வீழ்த்துவார்கள். அவை நன்றாகக் காய்ந்த பிறகு எரிப்பார்கள். இப்படி காடு அழிக்கப்பட்ட பிரதேசத்தில், அவ்வினத்தைச் சேர்ந்த அத்தனை பேரும் குடி ஏறி நிலத்தை உழுது பயிர் செய்வார்கள். மூன்று வருஷங்களுக்குப் பிறகு மண்வளம் குன்றி விடும். அவர்களுக்கு எருவிடுதல் முதலியவை தெரியாததால் இன்னோர் இடத்தில் காடு திருத்திப் பயிர் செய்யப் போய் விடுவார்கள். இப்படி ஓரிடத்தில் பயிர் செய்த இடத்துக்கு மீண்டும் வர முன்பெல்லாம் நாற்பதாண்டுகள் பிடித்ததாம். இப்பொழுது பத்தாண்டுகளுக்குள் திரும்பி விடுகிறார்களாம். இதற்குக் காரணம் ஜனத்தொகைப் பெருக்கம்.

இன்று மேகாலய அரசு, அவர்களுக்கு நில உரிமையும் மற்ற விவசாய வசதிகளும், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் முதலியனவும் வழங்கி நல்ல இந்திய பிரஜைகளாக்கி வருகிறது.

இவ்விவரங்களையெல்லாம் அந்த உயர் அதிகாரி என்னிடம் விளக்கிக் கொண்டிருந்த

சங்கீத மும்மூர்த்திகள் திருவிழா-திருவாரூர்



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் 13-1-77 முதல் 15-1-77 வரை திருவாரூரில் முகாம் இட இசைந்துள்ளார்கள். அப்பொழுது மேல வடம்போக்கித் தெருவில் உள்ள ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் மண்டபத்தில் ஸ்ரீ பெரியவாள் முன்னிலையில் மும்மூர்த்திகள் விழா நடைபெறும். சங்கீத வித்வான்கள் அனைவரும் பக்கவாத்தியங்களுடன் விழாவில் பங்கு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பங்குகொள்ளும் வித்வான்கள் பெரியவாள் சன்னதியில் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர், ஸ்ரீ சியாம சாஸ்திரிகள், ஸ்ரீ தியாக பிரும்மம் ஆகியோர் கீர்த்தனைகளில் சில கீர்த்தனைகளாவது பாட வேண்டும் என்பது ஸ்ரீ பெரியவாள் ஆக்ஞை. அவ்விதம் பாடும் வித்வான்களுக்கு ஸ்ரீ பெரியவாள் வெகுமானம் அளித்து ஆசி வழங்குவார்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: காரியதரிசி, கர்நாடக சங்கீத மும்மூர்த்திகள் ஞாபகார்த்த சபை, திருவாரூர் - 610001.

போது, ஆங்கிலோ — இந்திய பாணி உடையில் ஓர் அம்மையார் உள்ளே நுழைந்தார், அதிகாரியிடம் ஏதோ பைல்கள் தருவதற்கு. ''இந்த அம்மையாரும் காஸி இனத்தைச் சேர்ந்தவர்தாம். அந்த இனத்தைப் பற்றி ஏதாகிலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் இந்த அம்மையாரைக் கேட்கலாம்'' என்றார் அதிகாரி.

அவர் பெயர் ஸ்ரீமதி மார்க்கரெட் ரோஸ் மாவ்லாங். பார்க்க முப்பது வயது மதிக்கலாம். அழகும் பொன்னிற மேனியும் கொண்டிருந்த அவர், மேகாலய அரசாங்கத்தில் துணைக் காரியதரிசியாகப் பணியாற்றுகிறார். அவரது கணவர் சாதாரண ஆபீஸ் மேற்பார்வையாளராகப் பணியாற்றுகிறார். இதனால் அவர்களுக்குள் ஒன்றும் மனக் கிலேசங்கள் ஏற்படவில்லை என்பது அவர் கொடுத்த மற்றொரு தகவலிலிருந்து தெரிந்தது: ''நான் ஆறு குழந்தைகளைப் பெற்ற தாயார். அதோடு என் சகோதரி இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு இறந்து விட்டாள். அவர்களையும் பராமரிக்கிறேன்'' என்றார். பெண்ணுக்குக் குடும்பத் தலைமைப் பொறுப்பு வழங்கும் மரபு கொண்டதல்லவா காஸி மக்கள் இனம்!

காஸி இனத்தாரில் கிட்டத்தட்ட 35 அல்லது 40 சதவிகிதத்தினர் கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள். பிரிட்டிஷ் துப்பாக்கி சென்று ஆதிக்கம் செலுத்த முடியாத இடத்தில் கிறிஸ்தவ சமயம் நுழைந்து நின்றிருக்கிறது. அம்மக்களுக்குக் கிறிஸ்தவ மதத்தைச் சார்வதும் கல்வி பயில்வதும் ஒன்றாகவே இருந்திருக்கிறது. மிஷனரிகள் கல்வி மூலமாகக் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பியிருக்கிறார்கள். இதன் விளைவாக கோஹாட்டியில் காண முடியாத ஒரு நல்ல சூழ்நிலை இங்குண்டு. யாருடனும் ஆங்கிலத்தில் பேசினால் நாகரிகமான உயர்ந்த ஆங்கிலத்தில் பதில் கிடைக்கும். மேகாலயத்தின் ஆட்சி மொழி ஆங்கிலம் என்பதையும் நினைவுகொள்ள வேண்டும்.

மேகாலய சட்டசபையின் சபாநாயகரைக் கண்டேன். ''எங்கள் சட்டசபையில் உயர்ந்த நாகரிக ஜனநாயகப் பண்புகளைக் கடைப்பிடிக்கிறோம். ஒரு தடவைகூட 'வாக் அவுட்' நடந்தது கிடையாது'' என்றார். ''எங்கள் எதிர்க்கட்சி, ஆளும் கட்சி நல்லது செய்தால் ஆதரித்தும், பொல்லாது செய்தால் கண்டித்தும் பொறுப்புடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்கிறது'' என்றார். காஸி மக்களின் ரத்தத்தில் ஊறிப் போன ஜனநாயகப் பண்பு, இன்றைய பார்லிமெண்டரி முறையில் பேர் உதவியாக இருக்கிறது.

ஷில்லாங்கைப் பார்க்கையில் ஊட்டி போன்றும் கொடைக்கானல் போன்றும் உணர்ச்சி ஏற்படும். ஆனால் இது ஒரு காலத்தில் ஒரு பெரிய மாநிலத்தின் தலைநகராகவும், இப்பொழுது சிறிய மாநிலத்தின் தலைநகராகவும் இருந்து வருவதால் ஏராளமான பேர்-கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேர் வாழ்கிறார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பல உயர் பதவிகளில் மிகச் சிறிய பணியாற்றி வருகிறார்கள். உள்ளூர் மக்கள் அவர்களை எவ்வளவு தூரம் மதிக்கிறார்கள் என்பதை நேரில் கண்டபோது மெய்சிலிர்த்தது. பாரத நாட்டோடு ஒட்டாதிருந்த இம் மலைவாழ்ப் பெருங்குடி மக்களைப் பாரதநாட்டோடு ஒன்றி இணைய வைக்கும் பணியில் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார். இப்பணிகளில் நம் தமிழ் மக்கள் உயர் பதவிகளிலிருந்து எவ்வளவு உதவியாக இருந்திருக்கிறார்கள் என்பது ஒவ்வொரு தமிழனையும் பெருமை கொள்ளச் செய்யும்.

அறுவடை விழாவை நமது தமிழ் நாட்டுத் தைப் பொங்கல் போல் பெரு விழாவாக நடத்துகிறார்கள்.

குளிர்ப் பிரதேசமானதால் எந்தநேரமும் கனமான உடையணிந்திருக்க வேண்டும். இம் மலைவாழ் பெண்கள் வண்ண வண்ண உடைகளில் எப்பொழுதும் புது மலர்கள் போல் காணப்படுகின்றனர்.

ஷில்லாங்கில் ஒரு சர்வ கலாசாலையுள்ளது. அதன் வைஸ் சான்ஸலர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி பிரின்ஸிபாலாக இருந்த திரு சந்திரன் தேவநேசன்.



பொங்கலுக்கு பட்டு,
பருத்தி ரெடிமேட் துணி
வகைகள் விதவிதமாய்
உள்ளன. நாட்டின் பல
பாகங்களிலிருந்து
தருவிக்கப்பட்டவை.
10%
சிறப்புத் தள்ளுபடி
டிசம்பர் 31 முதல்
ஜனவரி 14 வரை
பொங்கல் பெண் அழகி!
உடனே வாருங்கள்.
ஹேண்ட்லூம் ஹவுஸ்
9, ரத்தன் பஜார்
சென்னை-600 003
• ஞாயிறு கடை உண்டு.
• சென்னை பொங்கல் சுற்றுலாக் காட்சியில் உள்ள எங்கள் பெவிலியனுக்கு விஜயம் செய்யுங்கள்.
ADWAVE/HH/512

பார்த்திபன் கனவு

அத்தியாயம் 25

சமய சஞ்சீவி

தன்னைப் பின்தொடர்ந்து இரண்டு பேர் வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியாத பொன்னன், அரண்மனைத் தோட்டத்துக்குள் உற்சாகத்துடன் போய்க் கொண்டிருந்தான். இடையிடையே அவன், "வள்ளி! அதோ அந்த மாமரத்தடியிலேதான் மகாராஜாவும் மகாராணியும் சாயங்கால வேளையில் உட்காருவது வழக்கம். அதோ பார்த்தாயா? அந்த மூலையில் ஒரு தாமரைக் குளம் இருக்கிறது. அதில்தான் முதல் முதலில் இளவரசர் நீந்தக் கற்றுக் கொண்டார்!" என்று இவ்விதம் சொல்லிக் கொண்டே போனான். வள்ளி ஒவ்வொரு தடவையும், "கொஞ்சம் மெதுவாகப் பேசு!" என்று எச்சரித்துக் கொண்டு வந்தாள்.

இவர்களுடைய பேச்சுக் குரலைக் கேட்டு மரங்களின் மீது உறங்கிக் கொண்டிருந்த பட்சிகள் சில விழித்துச் சிறகுகளை அடித்துக் கொண்டன. அப்போது பொன்னன், கையைத் தட்டி ஓசைப்படுத்தியதுடன், 'உஷ்!' என்று சத்தமிட்டான்.

"ஆமாம்; உன்னுடைய தைரியமெல்லாம் பாதி ராத்திரியில் தூங்குகிற பட்சிகளிடம்தான். எதிரியின் கையில் கத்தியைக் கண்டால் உடனே விழுந்தடித்து ஓடி வந்து விடுவாய்!" என்று வள்ளி சொன்ன பிறகு பொன்னன் சற்று வாயை மூடினான்.

அரண்மனையின் பின்புறத்தை அடைந்ததும், பொன்னன், "வள்ளி! உள்ளே போய் எல்லாம் பார்க்கலாமா? அல்லது வந்த காரியத்தைப் பார்த்துக் கொண்டு திரும்புவோமா?" என்றான்.

"விளக்கில் எண்ணெய்கூட ஆகிவிட்டது. சீக்கிரம் வந்த காரியத்தைப் பார்க்கலாம். கோயில் எந்தப் பக்கம் இருக்கிறது?" என்று வள்ளி கேட்டாள்.

"அப்படியானால் இங்கே வா!" என்று பொன்னன் கிழக்குப் பக்கமாக அவளை அழைத்துச் சென்றான்.


பார்த்திப மகாராஜாவின் காலத்தில் ஒரு முறை நாம் அரண்மனைக் கோயிலைப் பார்த்திருக்கிறோம். அந்த அழகிய சிறு கோயிலானது அரண்மனையைச் சேர்ந்தாற்போல் கீழ்ப் பாகத்தில் அமைந்திருந்தது. அதற்குள் பிரவேசிப்பதற்கு மூன்று வழிகள் இருந்தன. அரண்மனைக்குள்ளேயிருந்து நேராகக் கோயிலுக்குள் வரலாம். இதுதான் பிரதான வாசல். பின்புறத்துத் தோட்டத்திலிருந்து பிரவேசிப்பதற்கு ஒரு வாசல் இருந்தது. அபிஷேகத்துக்குக் காவேரி நீரும், அலங்காரத்துக்குப் புஷ்பமும் கொண்டு வருவதற்காக இந்த வாசல் ஏற்பட்டது. இவற்றைத் தவிர அர்ச்சகர் வெளியில் இருந்து நேரே வருவதற்காகக் கிழக்கு மதிலில் சிறு வாசல் இருந்தது. இவற்றுள் தோட்டத்திலிருந்துபிரவேசிப்பதற்குரிய வாசலைப் பொன்னன் அடைந்து, கதவின் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றான். அவனுடன் வள்ளியும் போனாள். மங்கிய அகல் விளக்கின் வெளிச்சத்தில் அங்கிருந்த விக்கிரகங்களின் காட்சியைக் கண்டு இருவரும் சிறிது நேரம் பிரமித்து நின்றார்கள். நெடுங் காலமாகப் பூஜை முதலியவை ஒன்றும் இல்லாமல் இருந்தும், அந்தத் தெய்விகச் சிலைகளின் ஜீவ களை சிறிதும் குன்றவில்லை.

முதலில் திகைப்பு நீங்கியவனான பொன்னன், "வள்ளி! நிற்க நேரமில்லை" என்று சொல்லி, மகாவிஷ்ணு விக்கிரகத்தின் சமீபம் சென்று, விஷ்ணு பாதத்தின் அடியிலிருந்த அழகிய வேலைப்பாடுகளுடன்கூடிய நீளவாட்டான மரப் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

"சோழர் குலத்தின் விலையில்லாப் பொக்கிஷம் இந்தப் பெட்டிக்குள் இருக்கிறது. வள்ளி! நல்ல வேளை, இது அந்த நரசிம்ம சக்கரவர்த்தியின் கண்ணில் படவில்லை. பட்டிருந்தால், இதற்குள் காஞ்சிக்குக் கட்டாயம் போயிருக்கும்!" என்று சொல்லிக் கொண்டே கோயிலிலிருந்து வெளியேறினான்.

அமரர் கல்கி





அவனைப் பின்தொடர்ந்து வெளியே வந்த வள்ளி, ''ஐயையோ! விளக்கு அணைந்து விட்டதே!'' என்றாள். ''நல்ல வேளை ! காரியம் ஆன பிறகு அணைந்தது ! போனால் போகட்டும். இப்போது எப்படிப் போகலாம் ? தோட்டத்தின் வழியாக இருட்டில் போவது கஷ்டம். கிழக்கு மதில் வாசல் வழியாக வேண்டுமானால் போய்விடலாமா ? வா ! கதவு திறக்கிறதா, பார்ப்போம் '' என்று சொல்லி, பொன்னன் தோட்டத்தின் கிழக்கு மதிலை நோக்கி விரைந்து சென்றான். அங்கிருந்த வாசற்படியருகில் இருவரும் போனதும், மதிலுக்கு வெளியில் பேச்சுக் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். பின்வரும் சம்பாஷணை அவர்கள் காதில் இலேசாக விழுந்தது :

'' மாரப்ப பூபதியின் பேச்சை நம்பியா இங்கே கத்தியை உருவிக் கொண்டு நிற்கிறாய்? அரண்மனையிலாவது. திருடன் நுழையவாவது ?''

''திருடன் நுழைகிறதைக் கண்ணாலே பார்த்தேன் என்று மாரப்பபூபதி சொல்லும்போது எப்படி அதை நம்பாமல் இருப்பது?''

'' தப்பிப் போவதற்கு இதுதான் வழியா ? வேறு வழியில்லையா ?''

'' திருடன் அரண்மனை வாசல் வழியாகத் துணிந்து கிளம்பமாட்டான். இந்த வாசலுக்கு வராவிட்டால், தோட்டத்தின் வழியாகக் காவேரியில் போய் இறங்க வேண்டியதுதான். அதற்குள்ளாக.... அதோ பார் !''

'' என்ன அங்கே ? ஏக தீவர்த்தி வெளிச்சமாகத் தெரிகிறதே !''

'' மாரப்ப பூபதி ஆட்களைத் திரட்டிக் கொண்டு வருகிறான்.''

இந்தப் பேச்சைக் கேட்டதும் பொன்னனுக்கு உடம்பு வெலவெலத்துப் போய் விட்டது. ஒரு கண நேரத்தில் அவனுடைய உள்ளம் என்னவெல்லாமோ கற்பனை செய்துவிட்டது. தன்னைப் பெட்டியுடன் மாரப்ப பூபதி கைப் பிடியாகப் பிடித்துச் சக்கரவர்த்தியின் முன்னால் கொண்டு வந்து நிறுத்துவது போலவும், சக்கரவர்த்தி தன்னைப் பார்த்து, ''வெகு யோக்கியன்போல்

நடித்தாயே? திருடனா நீ?'' என்று கேட்பது போலவும், அவனுடைய மனக் கண் முன் தோன்றியது. உடனே, வள்ளியையும் ஒருகையினால் பற்றி இழுத்துக் கொண்டு தோட்டத்தில் புகுந்து வட திசையை நோக்கி ஓடினான். மரங்களில் முட்டிக் கொண்டும், செடி கொடிகளின் மேல் விழுந்தும் அவர்கள் விரைந்து சென்று கடைசியில் தோட்டத்தின் கொல்லைப்புற மதிற்சுவரை அடைந்தார்கள். கதவருகில் சிறிது நின்று ஏதாவது வெளியில் சத்தம் கேட்கிறதா என்று உற்றுக் கேட்டார்கள். சத்தம் ஒன்றும் இல்லை. மெதுவாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தார்கள். அவசரமாகக் காவேரியில் இறங்கிப் பார்க்கும்போது, அங்கே அவர்கள் கட்டிவிட்டுப் போயிருந்த படகைக் காணோம்!

பொன்னனுக்கும் வள்ளிக்கும் ஒரு கணம் மூச்சே நின்றுவிட்டது! தூரத்தில் தீவர்த்திகளின் வெளிச்சம் தெரிந்தது. ஆட்கள் ஓடி வரும் ஆரவாரமும் கேட்டது. இன்னது செய்வது என்று தெரியாமல் சிறிது திகைத்து நின்ற பிறகு, ''வள்ளி, படகு ஒரு வேளை ஆற்றோடு மிதந்து போய்க் கிழக்கே எங்கேயாவது தங்கியிருக்கும். வா, பார்க்கலாம்'' என்றான். இருவரும் நதிக் கரையோடு கிழக்கு நோக்கி ஓடினார்கள். அரண்மனை மதிலுக்குப் பக்கத்தில் தெற்கே இருந்து வந்த சாலை வழியாகத் தீவர்த்திகளுடன் ஒரு கும்பல் வருவது தெரிந்தது. 'அதோ ஓடுகிறார்கள்!' என்ற சத்தமும் கேட்டது.

பொன்னனும் வள்ளியும் இன்னும் விரைவாக ஓடினார்கள். கொஞ்ச தூரம் போனதும் ஒரு மரத்தின் வேரில் தங்களுடைய படகு இழுத்துக் கட்டப்பட்டிருப்பதைப் பார்த்து அவர்களுக்குப் பரம ஆச்சரியமாய்ப் போய்விட்டது. ஆனால் ஆச்சரியப்பட்டுக் கொண்டு நிற்பதற்கு அதுவா தருணம்? அதற்குள், தீவர்த்திகளுடன் வந்த கும்பலும்,



காவேரிக் கரையை நெருங்கிவிட்டது. ''ஐயோ ! அவர்களிடம் பெட்டியுடன் சிக்கிக் கொள்ளப் போகிறோமே!'' என்று பொன்னன் பதைபதைத்தான். அதே சமயத்தில் படகு கட்டியிருந்த மரத்துக்குப் பின்னாலிருந்து ஓர் உருவம் வெளிவந்தது! அது சிவனடியாருடைய உருவம் என்பதை அறிந்ததும் வள்ளி, ''சுவாமி, நீங்களா ?'' என்று ஆச்சரியமும், மகிழ்ச்சியும் பொங்கக் கூச்சலிட்டாள்.

'' உஷ் !'' என்று அடக்கினார் சிவனடியார். ''பொன்னா ! இது பேசிக் கொண்டிருக்கும் சமயம் இல்லை. பெட்டியை இப்படிக் கொடு, நான் காப்பாற்றி உன்னிடம் ஒப்புவிக்கிறேன். இல்லாவிட்டால், அகப்பட்டுக் கொள்வாய் !'' என்றார்.

''கொடு ! கொடு !'' என்று வள்ளி பொன்னனைத் தூண்டினாள்.

பொன்னன் சிவனடியாரிடம் பெட்டியைத் தயக்கத்துடன் தூக்கிக் கொடுத்தான்.

சிவனடியார், ''வள்ளி! நீ ஒரு சமயம் மாரப்பனிடமிருந்து என்னைத் தப்புவித்தாய். அதற்குப் பிரதியாக இன்று உங்களை அதே மாரப்பனிடமிருந்து தப்புவிக்கிறேன்!'' என்றார்.

அடுத்த நிமிஷம் அங்கே சிவனடியாரைக் காணோம். மர நிழலில் மறைந்து மாயமாய்ப் போய்விட்டார்!

பொன்னன் படகை அவசரமாக அவிழ்த்துவிட்டு, வள்ளியை அதில் ஏற்றித் தானும் ஏறிக் கொண்டான்.

அதே சமயத்தில் மாரப்பனும் அவனுடைய ஆட்களும் காவேரிக் கரையை அடைந்து படகு இருந்த இடத்தை நோக்கி விரைந்து ஓடி வரத் தொடங்கினார்கள். (தொடரும்)

செய்தி மணிகள்



✕ புற்றுநோய்களில் ஒருவகை லுக்கேமியா. இந்தப் பயங்கர வியாதியை ''வின்கா ரோசியா'' என்னும் சாதாரண மூலிகையைக் கொண்டு தயாரிக்கப்படும் மருந்து குணப்படுத்துகிறது. ஊதா, வெள்ளை நிறப் பூக்கள் மலரும் இந்த மூலிகை இந்தியாவில் கிழக்கு, தென் பிராந்தியங்களில் அதிகம் காணப்படுகிறது. மூலிகை சாதாரணமானது. ஆனால் தீர்க்கப்படும் நோய் பயங்கரமானது. இந்தியாவில் கிடைக்கும் இந்த மூலிகை உலகம் முழுதும் ஒரு புதிய நம்பிக்கை பிறக்க வழி செய்துள்ளது!


✕ ''இன்ம.....77'' அப்படியென்றால் - 1977ம் ஆண்டு இந்திய இஞ்சினீயரிங் பொருட்கள் கண்காட்சி என்று அர்த்தம். இந்தக் கண்காட்சி 1977ம் ஆண்டு குடியரசு நாளில் (ஜனவரி 26) சிங்கப்பூரில் உள்ள நேஷனல் ஸ்டேடியத்தில் துவங்கவிருக்கிறது. முழுக்க முழுக்க இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இஞ்சினீயரிங் பொருட்கள் பங்கேற்கும் முதல் கண்காட்சி இது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தி. பல அரசுத் துறை நிறுவனங்கள் உட்படச் சுமார் 120 இஞ்சினீயரிங் பொருள் உற்பத்தி நிறுவனங்கள் இக்கண்காட்சியில் பங்கு பெறுகின்றன. உற்பத்திப் பொருட்களின் தரமும், நிறுவனங்களின் திறமையும் இந்தக் கண்காட்சி மூலம் அறியப்படும்.

✕ ஒன்றோ, இரண்டோ அல்ல. சுமார் 1400 விசேஷ ரயில்கள்! 'கும்ப மேளா' திருவிழா கூட்ட நெரிசலைச் சமாளிக்கத்தான் இத்தனை விசேஷ ரயில்களை விட ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. 1977 ஜனவரி 5ந் தேதி முதல் பிப்ரவரி 4ந் தேதி வரை ஒரு மாத காலம் இந்த விசேஷ ரயில்கள் ஓடும். சுமார் 65 லட்சம் பயணிகளின் சௌகரியத்துக்காக இந்த விசேஷ ஏற்பாடு.


✕ டாக்டர் நாகேந்திர சிங் பத்ம விபூஷண் பட்டம் பெற்றவர். சர்வதேசப் புகழ் பெற்ற சிறந்த நீதிபதி. இவை இவருக்குப் பெருமை தருபவை. இவர் இப்போது 'ஹேக்' நகரில் உள்ள உலகக் கோர்ட்டின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஓர் இந்தியர் இந்த உயர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவது இதுவே முதல் தடவை. இது இந்தியாவுக்குப் பெருமை தருவதாகும்.

✕ மெல்லிய எஃகுத் தகடுகளின் மேற் பரப்பில் துருப்பிடித்திருக்கிறதா? அதை அப்படியே உறுதியான பாதுகாப்புப் பூச்சாக மாற்றும் கலவை ஒன்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காரைக்குடியில் உள்ள மத்திய மின் ரசாயன ஆராய்ச்சிக் கழகம் இந்தக் கலவையைக் கண்டுபிடித்துள்ளது. இந்தக் கலவை நாடு முழுவதும் பிரபலமடைந்தால் இந்தக் கலவைக்கு 200 டன் ஆர்டர்கள் கிடைக்குமாம்!


தொகுப்பு: எஸ். சீனிவாசன்



அமுல் — உங்கள் பால்க்காரர்




அமுல் — உங்கள் தேநீர்க்காரர்




¼ லிட்டர் டம்ளரில் 2½ டேபிள்ஸ்பூன் அமுல் மில்க் பவுடரை நன்கு குவியச் செய்து போடவும். சிறிதளவு சுடுநீருடன் கலந்து நன்கு கலக்கிப் பசைபோல் ஆக்கிக்கொள்ளவும். பின் அதன் மேல் வரை சுடு நீரை மேலும் சேர்த்து நன்கு கலக்கவும். உங்கள் குழந்தைக்கான க்ளாஸ் அளவு பால் தயார்! (முழுமையான விவரங்களுக்கு டின் மீது பார்க்கவும்.) அமுல் மில்க் பவுடர் தேயிலை பானத்திற்கும் காப்பிக்கும் கூட மிக ஏற்றதாகும்.

அமுல் — உங்கள் தயிர்க்காரர்



கறந்த பாலிற்குச் செய்வது போலவே, மேற்கண்ட முறைப்படி பாலைச்செய்து, சாதாரணமாகச் செய்வது போலத் தயிராகத் தோய்க்கவும்.



அமுல்

மில்க் பவுடர்

வீட்டினுள் இயங்கும் ஒரு பால் பண்ணை

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோவாப்பரேட்டிவ்
மில்க் மார்க்கெட்டிங் ஃபெடரேஷன்
லிமிடெட், ஆனந்த்

RADEUS/AMP-1





சீர்காழி



எம். எஸ். கோபாலகிருஷ்ணன்

மேலே: சங்கீத வித்வத் சபையில் ஸ்ரீ டி. எஸ். ராஜம் வரவேற்புரை. அமைச்சர் திரு கரண் சிங், சங்கீத கலாநிதி விருதுபெறும் பிருந்தா. கீழே: திரு ராமராவ் உருவப் படத்தைத் திறந்து வைக்கிறார் திரு கோபால ரெட்டி.





உமையாள்புரம் சிவராமன்

ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி அய்யர் உருவச் சிலையைத் திறந்து வைத்தார் திரு ராஜமன்னார். அவருக்குப் பின்னால் வே. ராகவன், வலம்புறம் ரங்கன், ராஜி கோபாலன், டி. எஸ். ராஜம்.



திருவிழா ஜெயசங்கர்



சுப்புடு

இசைவிழாக் காட்சிகள்!

புகைப்படங்கள் : கிருஷ்ணசாமி
கார்ட்டூன் : உமாபதி







இடது: தமிழிசைச் சங்கத்தில் இசைப்பேரறிஞர் விருதினை திரு கோவிந்தராஜப் பிள்ளைக்கு வழங்கு கிறார், ஆளுநர் சுகாதியா. வலது: திரு எம். டி. ராமநாதனுக்கு இந்திய நுண்கலைக் கழகத்தின் சார்பில் சங்கீத கலாசிகாமணி விருது வழங்கிக் கௌரவிக் கிறார் திரு சி.வி. நரசிம்மன்.









பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் I

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	2	காலை 9-00 -- 10-00	Dr. K. R. கோபாலன், முருகன் ஸ்டோர்ஸ், சர்ச் ரோடு.
பழனி	2	காலை 11-00 -- 12-00	ஜெயா மெடிகல் மார்ட்
உடுமலைப்பேட்டை	2	மாலை 3-00 -- 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	2	மாலை 5-00 -- 6-00	தி எம்பயர் பார்மஸி.
கோயமுத்தூர்	3	காலை 9-11	சீதாராம் லாட்ஜ், ஸ்டேட் பாங்க் ரோடு,
,,	3	மாலை 3 - 7	ரெயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்
சத்தியமங்கலம்	4	காலை 8-00 -- 9-00	C. R. K. மெடிகல்ஸ், கடை வீதி.
கோபி	4	காலை 10-00 -- 11-00	ஸ்ரீனிவாஸா டைப்ரைட்டிங் இன்ஸ்டிடியூட், 56,
பவானி	4	மாலை 2-00 -- 3-00	M. L. செட்டியார் அண்டு சன்ஸ், கடை வீதி.
மேட்டூர் அணை	4	மாலை 4-30 -- 5-30	ஸ்ரீ ராமன் லாட்ஜ்.
ஈரோடு	5	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்.
திருப்பூர்	5	மாலை 4-00 -- 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம் ரோடு.
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு.
தஞ்சாவூர்	7	காலை 7-00 -- 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்தியசாலை, சகாநாயக்கன் தெரு.
கும்பகோணம்	7, 17,27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை பிராஞ்சு, 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு.
சீர்காழி	8	காலை 7-00 -- 8-00	பிரம்ம வித்யா ஆயுர்வேத வைத்தியசாலை, தாளாடன் சன்னதி
மாயூரம்	8	காலை 9-30 -- 12-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு
நாகப்பட்டினம்	8	மாலை 5-00 -- 6-00	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திருவாரூர்	9	காலை 7-30 -- 9-00	தன்வந்தரி மெடிகல் ஹால், 21, மடப்புரம் பாட்டை.
விஜயபுரம்	9	காலை 10-00 -- 11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு.
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00 -- 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடை வீதி.
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 -- 6-30	கோபால் விலாஸ், பெரிய தெரு.
புதுக்கோட்டை	10	காலை 8-00 -- 10-00	நியூ லக்ஷ்மி டிஸ்பென்ஸரி, கீழ ராஜவீதி.
தேவகோட்டை	10	மாலை 2-30 -- 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச் ரோடு
காரைக்குடி	10	மாலை 4-30 -- 6-00	நியூ கௌரி லாட்ஜ், மகர் நோம்பு அக்ரஹாரம்.
சிவகெங்கை	11	காலை 8-30 -- 10-00	கௌரி அண்டு கோ., கடை வீதி.
மதுரை	11	காலை 11-00-12-30	T. N. சொக்கலிங்கம் பிள்ளை சன்ஸ்,
,,	11	மாலை 3-00- 6-00	வடக்கு சித்திரை வீதி.

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 4 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை B-11, 1வது கிராஸ், தில்லை நகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன்: 87) திருச்சி ஜில்லா



மதுர நாயகி
பி.வி.ஆர்

ஒரு நாள் இந்திரன் பாண்டிய நாட்டில் ஒரு கடம்ப வனத்தின் எல்லையோரமாகப் போய்க் கொண்டிருக்கையில் தீராத தன் பிரும்மஹத்தி பாவம் நீங்குவதை உணர்ந்தான். வனத்தின் பெருமையை அறிந்த அவன் அதனுள் சென்று பார்த்தபொழுது 'ஒரு குளமும், அதன் கரையில் கடம்ப மரமும், மரத்தின் நிழலில் ஒரு சிவலிங்கமும் இருப்பதைக் கண்டான். தன்னுடைய பாவத்தைத் தீர்த்தது இந்த லிங்கம்தான் என்று உணர்ந்த அவன் அதை வழிபட்டு, அதற்கோர் அழகிய விமானமும் கட்டிவிட்டு, தேவலோகம் திரும்பினான்.

அச்சிவலிங்கம்தான் மதுரைக் கோயிலில் சொக்கநாதராக விளங்கும் மூலவர்.

— புராண வரலாறு

1

“சங்கரி...சங்கரி...!”

அம்மாவின் குரல் அவளுடைய காதுகளையே அறைந்தபோதிலும் லாவண்யா எதிர்க் குரல் கொடுக்கவில்லை. சங்கரி என்கிற பத்தாம் பசலிப் பெயரைத் தூக்கி எறிந்து லாவண்யா என்கிற நவீன புது மோஸ்தர் பெயருக்கு அவள் சட்டபூர்வமாக வந்து இரண்டு வருடங்களாகி விட்டன. மதுரை ஸ்டேட் பாங்கியில் பணத்தைக் கட்டி, செலானை விண்ணப்பத் தாளுடன் இணைத்துப் பார்க்க வேண்டிய அதிகாரிகளை யெல்லாம் பார்த்து, அவள் 'சங்கரி'யை ஒழித்துக் கட்டி 'லாவண்யா'வாக மறு பிறவி எடுத்திருக்கிறாள். அவள் பட்ட கஷ்டத்தை யெல்லாம் உணர்ந்தும் அறிந்தும்கூட இந்த அம்மாவுக்குப் பழைய பழக்கம் போகவில்லை. அவள் சின்னஞ் சிறு குழந்தையாக — ஆறு மாதமோ, ஒரு வருஷமோ — அப்பா மடியில் தூங்கிக் கொண்டிருக்கும்போது அவள் காதில் அவர் மந்திர முழக்கத்தினிடையில் 'சங்கரி, சங்கரி, சங்கரி' என்று உச்சரித்து விட்டாராம். இப்படி நாமகரணமான பெயரை மாற்ற முடியாது என்று அம்மா கண்டிப்பும் கறாருமாகக் கூறிவிட்டாள். இது விஷயமாக லாவண்யாவுக்கு வெறும் மனத்தாங்கல் மட்டுமல்ல; அசாத்தியக் கோபமும் கூட. அம்மாவின் பிடிவாதத்தை மாற்றுவது எவ்வளவு கடினம் என்பதை அவள் அறிந்திருந்ததால், கோபித்துப் பயன் இல்லை என்று மௌனமாக இருந்தாள். மறுபடியும் அவள் இப்போது இருபத்துநாலாவது வயதில் பி.ஏ. (சரித்திரம்) பட்டத்துடன் அப்பா மடியில் தவழ்ந்து கிடந்து, சாஸ்திரிகளும் மந்திரங்களைச் சொல்லிப் புது நாமகரணம் செய்துவிட்டால், ஒருவேளை அம்மாவின் அங்கீகாரம் கிடைக்குமோ என்னமோ? ஆனால் லாவண்யா அதற்குத் தயாரில்லை. அவளுடைய ஐம்பத்தெட்டரை கிலோ கனத்தை அப்பாவின் மடியால் தாங்க முடியாது. கரிப் படலமாகி யிருக்கும் அப்பாவின் வேட்டியையும், அதிலிருந்து வீசும் ஜாங்கிரி, கோதுமை அல்வா, மைசூர்ப் பாகுக்களில் ஒளிந்து விட்டுக் கசிந்த நெய், ரேடியோ ஆயில் நாற்றத்தையும் அவளால் தாளவும் முடியாது.

தலையை நன்றாக அழுத்தி வாரிப் பின்னிய லாவண்யா பின்னலின் நுனியை நாகுக்காகத் தளர விட்டாள். கண்ணாடியைப் பார்த்தபோது முன்னுச்சி மயிர் பெட்டி



யில் இருக்கும் பாம்பைப் போல, சீப்பின் அழுத்தத்தில் அடங்கிப் படிந்து கிடந்தது. கன்று விரலால் இலேசாகக் கிளறி விட்டாள். ஒரு சின்னக் கொத்து மோதிர வளையமாக எழுந்து நின்றது. அவளுடைய சுருண்ட கேசம் திடீரென்று ஒரு புதுப் பொலிவுடன் திகழ்வதாகத் தோன்றியது.

தலையை வாரிக் கொண்டிருக்கும்போதே அன்று என்ன புடவையை, அவளைப் பின் தொடரப் போகிற மெஹட்டு யாத்திரீகர்களுக்குக் காட்ட வேண்டும் என்று அவள் முடிவு எடுத்திருந்தாள். அந்த ஷிபானுக்கு ஏற்றபடி அவள் கலர்க் குங்குமத்தை எடுத்து இட்டுக் கொண்டாள். ஆள்காட்டி விரல் குங்குமத்தைச் சரி செய்யும்போது அம்மா அடிக்கடி பாடும் வசை நினைவுக்கு வந்தது:

''ஏண்டி இப்படி அக்கிரமம் பண்ணறே...? லட்சம் பேர் இந்த மதுரைக்கு வந்து குங்குமம் வாங்கிண்டு போறா... குங்குமம் மஞ்சளிலே செய்யறதுமா... ஒரு பொண்ணுக்கு மஞ்சள் குங்குமம்தாண்டி உசத்தி. அதுவும் கூறைப் புடவை மாதிரி நல்ல அரக்கு நிறத்திலே இருக்கணும்மா! ஏண்டி இப்படி மைதா மாவை நெத்தியிலே அப்பிண்டு கூத்தடிக்கிறே?''

அம்மாவின் வசையை நினைத்துப் பார்த்தபோது அவளுக்குச் சிரிப்பு வந்தது. பாவம், அம்மா! இன்னும் மங்கம்மா காலத்து மஞ்சளிலேயே இருக்கிறாள்! இந்த மைதா மாப்பொட்டுக்கே இப்படிக் கத்துகிறாளே, பிளாஸ்டிக் பொட்டுக்களைக் கண்டால் என்ன செய்வாளோ?

அவள் அந்த எட்டு அடிச் சதுர அறையை விட்டு வெளியேறி, தாழ்வாரத்தில் சுவரோடு சுவராய் ஒண்டி உறங்கிக் கொண்டிருக்கும் நீலாவைக் கடந்து, சமையலறை வாயிலில் முழங்காலைப் பிடித்து, சோழன் பிரும்மஹத்தியைப் போல் காப்பிக்காக உட்கார்ந்திருக்கும் சுந்தரத்தை லட்சியம் செய்யாமல், சமையலறைக்குள் பிரவேசித்தாள்.

''அம்மா! நான் இன்னும் பத்து நிமிஷங்களில் புறப்படணும்.''

''போய்ப் புடவையை மாத்திண்டு வா. அதுக்குள்ளே பால் கொதிக்கடும்...''

''முதல்லே காப்பி.''

''அப்போ உட்காரு.''

''சுந்து?''

''என்ன அக்கா?''



''ரெண்டு புடவையை ட்ரை க்ளீனிங்குக்குக் கொடுத்திருக்கேன். வாங்கி வைச்சுடு. என் பெட்டிக்கு மேலே மூணு ரூபாய்ப் பணமும் ரசீதும் இருக்கு.''

''மேலே ஒரு எட்டணாவையும் வை. இல்லாமப் போனா நீலாகிட்டே சொல்லிட்டுப் போ...''

''ஏண்டா இப்படி அக்கிரமம் பண்ணறே... என்ன வேலை சொன்னாலும் ஒரு கூலியா?''

''எஸ். எஸ். எல். ஸி.யை எட்டிப் பிடிக்காதவன் வேறே என்ன செய்வான் அக்கா?''

''கூலி வேலைன்னா ஆயிரம் இருக்கு.''

''எனக்கு உன்னை மாதிரி ஒரு டூரிஸ்ட் கெய்டாப் போகத் தெரியாதே!''

''கெய்டு ஒண்ணும் கூலி வேலை இல்லே.''

''மீனாட்சி கோவில், மால், தெப்பக்குளம் எல்லாம் போய், 'இதை இவர் கட்டினார்', 'அதை அவர் கட்டினார்', 'இந்தத் தூணிலே தட்டினா 'ஸ' கேட்டும், அந்தத் தூணிலே தட்டினா 'ரி' கேட்கும்', இப்படியெல்லாம் எங்கெங்கிருந்தோ வர்ற யார் யாருக்கெல்லாமோ கிராமபோன் ரிக்கார்ட் மாதிரி பாடிட்டு அவங்க போடற சாப்பாட்டையும் சாப்பிட்டு, தர்ற சர்பத்தையும் குடிச்சுட்டுச் சாயங்காலம் ஆய்ஞ்சு ஓய்ஞ்சு திரும்பி வர்றப்போ, உன் கையிலே இருபது ரூபா இருக்கே, அந்த இருபது ரூபாய்க்கு என்ன பேரு அக்கா?''

''அம்மா! சுந்து பேசறதைப் பாரேன்.''

''இதுலே ஏண்டி என்னை இழுக்கறே... தினசரி செய்யற வேலைக்கு அன்னிக்கே பணத்தைக் கொடுத்தா அது கூலி. அதையே மொத்தமா மாசா மாசம் கொடுத்தா சம்பளம். இதைத்தான் சுந்தரம் சொல்றான்.''

''சபாஷ் அம்மா!''

''நீயும் அவனுக்குத் தாளம் போடறே..'' —லாவண்யா.

''சரி சரி. இந்தா காப்பியைக் குடிச்சுட்டுப் போ....''

காப்பியை அவள் ருசித்துக் கொண்டிருக்கும் போது அம்மா திடீரென்று இதுவரையில் கேட்காத கேள்வியைக் கேட்டாள்.

''உன் பாங்கியிலே இப்ப எவ்வளவு பணம் இருக்கு, சங்கரி?''

''ஏன்? எதுக்குக் கேக்கறே?''

''பதில் சொல்ல முடியுமானா சொல்லு.''

''நாலாயிரத்து இருநூறு... ஏன் எதுக்குக் கேட்டே?''

''சுந்து உன் லாண்டரிப் புடவையை வாங்கிண்டு வர எட்டணா கூலியாகக் கேட்டான். நான் அவசியம் ஏற்பட்டா உன்கிட்ட ஒரு ஆயிரமோ ரெண்டாயிரமோ பிச்சையாகக் கேட்பேன்.''

''ஆயிரம் ரெண்டாயிரமா?''

லாவண்யா அயர்ந்து போய்விட்டாள். கையில் இருக்கும் தம்ளர் கையிலேயே நின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில் அவள் இருபது இருபது ரூபாயாகச் சம்பாதித்ததில் பத்துப் பத்தாகச் சேர்த்த பணம். அப்பாவின் கை, ஜாரணி பிடிக்கும் கை! ஏற்ற முறையில் தகுந்த பிள்ளைக்குக் கன்னிகாதானம் செய்ய இயலாத கை — இதை அவள் உணர்ந்து, எதிர்காலத்து வாழ்வுக்கு இப்போதே சேர்த்து வரும் தேன் துளிகள்தான் நாலாயிரத்து இருநூறு. இன்னும் இரண்டு வருடங்களில் பாங்கியில் குறைந்தது ஏழாயிரமாவது இருக்கும். எல்லாப் பெண்களையும்போல், அவளும் ஒருவனுக்கு மனைவியாகி அப்புறம் தாயாகி, அவன் பின் ஓடுகிற ஓட்டத்தில் கலந்துவிட வேண்டும். வீட்டின் அவல நிலையில் அவள் தனக்குத் தானே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இதுவரையில் பாங்கியில் அவள் பணத்தைப் போட்டிருக்கிறாளே தவிர ஒரு பைசா எடுத்ததில்லை. கிடைக்கிற இருபது ரூபாயில் பத்து ரூபாயைப் பாங்கியில் கட்ட வேண்டும்; மீதியில் ஆறு ரூபாயை வீட்டுக்குக் கொடுக்க வேண்டும்; எஞ்சியிருக்கிற நாலு ரூபாயைத் தனியாகச் சேமித்து, புடவை, ரவிக்கை மைதாமாப் பொட்டு போன்ற நாகரிக வசதிகளுக்காக ஒதுக்க வேண்டும். இந்த முடிவை, இல்லை சங்கல்பத்தை அவள் ஒரு லட்சிய வெறியுடன் நடத்தி வந்தாள். அதற்குக் குறுக்கே நிற்க இதுவரையில் யாருக்கும் தைரியம் வந்ததில்லை. தங்கை நீலாவுக்கு எப்போதாவது போனால் போகிறது என்று தன் புடவையை (அதுவும் கலர் மங்கிக் கொண்டு வரும் புடைவையை) இரவலாகக் கொடுப்பாளே தவிர, ஒருநாளும் கல்லூரிச் சம்பளத்

சரித்திர டிப்ஸ்!

○ அக்பர் 'தீன் இலாஹி' என்னும் சமயச் சார்பற்ற மதத்தை ஏற்படுத்தியவர். இந்துக்கள், முஸ்லிம்கள் மத ஒற்றுமைக்காக மிகவும் பாடுபட்டவர். இப்பேர்ப்பட்ட அக்பருக்குப் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை எழுதப் படிக்கவே தெரியாது!


○ காகித ரூபாய்களை முதன் முதலில் வெளியிட்ட தேசம் எது தெரியுமா? சீன நாடு. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் சீனத்தை ஆண்ட தாங்க் (Tang) வம்சத்தினர்தான் முதன் முதலில் காகித ரூபாயை வெளியிட்டனர்.

○ யாத்திரிகர் மார்கோபோலோ பதினேழு ஆண்டுகள் சீனவில் தங்கியிருந்தபோது, குப்ளாய்கான் என்பவர் ஆட்சி புரிந்தார். அப்போது புழக்கத்திலிருந்த காகித நோட்டுகளைப் பற்றிய விவரம் தந்துள்ளார்.

○ நம் நாட்டில் கி.பி. 1790ல்தான் பாங்க் ஆப் ஹிந்துஸ்தான் முதன் முதலில் காகிதப் பணத்தை அறிமுகப்படுத்தியது.

— வி. இராமேஷ்





பம்பாய் ஸ்ரீ கோச்சு குருவாயூரப்பன் கோயிலுக்கு உங்கள் நன்கொடைகளை இந்தியன் பாங்கின் மூலம் கட்டணம் ஏதுமின்றிச் செலுத்துங்கள்.

பம்பாயிலுள்ள ஸ்ரீ கொச்சு குருவாயூரப்பன் கோயிலுக்கான நன்கொடைகளை நீங்கள் இந்தியன் பாங்கின் எந்தக் கிளையிலும் செலுத்தலாம். உங்கள் நன்கொடைகள் அதே மதிப்பில் கோயில் கணக்கில் சேர்க்கப்படும்.

மாதுங்கா ஆஸ்திக சமாஜம் நடத்தும் இக்கோயிலின் திருப்பணிக்கெனவும், குருவாயூர் கோயிலைப் போலவே பம்பாய்க் கோயிலையும் நிர்வகிக்கவும் உங்கள் நன்கொடைகளை இந்தியன் பாங்க் கிளைகளில் இன்றே செலுத்துங்கள். ஸ்ரீ கொச்சு குருவாயூரப்பனின் அருளைக் குறைவில்லாமல் பெறுங்கள்.

இந்தியன் பாங்க்

(இந்திய அரசுக்கு முற்றிலும் உடைமையானது)
தலைமை அலுவலகம்: 17, வடக்கு கடற்கரைச் சாலை
சென்னை 600001

FDS IB 2531 TAM

ஆக்கசக்தி நெருக்கடியினால் ஏற்பட்ட சங்கடமான நிலை டாடா ஸ்டீலிலுள்ள எங்கள் இளம் நிபுணர்களுக்கு அதைத் திறம்படசமாளிக்கும் ஆற்றலை அளித்தது.

ஆக்கசக்தி உபயோகத்தில் சேமிப்பு பற்றிய தீவிரமான ஆராய்ச்சிகள் பல புது வழிகளைப் புலப்படுத்தியுள்ளன. கம்பஸ்சன் ஏர் கண்ட்ரோல் ஸிஸ்டம்களைப் பல தொழிலிடங்களில் நிறுவி வியர்த்தமாகும் காஸினால் ஏற்படும் உஷ்ண நஷ்டத்தைக் குறைக்க வழி செய்யப்பட்டுள்ளது; தவிர எரிபொருள் தரமும் சீராக்கப் பட்டுள்ளது. தேவையான இடங்களில் வேஸ்ட்ஹீட் ரெகூப்பரேட்டர் ஸிஸ்டம்கள் மீண்டும் நிறுவப்பட்டிருப்பதோடு அவற்றின் செயலாற்றலை உச்சநிலைப் படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஃபர்னஸ்களில் இன்ஸுலேஷன் செய்யப்பட்டதோடு அவற்றில் காலத்திற்கேற்றவாறு புதுமைகள செய்யப்பட்டுள்ளன. உச்சநிலையில் மறு-உபயோக முறைகளின் பயனாக குளிர்ச்சிக்கான தண்ணீர் பம்ப் செய்வது குறைக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்திச் செலவில் மூன்றில் ஒரு பங்கு ஆக்கசக்திக்காகச் செலவிடும் தொழிற்துறையில் இந்த சேமிப்புகள் மிக மதிப்புள்ளவையாகும். காரணம், தாங்கமுடியாத ஆக்கசக்திச் செலவின் பளுவை சமாளிக்க இவை உதவுகின்றன.

இளமை மிடுக்கோடு இருப்பவர்கள் என்றென்றும் புதுப்புது சோதனைகளை வரவேற்பார்கள்.



TIS-F247 A

துக்கோ, ஒரு புடவை, ரவிக்கைக்கோ பணமாகக் கொடுக்க மாட்டாள்.

இப்படி அவள் பூதமாகக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் சேமிப்பு அம்மா கண்ணை ஏன் கரிக்க வைக்கிறது?

ஆனால் லாவண்யா காரணத்தை ஆராய முனையவில்லை.

''இந்தப் பணம் நான் எதுக்குச் சேர்த்துண்டு வரேன்னு உனக்குத் தெரியும்னு நினைக்கிறேன்'' என்றாள் லாவண்யா.

''தெரியும்.''

''அப்போ அதிலே கை வைக்கப் பார்க்காதே...'' லாவண்யா எழுந்தாள்.

சீதாமணி பெண்ணின் அலட்சியத்தை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. என்றைக்குச் சங்கரி அம்மா, அப்பா பேச்சை மதித்திருக்கிறாள்; லட்சியம் செய்திருக்கிறாள்? இருந்தாலும், கோபம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

''சங்கரீ!'' என்று கத்தினாள் அவள்.

லாவண்யா எழுந்து விரைந்து நடந்தாள்.

'லாவண்யா' என்று கத்தியிருந்தால் ஒரு வேளை பெண் நின்று திரும்பிப் பார்த்திருப்பாளோ என்று தோன்றியது சீதாமணிக்கு.

''ஏம்மா அவகிட்டே கெஞ்சறே?'' என்றான் சுந்தரம்.

''அப்போ நீ ஒண்ணு செய்'' என்றாள் சீதாமணி.

''என்ன அம்மா?''

''போய் ஓர் ஆயிரம் ரூபாய் உன் பாங்கியிலிருந்து எடுத்துண்டு வா.''

''அம்மா!''

''பின்னே என்னடா? உன் அப்பா முப்பது வருஷமா கோட்டை அடுப்பிலே வதங்கி வதங்கிச் சாகிறார்... நீ மூன்று வேளை கொட்டிண்டு வளர் கத்தறே!... உன் அக்கா பி.ஏ. இன்னொருத்தி பி. எஸ்ஸி. உங்களையெல்லாம் யார் இந்த வயசு வரை கொண்டு வந்தா? ஓட்டுக் கூரையிலேந்து பணம் தினம் தினம் கொட்டித்துன்னு நினைக்கிறியா?''

''தப்புத்தாம்மா... ஆனா நான் என்னம்மா செய்யறது? இந்த மர மண்டையிலே படிப்பு ஏறலே....''


''ஒரு தொழிலேயாவது கத்துக்கலாமோ இல்லியோ?''

''என்ன தொழில் அம்மா... பட்டறையிலே வேலை செய்யச் சொல்றியா, இல்லே ஆபீஸிலே பியூனாப் போகச் சொல்றியா... அதுவும் டிரை பண்ணினேம்மா... தமிழ்ச் சங்கம் ரோட்டிலே ஒரு மோட்டார் ரிப்பேர் ஷாப்புக்குப் போனேன். என்ன வேலை வேணும்னாலும் செய்யறேன்னேன்... அதுக்கு முதலாளி என்ன சொன்னார் தெரியுமா?''

''எனக்கு எப்படியடா தெரியும்? என்ன சொல்லியிருப்பான், உன்னாலே மம்மட்டியையே தூக்க முடியாது. சம்மட்டியை எப்படித் தூக்குவேன்னு கேட்டிருப்பான்.''

''இப்படிக் கேட்டிருந்தா சம்மட்டியைத் தூக்கிக் காட்டி யிருப்பேன் அம்மா... நீ ஐயர் வீட்டுப்பிள்ளை, நீ லாயக்கு இல்லேன்னார்.''

''சரி சரி... ஐயர் வீட்டுப் பிள்ளைன்னா, அதுக்கு லட்சணமா தர்ப்பைக் கட்டை எடுத்துண்டு போயேன்... இல்லாமப் போனா, உன் அப்பாவை மாதிரி ஹோட்டல் சமையற் கட்டுக்குப் போ...''



சூரிய ஒளி + மூக்குக் கண்ணாடி = தீ விபத்து!

மேற்கு ஜெர்மனியில் கோடை காலத்தில் ஒரு காரோட்டி தமது மூக்குக் கண்ணாடியைக் காரின் முன் ஸீட்டில் வைத்து விட்டு இறங்கிச் சென்றார். திரும்பி வந்து பார்த்தால் கார் எரிந்து சாம்பலாகி இருந்தது!

சூரிய ஒளி மூக்குக் கண்ணாடி வழியே ஊடுருவ, குவிந்து பாய்ந்த கிரணங்கள் காரின் முன் ஆசனத்தைச் சுட்டெரித்தன. புகைய ஆரம்பித்தது. பற்றி எரிந்தது. சில நிமிஷங்களில் காரே உருத் தெரியாமல் குலைந்து போயிற்று!

—ஆதாரம்: ஜெர்மன் இண்டர்நேஷனல்

''நீதானம்மா நான் ஓட்டல்லே வேலை செய்யப்படாதுன்னு சொன்னே?''

''எப்போ சொன்னேன்? நீ எட்டாம் கிளாஸ், ஒன்பதாம் கிளாஸ் படிக்கறபோது! அன்னிக்கு நான் உன்னைப் பத்தி என்னென்னமோ நினைச்சேன்... பி.ஏ. டிகிரி வாங்கிப் பெரிய வேலையிலே சேருவேன்னு நினைச்சேன். ஆனா நீ என்ன செஞ்சே... பள்ளிக்கூடம் போறேன்னு மொட்டைக் கோபுரத்திலே ஏறி விளையாடிண்டிருந்தே... எல்லாம் என் தலை எழுத்து...''

''ஏம்மா அலுத்துக்கறே... இனிமே அத்தியயனம் பண்ணி நான் ஒரு சாஸ்திரியா மாற முடியாது. எங்கேயாவது பியூன் வேலையாவது கிடைக்குமான்னு பார்க்கிறேன். அங்கேயும் ஐயர் வீட்டுப் பிள்ளை லாயக்கு இல்லேன்னா, நிச்சயமா ஏதானும் ஓர் ஓட்டல்லே சமையல் வேலைக்குப் போறேன். இல்லாமப் போனா சப்ளையராப் போறேன்.''

''இப்போ இங்கேயிருந்து போ... மணி ஆறு அடிச்சாச்சு... அந்த லங்கிணி இன்னும் தூங்கறா. அவளை எழுப்பு.''

சீதாமணி வெளியே கத்திவிட்டு உள்ளூற அழுது தீர்த்தாள். சங்கரியைப் போல் ஒரு சுயநலம் பிடித்த பெண்ணும் பிறந்திருக்க வேண்டாம், சுந்தரத்தைப் போல் ஒரு சாதுவான மண்டுவும் பிறந்திருக்க வேண்டாம்.

திடீரென்று லாவண்யா நீல நிற ஷிபான் புடவையுடன் பிரவேசித்தாள்.

''இந்தாம்மா ஆறு ரூபாய்.''

''வைச்சுக்கட்டுப் போ.''

''என்னாலே பாங்கிலேருந்து பணம் எடுக்க முடியாது.''

''அதான் ஒரு தரம் சொல்லிட்டியே... ஒரு தடவை இல்லேன்னு சொன்னா ரெண்டாந்தரம் கேட்காத பிச்சைக்காரி நான்.''

''நான் திரும்பி வர்றதுக்கு நேரமாகும்.''

''நீ எப்போ திரும்பி வருவேன்னு நான் கேட்கலே.''

''சொன்னேன்.''

''சரி சரி.''

''லாண்டரியிலிருந்து என் புடவையை மறக்காமல் வாங்கிண்டு வரச் சொல்லு.''

''நீயே சொல்லிட்டுப் போ...!''

''நாளைக்கும் நாளன்னிக்கும் ரெண்டு நாளுக்கும் எனக்கு வேலை இருக்கு... நீலா

என் புடவையைக் கட்டித் தொலேச்சுக்கப் போருள்.''

சிதாமணி ஏதோ சொல்ல வாயெடுப்ப தற்கும், நீலா அங்கே வந்து நிற்பதற்கும் சரியாக இருந்தது.

''என்ன அக்கா சொன்னே?''

''காதுலே விழலியா?''

''விழுந்தது. இன்னொரு தடவை கேட்க ணும்னு ஓர் அற்ப ஆசை.''

''நான் வரேம்மா.''

''நீ திரும்பி வர்றதுக்குள்ளே, அந்தப் புட வையிலே ஒண்ணை நான் கட்டிக் கசக்கி எறியத் தான் போறேன்... இந்தக் காக்காத் தோப்பு பூரா ரெண்டு வாட்டி நடந்து நடந்து மினுக் கத்தான் போறேன்... நீ என்ன செய்ய றேன்னு பார்த்துடறேன்!'' என்ருள் நீலா.

''மூடுடி வாயை!'' என்ருள் சிதாமணி.

லாவண்யா நீலாவை விறைத்துப் பார்த் துக்கொண்டே வெளியேறினுள்.

மீண்டும் அறைக்குள் பிரவேசித்தபோது, அவள் பெட்டி மேல் வைத்திருந்த மூன்று ரூபாயும் லாண்டரிச் சீட்டும் அப்படியே இருந் தன. இரண்டையும் எடுத்துத் தன் ஹேண்ட் பேகில் வைத்துக் கொண்டே அவள் நடந் தாள். சுந்தரத்தின் தயவு எதற்கு?

காக்காத் தோப்பைத் தாண்டி, சந்தைப் பேட்டைத் தெருவினுள் பிரவேசிக்கும்போது தான், எதிர்த் திசையில் சற்றுத் தூரத்தே அப்பா வருவது தெரிந்தது.

போன மாதத்துக்கு இந்த மாதம் அவர் இளேத்திருப்பதாகப்பட்டாலும், அதன் கார ணத்தைக் கேட்டு அறிந்துகொள்ள அவ ளுக்குத் தோன்றவில்லே.

இப்போது அவருடைய நடையில் அவள் கண்டிராத தளர்ச்சி தென்பட்டது.

அப்பா அவளேத் தாண்டிக் கொண்டு போனுர். சமீப காலமாக அவளும் சரி, நீலாவும் சரி, அப்பாவுடன் தெருவில் சேர்ந்து போவதோ, பேசிக் கொள்வதோ கிடையாது. பலராமனேத் தெரிந்தவர்களுக்கு, ஒரு சமை யற்காரனின் இரண்டு பெண்கள் கல்லூரியில் படித்துப் பட்டம் வாங்கியவர்கள் என்று தெரியும். ஆனல் வீட்டினுள் அப்பாவின் ஸ்தானத்தை நிர்ப்பந்தம் காரணமாகக் கொடுத்த பெண்கள், வீட்டுக்கு வெளியே, பலராமனே அப்பா என்று உரிமையுடன் அழைப்பதை ஓர் அநாகரிகமாகக் கருதினுர்கள்.

லாவண்யா வலதுபுறமாகத் திரும்பி டவுன் ஹால் ரோட்டை அடைந்தாள். அதே சமயம் அட்வகேட் ரமணி எதிர்ப்பட்டான்.

''ஹலோ லாவண்யா, குட்மார்னிங்.''

''குட்மார்னிங்!'' ஒருசில விநாடிகள் அவள் தயங்கினுள். ரமணி ஏன் அப்படி அவளேத் தயங்க வைக்கிருன் என்று இன்னும் புரி யாத புதிராக இருந்தது அவளுக்கு.

''டியூட்டியா?''

''ஆமாம்.''

''அப்புறம் பார்க்கிறேன்... அப்பா எப் படி இருக்கிருர்?''

''இப்பத்தான் வீட்டுக்குப் போருர்.''

''உடம்பு தேவலேயா?''

என்ன பதில் சொல்லுவதென்று லாவண் யாவுக்குப் புரியவில்லே. அப்பாவுக்கு என்ன உடம்பு, 'தேவலேயா' என்று ரமணி கேட் பதற்கு?

''உம்.''

''சரி. நானே அவரைப் போய்ப் பார்க் கிறேன்.... உனக்கு நேரமாறது.''

''யெஸ்'' என்ற லாவண்யா, பாண்டியன் ஹோட்டலுக்குச் செல்லும் பஸ்ஸுக்காக விரைந்தாள்.

அப்பாவுக்கு என்ன உடம்பு? அம்மா எதற்குப் பணம் கேட்டாள்? இரண்டுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?

பஸ்ஸில் ஏறும்வரைதான் அவள் மனத் தில் இந்தக் கேள்விகள் விளையாடிக் கொண் டிருந்தன. அதன் பின், அன்று மாலே கிடைக்க இருக்கும் இருபது ரூபாயில் மனம் லயிக்க ஆரம்பித்தது. (தொடரும்)

கிரிக்கெட் - டிட் - பிட்ஸ்

அண்ணன் - தம்பி விஷயம்

✖ ஒரே குழுவில் மூன்று சகோதரர்கள் இடம் பெறுவது என்பது சாதாரண நிகழ்ச்சியா? 1969ம் ஆண்டு கராச்சியில் நியூஸிலாந்துடன் நடந்த டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் குழுவில் ஹனீஃப், சாதிக், முஷ்டாக் என்று மூவர் விளையாடினர். இவர்கள் மூவரும் சகோதரர்கள்!

✖ இதே நியூஸிலாந்துக் குழுவிலும் ஒரு சமயம் மூன்று சகோதரர்கள் இருந்தார்கள். இங்கி லாந்துடன் நடந்த உலகக் கோப்பை மாட்சில் மூன்று 'ஹாட்லி'கள் நியூஸிலாந்துக் குழுவில் இருந்தார்கள். இந்த ஹாட்லிக்கள் (பி.எஸ், ஆர். ஜே, டி. ஆர்.) சொந்த சகோதரர்கள்.

✖ இம்மாதிரி 1880ல் இங்கிலாந்தில் நடைபெற்ற ஓவல் டெஸ்டில் மூன்று கிரேஸ் சகோதரர்கள் இருந்தனர்.


✖ 1891ல் நடைபெற்ற ஒரு டெஸ்ட் மாட்சிலும் (இங்கிலாந்து - தென் ஆப்பிரிக்கா) மூன்று சகோ தரர்கள் பங்கு பெற்றனர். ஆனல் ஒருவர் எதிர்க் குழுவில் இருந்தார். டி. ஏ. ஹியர்ன், ஜி.ஜி. ஹியர்ன் இங்கிலாந்துக்கும், எஃப். ஹியர்ன் தென் ஆப்பிரிக்காவுக்கும் விளையாடினுர்கள்.

✖ 1934ல் சென்னையில் நடந்த டெஸ்ட் மாட்சில் இரண்டு ஜோடி சகோதரர்கள் (சி. எஸ். நாயுடு, சி. கே. நாயுடு, வஜீர், நஜீர்) பங்குபெற்ருர்கள்.

✖ அண்ணன் காப்டன், தம்பி வைஸ் காப்டன். ஆஸ்டிரேலியா விளையாட்டுக்காரர் இயன் சாப்பல், கிரேக் சாப்பல் 1972ல் இங்கிலாந்தில் நடந்த டெஸ் டில் காப்டன், உதவி காப்டனுக இருந்தார்கள். அதுமட்டுமா? அந்த டெஸ்டில் இவர்கள் மற்ருெரு ரிகார்டையும் ஸ்தாபித்தார்கள். இரண்டு பேரும் சதம் போட்டார்கள். இரண்டு பேரும் ஒரே சமயத்தில் விளையாடியதால் 231 நிமிஷங்களில் 201 ரன்களேத் திரட்டி விட்டனர்.

✖ 1878ல் டி. டபிள்யூ. கிரிகரியும் அவரது தம்பியும் இப்படி காப்டன் - வைஸ் காப்டனுக இருந்தார்கள்!

-'நந்தி'




பப்பு ஃபீடரின் குணச்சிறப்பைக் கண்டறிய தேவை- அன்னையின் கண்ணோட்டம்
* தனிப்பட்ட அமைப்பு. தாய்ப்பால் குடிப்பதைப் போன்ற மகிழ்ச்சி குழந்தைக்குக் கிடைப்பதுடன், வயிற்றில் காற்றும் குறைவாக புகுகிறது.
* சரளமாக பால் பாய்ந்து வருகிறது. எனவே குழந்தை எளிதாக பால் குடிக்கிறது.
* புத்தம்புதிய ரப்பரால் ஆனது. எனவே அடிக்கடி கொதிக்க வைத்தாலும், சீக்கிரம் தொய்ந்து போகாது. துர்நாற்றம் வீசாது.
* ஒவ்வொரு நிப்பிளிலும் பப்பு முத்திரை— தரத்துக்கு உத்தரவாதம்.
* இரண்டு திருகுகள்—ஊடுருவி பார்க்கக் கூடியது மற்றும் வார்த்தெடுக்கப்பட்டது.
துடிப்பான குழந்தைப் பருவத்தின் இனிய துணை
Papu
பப்பு
ஃபீடர் மற்றும் நிப்பிள்

U-P-7 TAM

தேநீர் பலவிதம்!

1. டீ கொதிக்கும் பொழுது அதில் சில ரோஜாப்பூவின் இதழ்களையோ அல்லது முழுப் பூவையோ போடுவதால் தேநீருக்குத் தனி மணம் உண்டாகிறது.

2. இஞ்சியை நன்றாகக் கசக்கிச் சிறிதளவு நீரில் நன்றாகக் கொதிக்க வைத்துக் கொண்டு தேநீர் கலக்கும்பொழுது இந்த இஞ்சி நீரையும் கலந்து பருகினால் மிகவும் சுவையாக இருக்கும். சர்க்கரை அளவும் வழக்கமாகப் போடுவதை விட அரை ஸ்பூன் குறைவாகவே செலவாகும். காலையில் ஏற்படக் கூடிய பித்தம், மயக்கம் முதலானவற்றுக்கும், வாயுத் தொந்தரவுகளுக்கும் மிகவும் நல்லது. குழந்தைகளும் விரும்பிப் பருகுவார்கள்.

3. இஞ்சி இல்லாவிட்டால் சுக்கை நன்றாகப் பொடித்து வைத்துக் கொண்டு அந்தப் பவுடரைச் சிறிதளவு நீரில் கொதிக்க வைக்க வேண்டும். தேநீர் தயாரிக்கும்பொழுது அந்தச் சுக்கு நீரையும் கலந்து தயாரித்தால் ருசியாக இருக்கும்.

4. டீ இலை கொதிக்கும் பொழுது 5, 6 புதினா இலைகளையும் போட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டிப் பருகினால் டீ மணத்துடன் கமழும்.


5. சிறிதளவு மிளகை நன்றாகப் பொடி செய்து வைத்துக் கொள்ள வேண்டும். அந்தத் தூளைக் கொஞ்சமான நீரில் நன்றாகக் கொதிக்க வைத்துத் தேநீர் கலக்கும் பொழுது அந்த மிளகு நீரையும் கலந்து பருகினால் விறுவிறுப்பாகவும், ருசியாகவும் இருக்கும். தலைவலி, தலைப்பாரம் போன்ற சமயங்களில் பருக நல்ல பலன் தரும்.


6. வட இந்தியர்கள் சிறப்பாக, உத்தரப் பிரதேச மக்களுக்குப் பிரியமான மசாலா டீ தாயரிக்கும் வழி :

லவங்கப்பட்டை, ஏலக்காய், கிராம்பு, மிளகு இவற்றையெல்லாம் சரி அளவில் எடுத்து நன்றாக அம்மியில் வைத்துப் பொடி செய்து, டீ தயாரிக்கும் பொழுது, இந்தப் பவுடரும் ஒரு சிட்டிகை போட்டுக் கொதிக்க வைத்து வடிகட்டிச் சாப்பிட்டால் சுவையான டீ கிடைக்கும்.

7. வெறும் ஏலக்காயைப் பொடித்து டீ இலையுடன் கொதிக்க வைத்து வடிகட்டிப் பருகினால் மிகவும் மணமாக இருக்கும்.

– புஷ்பா கண்ணன்





ஜப்பானில் பொம்மைக் கொலு

தமிழ் நாட்டில் நவராத்திரி விழாவில் பொம்மைக் கொலு வைப்பது போல், ஜப்பானில் மார்ச் மாதம் மூன்றும் தேதி பெண் குழந்தைகளுக்கான 'ஹினமாத்சுரி' என்ற பண்டிகை கொண்டாடப்படுகிறது. ஜப்பானிய மொழியின் 'ஹினு' என்ற சொல்லுக்கு (மனித உருவமுள்ள) பொம்மை என்றும் 'மாத்சுரி' என்ற சொல்லுக்குப் பண்டிகை அல்லது விழா என்றும் பொருள்.

ஒரு படிக் கொலு வளர்ந்து பெரிதாகி, இன்று மிகப் பிரபலமடைந்திருக்கிறது.

கொலுப் படிகளின் மேல் சிவப்பு வர்ணத் துணி விரித்து, அதன் மேல் பொம்மைகளை அலங்காரமாக வைக்கிறார்கள். கடைசிப் படியில் பணியாரங்கள் நிரம்பிய தட்டும், தேயிலை தயாரிக்கத் தேவையான பாண்டங்களும் வைக்கப்படுகின்றன. இதன் எதிரே சிறுமியர் அமர்ந்து பொம்மைகளை ரசித்துப் புகழ்ந்தபடி, தின்பண்டங்களைத் தின்று ஆடிப் பாடி மகிழ்கின்றனர். -வி. எஸ். பாலாம்பாள்

திரௌபதி நாட்டிய கல்யாணம்

என்னுடைய கல்யாணம் நிச்சயமாகிவிட்டது. நிலத்தை விற்றுத்தான் செய்ய வேண்டும். வேறுவழியில்லாத நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தது எங்கள் குடும்பம். என்னுடைய அப்பா நிலத்தை ரூபாய் எட்டாயிரத்துக்கு விலை பேசி முடித்து விட்டார்.

நாங்கள் குடியிருந்த தெருவின் கடைசியில் திரௌபதி அம்மன் கோவில் இருந்தது. அந்தக் கோவிலின் திருவிழா நடந்தது. அன்று திரௌபதி சுயம்வரம் முடிந்து திருமணம் நடந்து கொண்டிருந்தது.

நாங்கள் குடியிருந்த இடம் மூன்று போர்ஷன் கொண்டது. முன் போர்ஷனில் வீட்டுக்



திருச்சி மின்வாரிய அலுவலகத்தில் பணி புரியும் பெண்களில் எவராவது கர்ப்பமுற்றுப் பேறுகால விடுமுறையில் செல்வதற்கு முன் மற்ற பெண் அலுவலர்கள் எல்லோரும் சேர்ந்து அவருக்குத் தேநீர் விருந்தளித்து சுக மாகப் பிள்ளை பெற்றுத் திரும்பும்படி வாழ்த்தி அனுப்புகிறார்கள். மாதத்துக்கு ஒரு தேநீர் விருந்தாவது நடப்பது உண்டு!

- என். பங்கஜம்

ராணுவத்தில் பணியாற்றிய இரு வீரர்கள் உரை யாடுகின்றனர்.

முதல் வீரன்: எதனால் தாங்கள் ராணுவத்தில் சேர்ந்தீர்கள்?

இரண்டாவது வீரன்: எனக்கு மனைவி இல்லை. போரை விரும்பினேன். அதனால் சேர்ந்தேன். ஆமாம், தாங்கள் ஏன் ராணுவ சேவைக்கு வந்தீர்கள் ?

முதல் வீரன்: எனக்கு மனைவி உண்டு. நான் அமைதியை விரும்பினேன். அதனால் ராணுவத்தில் சேர்ந்தேன்.

-- லலிதா நாராயணன்



காரர். நடு போர்ஷன்காரர் ஊருக்குப் போய்விட்டார். மூன்றாவது கடைசிப் போர்ஷனில் நாங்கள் இருந்தோம். வாசலில் அப்பா, பெரியப்பா, அண்ணா எல்லோரும் படுத்துக் கொண்டிருந்தார்கள். இரவு மணி ஒன்று இருக்கும். திரௌபதி திருமணம் முடிந்து ஊர்வலம் வீதியில் வந்து கொண்டிருந்தது. பலத்த மேளச் சத்தமும் வாத்திய மும் வாண வேடிக்கைகளும் காதைப் பிளந்தன. நான் படுக்கையிலிருந்து எழுந்து விளக்கைப் போடாமலேயே வாசற்புறம் ஓடினேன். ஓடும்போது எதிரே வந்தவர் மீது நன்றாக மோதிக் கொண்டேன். நெற்றி வீங்கி விட்டது. வீட்டுக்காரப் பாட்டிதான் என்று நினைத்து, ''பாட்டி கொஞ்சம் விளக்கைப் போட்டுவிட்டு வரக் கூடாதா? எனக்குத்தான் அம்மனைப் பார்க்க அவசரம்?. உங்களுக்குக் கூட என்ன அவசரம்? உங்களுடன் மோதிக் கொண்டதில் தலை வீங்கி விட்டது'' என்று சொல்லிக்கொண்டே வாசல் கதவைத் திறந்து அம்மனைப் பார்க்கப் போனேன். சற்று நேரம் பொறுத்து வீட்டுக் கார அம்மாள் விளக்கைப் போட்டுவிட்டு அம்மனைப் பார்க்க வாசலுக்கு வந்தாள். பிறகு இருவரும் உள்ளே வந்தோம்.

முன் பக்கப் போர்ஷனில் மாடிக்குப் போகும் படிக்கட்டில் குறுக்காகப் பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்த வீட்டுக்கார மாமி ''நடு போர்ஷன்காரர் எப்போது ஊரிலிருந்து வந்தார்?'' என்று என்னைக் கேட்டாள். ''எனக்குத் தெரியாது'' என்று நான் சொல்லிக் கொண்டே இருக்கும் போது, அவளே, ''ஐயோ! இது என் பெட்டி. இதை யாராலும் தூக்க முடியாது. இது எப்படி எங்கள் அறையிலிருந்து வந்தது?'' என்று அலறினாள். சோதித்ததில் வீட்டுக் காரருடைய நகைப் பெட்டி, மற்றும் சில சாமான்கள் — ரூபாய் மூவாயிரம் பெறு மானமுள்ள திருட்டுப் போய் விட்டன. இவ்வளவுக்கும் களவு போன அறையிலேயே தான் வீட்டுக்காரரும், வீட்டுக்கார மாமியும் படுத்துத் தூங்கினர். அவர்கள் கால் பக்கத்திலிருந்த பெட்டியைத் தூக்கிக் கொண்டு அவர்களையும் தாண்டி வந்திருக்கிறான். ஆனால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாது.

பிறகுதான் நான் மோதிக் கொண்டது பாட்டி அல்ல; திருடன் மீது என்று புரிந்தது.


வீட்டில் திருடன் புகுந்து புறப்பட்டிருக்கிறான் என்றதும் என்னுடைய சப்த நாடியும் அடங்கி விட்டது. ஏனெனில் நிலம் விற்று எட்டாயிரம் ரூபாயை என் அக்காவிடம் கொடுத்து அப்பா பெட்டியில் வைக்கச் சொன்னார். என் அக்கா அதைப் பூட்டப்படாத மேல் பெட்டியில் வைத்திருந்தாள். அதுவும் திருட்டுப் போயிருக்குமோ என்று நான்பயந்து ஓடிவந்து பெட்டியைத் திறந்து பார்த்தேன். நல்ல வேளையாகப் பணம் அப்படியே இருந்தது. எங்கள் போர்ஷனில் திருடுவதற்காகத் தான் வந்திருக்கிறான். அந்தச் சமயம் நான் விழித்துக் கொண்டு அவன் மேல் மோதவே அவன் கொல்லைப்புறமாக ஓடி விட்டான்.

அம்மன் மட்டும் மேளதாளத்துடன் வந்து என்னை எழுப்பாமலிருந்தால் எங்கள் பணம் களவு போயிருக்கும். நானும் காலம் முழுதும் கன்னியாகத் தள்ள வேண்டியதுதான். அம்மனின் அருளை நினைத்து மெய் சிலிர்த்தது.

கல்யாணம் ஆன பிறகுதான் எனக்குத் தெரிய வந்தது: என் கணவர், தம் ஊரில் நடக்கும் திரௌபதி விழாவில் வருடா வருடம் அக்னி மிதிப்பார் என்பது.-**பேபி தேவநாதன்**



விட்டேனா பார்!





'வம்பன்' தினசரிப் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் ஜம்புலிங்கம் குஷன்போட்ட நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு குண்டூசியால் பல்லிடுக்கில் சிக்கிக் கொண்டிருந்த பாக்குத் துகள் ஒன்றை எடுக்கும் பெரு முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது அவரது அறைக் கதவு 'படார்' என்று திறக்கப்பட்டு உள்ளே வேகமாக நுழைந்தார் நிருபர் நித்திய கண்டம்.

''வாய்யா கண்டம்! இன்னிக்கு எத்தனை சாவு நியூஸ் கொண்டாந்திருக்கே?'' என்று நிருபரை அன்புடன் வரவேற்றார் ஆசிரியர். (நித்திய கண்டம் 'சதக் சதக்!', 'துடிதுடித்துச் சாவு!', 'மண்டை பிளந்து மரணம்' ஆகிய அயிட்டங்கள் கொண்ட செய்திகள் திரட்டுவதில் புலி!)

ஆசிரியரின் எதிரில் அமர்ந்தார் நிருபர். ''இன்னிக்கு ஒரே ஒரு நியூஸ்தான் சார்... அரைப் பிளேடாலே முழுசாக மூணு பேரை அறுத்துத் தள்ளியிருக்கான் ஒருத்தன்!...'' என்றார், இன்னும் ஆறு பேரை அறுக்கவில்லையே என்ற ஏக்கம் குரலில் தொனிக்க.

''சரி, மளமளன்னு எழுதிக் கொடுத்துட்டுப் போ!''

''அது என்ன சார் பிரமாதம்! அஞ்சே நிமிஷ வேலை... நான் இன்னொரு சூடான நியூஸ் கொண்டுவந்திருக்கேன். சொல்லவா?''

''சொல்லு ஐயா! சுடச் சுட நியூஸ் தர்றதுக்குத்தானே இங்கே உட்கார்ந்திருக்கோம்?''

''நம்ம பரமசிவத்தின் காரை நடிகை கங்கா வீட்டு வாசல்லே பார்த்தேன்...பரமசிவம் இறங்கி உள்ளே போனார்.''

குண்டூசியைக் குப்பைக் கூடையில் விசிறி எறிந்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார் ஜம்புலிங்கம். காரணம், பரமசிவம் ஓர் அரசியல் கட்சித் தலைவர். 'வம்பன்' பத்திரிகையின் கொள்கைகளுக்கு நேர் எதிரான கொள்கை கொண்டிருந்தவர். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வம்பனையும் ஜம்புலிங்கத்தையும் மேடைகள் தோறும் வசை பாடுவதில் சளைக்காதவர்.

''எப்போ ஐயா பார்த்தே?''

''ஓர் அரை மணி முன்னாலே. ஏன் ஆச்சரியப்படறீங்க? அந்த ஆள் நடத்தைதான் ஒரு மாதிரின்னு நல்லாத் தெரியுமே!''

''நல்ல நியூஸா இருக்கிறதையா. விவரமாச் சொல்லு. நானே ஒரு 'பெட்டிச் செய்தி' எழுதிடறேன்.''

நித்திய கண்டம் சொன்னது முழுப் பூசணிக்காய்ப் பொய். பரமசிவத்துக்குச் செல்வாக்கு உள்ள ஓர் அலுவலகத்தில் தம் மைத்துனனுக்கு ஒரு வேலை கேட்டிருந்தார் நித்தியகண்டம். ஏற்பாடு பண்ணுவதாகச் சொல்லிவிட்டு ஆறு மாத காலம் இழுக்கடித்துவிட்டு அன்று காலைதான் கையை விரித்துவிட்டார் பரமசிவம். நித்தியகண்டத்துக்கு ஒரே கடுப்பு. அதுதான் இப்படி ஒரு செய்தியாக உருவெடுத்தது.

மறுநாள் காலை 'வம்பன்' இதழின் முதல் பக்கத்திலேயே 'கங்கையும் சிவனும்' என்ற தலைப்பில் நடிகை கங்காவின் வீட்டிலேயே பரமசிவம் பழி கிடப்பதாக' அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் பேசிக் கொள்வதாகச் செய்தி வெளியாகியது.

இதற்கு பரமசிவத்திடமிருந்து மறுப்பு வரும் என்று எதிர்பார்த்தார்கள், ஜம்புலிங்கமும் நித்தியகண்டமும். பரமசிவம் மறுப்பும் விடவில்லை; மேடையிலும் இது பற்றிப் பேசவே இல்லை. 'ஆகா! இப்படி ஒரு நியூஸ் போட்டும் நம்மை லட்சியம் செய்யவில்லையே!' என்று பற்றிக் கொண்டு வந்தது நித்திய கண்டத்துக்கு. இரண்டு நாட்களுக்கெல்லாம் இன்னொரு பெட்டிச் செய்தி எழுதினார். 'பரமசிவனும் பத்து ரூபாய் நோட்டும்' என்ற தலைப்பில். அதில், பரமசிவம் பத்து ரூபாய் கள்ள நோட்டு அச்சடிக்கிறார் என்று பழி சுமத்தியிருந்தார்.

அதையும் பரமசிவம் லட்சியம்செய்யவில்லை.

மேலும் இரண்டு நாள் கழித்து மூன்றாவது குண்டை வீசினார் நித்திய கண்டம் — ''கள்ளக் கடத்தலில் பரமசிவத்துக்குப் பங்கு?'' அந்தச் செய்தியில் பரமசிவம் தினமும் மாலையில் கடற்கரைக்குச் செல்வது காற்று வாங்குவதற்காக அல்ல என்றும் இருட்டிய பிறகு கட்டு மரங்களில் கரையோரமாக வந்து இறங்கும் கள்ளக்கடத்தல் பொருட்களைப் பெற்றுக் கொள்ளவே செல்கிறார் என்றும் குற்றம் சாட்டியிருந்தார்.

ஆலகால விஷத்தைப் படு அலட்சியமாகத் தொண்டையில் அடக்கிக்கொண்டு விட்ட அசல் பரமசிவனைப் போலவே அரசியல்வாதி பரமசிவமும் இந்த விவகாரத்திலும் அலட்சியமாக இருந்து விட்டார். நித்தியகண்டம் தான் பாவம் மறுப்பு வராதா என்று ஏங்கித் துடித்துப் போனார்.

நான்காவது பெட்டிச் செய்தி ஒன்று தயார் செய்துகொண்டு ஜம்புலிங்கத்திடம் போனார்

நித்தியகண்டம். ''இதைப் போட்டால் அந்தப் பரமசிவம் அலறியடித்துக்கொண்டு நம்ம கிட்டே வருவான் பாருங்க!'' என்றார்.

ஜம்புலிங்கம் பல் ஆராய்ச்சியை ஒத்திப் போட்டுவிட்டுச் சாவகாசமாக உட்கார்ந்திருந்தார். ''படி ஐயா கேட்போம்!'' என்றார். நித்திய கண்டம் படித்தார்:

''இன்றைக்குச் சரியாகத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் வீடு புகுந்து கொள்ளை அடித்த குற்றத்துக்காக தூக்கிலிடப்பட்டான் பெரிய கருப்பன் என்ற ஆசாமி. அதற்கு முப்பது வருடங்களுக்குப் பிறகு சின்னக் கருப்பன் என்கிற பேர்வழியைத் திவட்டிக் கொள்ளைக்காகத் தீவாந்திர சிட்சை அளித்து அந்தமானுக்கு அனுப்பினார்கள். அதற்கும் முப்பது ஆண்டுகள் கழித்து வெல்ல மூட்டைகளைத் திருடி வேலூர்ச் சந்தையில் விற்றதற்காக வேணுகோபால் என்பவருக்கு நான்கு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ...இவர்களெல்லாம் யார் என்று தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டாம்.... பெரிய கருப்பன் என்பவர் பரமசிவத்தின் தாத்தா. சின்னக்கருப்பன் பரமசிவத்தின் சித்தப்பா. வேணுகோபால் பரமசிவத்தின் பாசமிகு தந்தையார்....''

''போய்! நிறுத்தய்யா! ரொம்ப டாமேஜிங்கா இருக்குதே! — இதெல்லாம் உண்மை தானா இல்லே உன் கைச் சரக்கா?...''

''அந்த மூணு ஆசாமிகளைப் பற்றின தகவல் அப்பட்டமான உண்மை. அவர்கள் பரமசிவத்துக்குச் சொந்தக்காரர்கள் என்பது மட்டும் ரீப்...''

''அப்பமென்னு நம்ம மேலே கேஸ் போடுவானே!''

''போடட்டுமே!... மன்னிப்புக் கேட்டுட்டுப் போறோம். அதுவரையிலே அவன் பேரை நாற அடிக்கலாமே!''

''இதிலே உனக்கு என்னய்யா லாபம்?''

''பின்னே பாருங்களேன் — என்ன திமிர் இருந்தால் நாம்ப இத்தனை எழுதியும் அந்த ஆள் கமுக்கமா இருப்பான்...! அவனைச் சும்மா விடக்கூடாது சார்!.. 'என்னய்யா, ஒட்டைப் பல்லன் எப்படி இருக்கான்?'ன்னு உங்களைப்பற்றி விசாரிக்கிறான் சார். என்ன திமிர் அவனுக்கு?...''

நித்தியகண்டம் குத்தவேண்டிய இடத்தில் குத்தினார். ஜம்புலிங்கம் பச்சைக்கொடி காட்டி விட்டார்.

ஆனால் இந்தச் செய்தி வெளியான பிறகும் பரமசிவம் கண்டு கொள்ளாமலே இருந்தார். 'இன்னு நெஞ்சழுத்தம் பாரய்யா அவனுக்கு!' என்று எல்லோரிடமும் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார் நித்தியகண்டம்.

அன்று மாலை தமது மோட்டார் சைக்கிளில் பரமசிவத்தின் வீட்டுப் பக்கம் போனார் நித்திய கண்டம். பரமசிவம் காரில் எங்கோ வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தார். அவர் அறியாமலே காரைப் பின்தொடர்ந்தார் நித்தியகண்டம்.


நகர எல்லைக்கு வெளியே இருண்ட சாலையில் ஒரு புளிய மரத்தடியில் போய் நின்றது பரமசிவத்தின் கார். சற்றுத் தள்ளி நின்று கவனித்தார் நித்தியகண்டம். சற்றைக்கெல்லாம் பிரும்மாண்டமான படகுக் கார் ஒன்று வந்து நின்றது. பரமசிவம் அந்தக் காரில் ஏறி, உட்கார்ந்து கொண்டார். அதில் இருந்தவரிடம் ஏதோ பேசினார். பிறகு தமது காரில் ஏறிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

'ஆகா! பரமசிவம் புதிதாக ஏதோ தில்லுமுல்லு வேலையில் இறங்கியிருக்கிறார் போலிருக்கிறதே! இதைத் துப்புத் துலக்காமல் விடக்கூடாது' என்று முடிவு கட்டிக் கொண்டார் நித்தியகண்டம்.

மறுநாளும் பரமசிவத்தைப் பின்தொடர்ந்தார். எலியட்ஸ் பீச்சில் ஒரு மூலையில் பழையபடி படகுக் கார். பரமசிவம் அதில் இருந்தவருடன் பேச்சு... கசமுசா...

மூன்றாவது நாள் நகரின் பிரபல கிளப் ஒன்றில் நுழைந்தார் பரமசிவம். அவருக்கு முன்பாகவே படகுக் கார் அங்கு வந்திருந்ததைக் கவனித்தார் நித்தியகண்டம். அந்தக் காரில் வந்தவர் உள்ளே இருந்திருப்பார் போலிருக்கிறது... பரமசிவம் அவரிடம் பேசிவிட்டுப் புன்னகை தவழும் முகத்துடன் வெளியே வந்து தமது காரில் ஏறிக்கொண்டு 'விர்'ரென்று பறந்து போனார்.

நித்தியகண்டம் உஷாரானார். அந்தப் படகுக் காரின் மீதே கண்களை ஒட்டவைத்தார். பருமனான வழுக்கைத் தலை ஆசாமி ஒருவர் — கையில் ஜேம்ஸ் பாண்ட் பெட்டி



யுடன் — வெளிப்பட்டு, படகுக் காரில் ஏறிக் கொண்டு போவதைக் கவனித்தார். சிரமப் பட்டுக் காரின் எண்களைக் குறித்துக்கொண் டார்.

மறுநாளே, 'பரமசிவத்தின் பச்சைத் துரோ கம்' என்ற தலைப்பில் 'செய்தி' ஒன்று தயார் பண்ணினார். பரமசிவம் நாட்டைக் காட்டிக் கொடுக்கத் துணிந்து விட்டதாகவும் அயல் நாட்டு ஒற்றனை வழுக்கைத் தலை ஆசாமி ஒருவரின் படகுக் காரில் தினமும் வெவ்வேறு இடங்களில் சதி நடப்பதாகவும் கதை கட்டி விட்டார். அத்துடன் நில்லாமல் அந்தப் படகுக் காரின் எண்ணையும் கொடுத்து வைத் தார்.

ஜம்புலிங்கத்துக்கு அன்று பல் வலி அதிக மாக இருந்ததால் ஆபீசுக்கு மட்டம் போட்டு விட்டார். 'அவர் பார்க்கா விட்டால் என்ன?' என்று தாமே அந்தச் செய்தியை அச்சுக் கோக்கும்படி செய்து, மறுநாளே பிரசுரமும் செய்துவிட்டார் நித்திய கண்டம்.

செய்தி வந்த அன்று காலை ஆறரை மணிக்கு நித்தியகண்டத்தின் வீட்டில் டெலிபோன் மணி ஒலித்தது. 'பரமசிவம் பேப்பரைப் பார்த்திருப்பார். அதுதான் நம்முடன் முதல் காரியமாகப் பேசுகிறார்' என்று எண்ணியவராகத் துள்ளி எழுந்தார் நித்தியகண்டம்.

''யோவ்! என்னய்யா அது இன்னிக்கு அப்படி ஒரு நியூஸ் போட்டிருக்கே?'' என்று அதட்டலாகக் கேட்டது ஒரு குரல்.

''யார் பேசறது?...பரமசிவமா?''

''கண்டம்! நான்தாய்யா ஜம்புலிங்கம் பேசறேன்...''

''அது சார்... வந்து... நடந்ததெல்லாம் உண்மைதான்... பரமசிவம் தினமும் அந்த ஆளை மீட் பண்ணுறார். பேசுறார்.. அந்த ஆள் ஒற்றன்கிறது மட்டும்தான் நம்ம மசாலா...''

''புளுகினதோட நிறுத்திக்கக் கூடா தாய்யா? உன்னை யார் கார் நம்பரைக் கொடுக்கச் சொன்னது?...''

''அது கரெக்ட் நம்பர்தான் சார்!''

''அது யார் கார் தெரியுமா?''

''தெரியாது சார்!''

''நம்ம முதலாளியோட அண்ணன் கார் ஐயா அது!''

''என்னது!''

''நீ வழுக்கைத் தலை ஆசாமி ஒருத்தரைப் பத்தி எழுதியிருக்கியே — அது நம்ம முதலாளி யோட அண்ணன்தான். அவரேதான் அந் தந்த இடங்களிலே வந்து தம்மைச் சந்திக் கும்படியா பரமசிவத்துக்கிட்டே சொன் னாராம்...''

''எதுக்காக?''

''பரமசிவத்தின் பெண்ணை நம்ம முத லாளியோட அண்ணன் மகனுக்குச் சம்பந்தம் பேசறுங்கய்யா. அந்தப் பொண்ணைத்தான் கட்டிக்குவேன்னு நம்ம முதலாளியோட அண்ணன் மகன் ஒற்றைக் காலில் நின்னுறும். வீட்டில் பெண் பிள்ளைகளிடம் சொல்வதற்கு முன் முதலில் பரமசிவத்தைத் தனியே சந் தித்துப் பேசி அவர் மனசைத் தெரிஞ்சுக் கிடலாம்னு நம்ம முதலாளியோட அண்ணன் காரிலே சந்திக்க ஏற்பாடு பண்ணியிருக்காரு!''

''இதெல்லாம் உங்களுக்கு யார் சொன் னது?''

''முதலாளிதான் போன் பண்ணினாரு இப்போ. 'எந்த மடையன் என் அண்ணனைப் போய் ஒற்றன்னு எழுதினான்?'னு சத்தம் போட்டாரு... நான் உன் பேரைச் சொன் னேன்....''

''ஐயையோ! நான் வேணுமானால் முத லாளியைப் போய்ப் பார்க்கட்டுமா?''

''எதுக்கு? அவர்தான் இப்போ முதலாளி இல்லையே!''

''புரியல்லியே நீங்க சொல்றது?''

''அதாவது உனக்கு அவர் முதலாளி இல் லைன்னு சொல்றேன்... அவர் உன் சீட்டைக் கிளிச்சு முக்கால் மணி நேரம் ஆகுது!''

'சதக்! சதக்!' என்று யாரோ நெஞ்சில் குத்தியதைப் போலிருந்தது நித்தியகண் டத்துக்கு!

அறுபது ஆண்டுக்குப் பின் அதே சம்பவம்!

பாரதியார் பாடல்களில் - தனிப்பாடல்களுள் ''புயற்காற்று'' என்னும் தலைப்பிலுள்ள கீழ் வரும் பாடலினை ''நள வருடம் கார்த்திகை மாதம் 8 ந் தேதி புதன்கிழமை இரவு ஒரு கணவனும் மனைவியும் உரையாடியது'' என்னும் குறிப்புடன் இயற்றியுள்ளார்.

புயற் காற்று !

மனைவி: காற்றடிக்குது, கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே
தூற்றல் கதவு சாளரமெல்லாம்
தொளைத்தடிக்குது பள்ளியிலே.
கணவன்: வானம் சினந்தது; வையம் நடுங்குது
வாழி பராசக்தி காத்திடவே
தீனக் குழந்தைகள் துன்பப்படாதிங்கு
தேவி, அருள்செய்ய வேண்டுகின்றோம்
மனைவி: நேற்றிருந்தோம் அந்தவீட்டினிலே,இந்த
நேரமிருந்தால் என்படுவோம்?
காற்றெனவந்தது கூற்றமிங்கே,நம்மைக்
காத்தது தெய்வ வலிமையன்றோ.

என்ன அதிசயம் பாருங்கள்! சென்னையிலும் சுற்றுப்புறங்களிலும் கடந்த 23-11-76, 24-11-76





தேதிகளில் கடும் புயற்காற்றும் பேய் மழையும் பெய்து பெரும் சேதம் ஏற்பட்டதே. அன்றைய தமிழ்த் தேதி என்ன தெரியுமா? நள வருடம் கார்த்திகை மாதம் 8, 9-ம் தேதி புதன் கிழமை தான். ஆஹா! அறுபது ஆண்டுகளுக்குப் பின் அதே நாளில் அதே நிகழ்ச்சி!

தகவல்: திரு வி.ச. நடராஜன், சிவகங்கை



ஷஷ்டிஅப்த பூர்த்தி

கெம்ப்ளாஸ்ட் நிறுவனத்தின் ஜெனரல் மானேஜர் ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி அவர்களின் ஷஷ்டி அப்த பூர்த்தி சமீபத்தில் சென்னையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த வைபவத்துக்கு ஏராளமான உறவினர்களும், நண்பர்களும், நகரப் பிரமுகர்கள் பலரும் வருகை தந்து விழாவைச் சிறப்பித்துத் தம்பதியின் ஆசியைப் பெற்றனர்.

அவன் பார்த்துப்பான்

கோமல் சுவாமிநாதன்



காட்சி 6

(எழுமலை நாயுடு வீடு. நித்யா தன் அறையிலிருந்து வெளியே வருகிறான்.)

நித்யா: ஆனந்த்... ஆனந்த்!

(ஆனந்த் தன் அறையிலிருந்து வெளியில் வருகிறான்.)

ஆனந்த்: என்ன, நித்யா?

நித்யா: நீ மெட்டலர்ஜிஸ்ட்தானே? ஆரத்தி எப்படிக் கரைக்கிறதுன்னு உனக்குத் தெரியுமா?

ஆனந்த்: ஆரத்தி கரைக்க எனக்குச் சொல்லித் தரல்லியே. ஏன், நீகூடத்தான் பி.டெக் படிச்சிருக்கே. உனக்குத் தெரியாதா?

நித்யா: தெரியல்லியே!

ஆனந்த்: ஆமாம், இப்ப எதுக்கு ஆரத்தி?

நித்யா (தன் பாக்கெட்டிலிருந்து ஒரு தந்தியை எடுத்து) இந்தத் தந்தியைப் பாரு!

ஆனந்த்: 'தத்தெடுத்த பெண்ணோடு வருகிறோம். ஆரத்தி கரைத்து வைக்கவும்'— என்னப்பா இது?

நித்யா: போன இடத்திலே நாயுடு ஏதோ ஒரு பொண்ணைத் தத்து எடுத்துக்கிட்டிருக்கிறார் போலிருக்கிறது. அதுதான்...

ஆனந்த்: என்னப்பா, ஒரே மர்மமா இருக்கு!

நித்யா: ஆரத்திக்கு வெண்ணெய் சேர்ப்பாங்களா?

ஆனந்த்: ஆமா. கொஞ்சம் கடுகு கூடத் தாளிச்சுக் கொட்டுவாங்க!

நித்யா: என்னப்பா, கிண்டல் பண்றியா? வெள்ளையா ஏதோ ஒண்ணு போடுவாங்களேன்னு கேட்டால்....

ஆனந்த்: அது வெண்ணெய் இல்லே, சுண்ணாம்பு!

நித்யா: மஞ்சளா ஒரு பொடி போடுவாங்க.

ஆனந்த்: ஆ, மிளகாய்ப் பொடி!

நித்யா: சாம்பாரா வைக்கப் போறே? அது மஞ்சள் பொடி!

ஆனந்த்: அவ்வளவுதான். கொஞ்சம் மஞ்சள் பொடி — கொஞ்சம் சுண்ணாம்பு— கொஞ்சம் தண்ணி தட்ஸ் ஆல்.

நித்யா: அப்பா! ரெண்டு விஞ்ஞானிகள் சேர்ந்து பெரிய விஷயத்தைக் கண்டு பிடிச்சிட்டோம்.

(தீபா தோளில் பிளாஸ்குடன் வருகிறாள்.)

நித்யா: வா, தீபா, நல்ல சமயத்தில் வந்தே! அது என்ன பிளாஸ்க்கு? காப்பி கொண்டு வந்திருக்கிறாயா?

தீபா: இல்லே. நாயுடு பொண்ணைக் கூட்டிக்கிட்டு வரப் போறாரு. ஆரத்தி கரைச்சு வைக்கச் சொல்லித் தந்தி வந்திருக்கிறதாகப் போன் பண்ணினீங்களா? உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோன்னுட்டு ஆரத்தியாலே கரைச்சு பிளாஸ்குலே விட்டுக் கொண்டு வந்துட்டேன்!

நித்யா: வெரிகுட். உன் அறிவுக்கு மெச்சிறேன் — ஆனந்த்! நீ போய் ஒரு தட்டு எடுத்துக்கிட்டு வா.

(ஆனந்த் உள்ளே போகிறான்.)

தீபா: வரப்போற பொண்ணு யாருங்க?

நித்யா: யாருக்குத் தெரியும்? என்னமோ திடீரென்று சாமுண்டி ஹில்சுக்குப் போறேம்னு கிளம்பினாங்க. வரப்போ ஒரு பொண்ணை அழைச்சுக்கிட்டு வராங்க.

(ஆனந்த் தட்டுடன் வருகிறான்.)

ஆனந்: தட்டு ரெடி!

(தீபா தட்டை வாங்கிப் பிளாஸ்கிலிருந்து ஆரத்தி நீரைத் தட்டில் கொட்டுகிறாள்)

நித்யா: ஆரத்தி ரெடி!

(ரங்கநாயகி உள்ளே வருகிறாள்)

ரங்க: யப்பா, யப்பா, ஆரத்தி ரெடி பண்ணிட்டீங்களாப்பா? என் மகராசப்பா.

நித்யா: ரெடியாயிருக்கும்மா.

ரங்க: என் புள்ளைகள் நல்லாயிருக்கணும்பா. யம்மா, டீப்பா! நீ ஒரு பக்கம் புடிம்மா.

(தீபா ஒரு கை பிடிக்கக் கல்யாணி வந்து நிற்கிறாள். கூடவே சர்மா—

சிவராமன், ஏழுமலை நாயுடு வருகி ருர்கள். ரங்ககநாயகி கௌரி கல்யா ணம் வைபோகமே என்று பாடி ஆரத்தியை நெற்றியில் இடுகிருள். கல்யாணி இயந்திரம் போல் நடந்து வந்து மூலையிலிருந்த நாற்காலியில் அமர்ந்து உச்சி மோட்டைப் பார்க் கிருள்.)

ஏழுமலை: நித்யா! இது தான்பா என் பொண்ணு!

நித்யா: வணக்கம்.

(கல்யாணி மௌனமாக இருக்கிருள்)

தீபா: (அருகில் வந்து அவள் தோள்களைத் தொட்டு) வணக்கம்.

(கல்யாணி மௌனம்)

ஏழுமலை: ஒண்ணும் பேசலியேன்னு தப்பா எடுத்துக்காதே. ஏதோ ஒரு பயத்துலே அப்படி இருக்குது.

(ரங்கநாயகி ஆரத்தியைக் கொட்டி விட்டு உள்ளே வருகிருள்)

ரங்க: இப்பதான் எங்க விஷயத்தில ஆண்ட வன் கண் திறந்தாரு! ஒவ்வொரு வாட்டி திருப்பதிக்குப் போற போதும் ஆண்டவனே அடுத்த வாட்டி வரும்போது குழந்தை



யோட வரணும்னு வேண்டிப்பேன். சாமி அப்பல்லாம் கண்ணு திறக்கல்லே!

ஏழுமலை: சாமி எப்படிக் கண்ணு திறப்பாரு. மூணு மாசத்துக்கு ஒரு வாட்டி திருப்பதி போனு?

ரங்க: அம்மா குழந்தை! மாடிக்கு வாம்மா. சாமி ரூம்லே வந்து நமஸ்காரம் பண் ணும்மா. (கல்யாணி மௌனம்)

ஏழுமலை: ஐயரே! இந்தப் பொண்ணு இப்படி ஊமையாட்டம் இருக்குதே. இதை எப் படிப் பேச வைக்கிறது?

சர்மா: நம்மகிட்டே ஒப்படைச்ச அவனே எப்படிப் பேச வைக்கணும்னு அவனுக்குத் தெரியும். அவன் பார்த்துப்பான்.

சிவ: அவன் பாத்துப்பான்னு இந்த விஷயத் திலே வாய் மூடிக்கிட்டு இருக்க நான் தயார் இல்லை. ஏதாவது முயற்சி எடுத்து இந்தப் பெண்ணை எப்படியாவது பேச வைக்கணும்.

சர்மா: நம்முடைய முயற்சியும் அவனுடைய அருளும் இருந்தாத்தான் வெற்றிகரமா முடியும்ப்பா....

சிவ: அதுக்கெல்லாம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை...நம்ம அறிவை உபயோ கப்படுத்தி நாம ஏதாவது செய்தாகணும். நான் ஒரு முயற்சி பண்ணறேன். அதுக்கு உங்க எல்லோருடைய ஒத்துழைப்பும் வேணும்.

சர்மா: நிச்சயமா ஒத்துழைப்புத் தர்றோம்... என்ன பண்ணணும் சொல்லு...

காட்சி 7

(சிவராமனின் யோசனைப்படி மண் ணெண்ணெய் வாசனையுடன் தீப் பந்தத்தின் ஒளி வருகிறது.)

கல்யாணி: (வீறிட்டு) அப்பா! என் மேலே தப்பு இல்லேப்பா... அந்த அயோக்கிய

னுங்க செய்த பாபத்துக்கு நான் பொறுப் பில்லேப்பா...என்னே மன்னிச்சுடுங்கப்பா!

(அலறியவன் அப்படியே மயக்கமுறுகி ருன். மயக்கம் தெளிந்த பின்னே மிரள மிரள விழித்துக் கேட்கிருன்.)

கல்யா: நீங்கள்ளாம் யாரு ... நான் எப்படி இங்கே இருக்கேன்?

ரங்க: பார்த்தாயா ... என் மகளேப் பேச வைச்சிட்டியே ... ஆண்டவனே! உன் கருணேயே கருணே! இப்பவே வந்து உனக்குக் காணிக்கை செலுத்தறேன் தாயே!... வாம்மா! போகலாம்....

(நீபாவும் கிழவியும் வெளியேறுகிருர்கள்.)

சிவ: கல்யாணி ... கல்யாணி....

(கல்யாணி சுற்றும்முற்றும் பிரமை யுடன் பார்க்கிருள்)

சர்மா: இதுவும் உன் வீடுதான், அம்மா! நாங்கதான் ஆதரவில்லாத உன்னேக் கிராமத்திலிருந்து அழைச்சிண்டு வந்தோம்...உங்கப்பா அப்படி ஒரு முடிவு எடுக்கக் காரணம் என்னம்மா?

கல்யா: சொல்றேன்... சபாபதின்னு ஓர் ஏழைப் பள்ளி ஆசிரியர். அவருடைய மகள் நான். பி. எஸ்ஸி முதலாண்டு படிச்சிக்கிட்டிருந்தேன். நாங்க இருந்தது ஒரு சிறு கிராமம். அங்கே ஒரு சின்னக் கோவிலும் அருவியும் கூட உண்டு. பெங்களூர்ல இருந்தும் மைசூர்ல இருந்தும் அங்கே 'பிக்னிக்' வருவாங்க. வரவங்களுக்குச் சாப்பிட நல்ல ஹோட்டல் கிடையாது. அதுனுல வீட்டளவுக்குப் பலகாரம், காப்பியெல்லாம் தயார் செய்து பிரயாணிகளுக்குக் கொடுக்கிறது வழக்கம்.

போன மாசம் ஒரு நாள் மூன்று வாலிபர்கள் காரில் வந்தாங்க ... சாயந்திரம் நாலு மணி இருக்கும். காப்பி கிடைக்குமான்னு கேட்டாங்க. காப்பி போட்டுக் கொடுத்தேன். அதில் ஒருத்தன் என்னேயே ஒரு மாதிரி முறைச்சுப் பார்த்துக் கிட்டிருந்தான். நான் அதை லட்சியம் செய்யாமல் என் காரியத்துல கவனமாயிருந்தேன். அப்புறம் அவுங்க போயிட்டாங்க.



"என் புள்ளேகள் நல்லா இருக்கணும்மா! யம்மா மப்பா! நீ ஒரு பக்கம் புடிம்மா!"

"நினைக்கப்பார்க்க முடியாத கொடுமைக்கு நான் ஆளாக்கப் பட்டேன்."

கல்யா: அந்த அநியாயத்தை ஏன் கேக்கிறீங்க?

சர்மா: அநியாயத்தை அப்படியே வளர விடுவது நியாயமாகுமா? அதற்கு ஒரு முடிவு காண வேண்டாமா?

கல்யா: இனி என்ன முடிவு கண்டு என்ன பயன் சார்? என்னேப் பொறுத்தவரையில் எதுவுமே இல்லே என்ருகி விட்டது!

சிவரா: அப்படிச் சொல்லாதே, கல்யாணி! என்ன கொடுமை நடந்தது, எப்படி நடந்தது என்று விவரமாச் சொல்லு, எங்களால் இயன்றதைச் செய்கிறேம்.

சர்மா: ஆமா அம்மா.



''அப்பா என் மேலே தப்பு இல்லேப்பா, அந்த அயோக்கியனுங்க செய்த பாபத்துக்கு நான் பொறுப்பாளி இல்லேப்பா, என்னை மன்னிச்சுடுங்கப்பா!''

அன்னிக்கு இரவு மணி பத்து இருக்கும். கொல்லைப்புறம் யாரோ முனகுகிற சத்தம் கேட்டது. அப்பா உடம்பு சரியில்லாததாலே படுத்து நல்லாத் தூங்கிப் போயிருந்தாரு. அதனால் அவரை எழுப்பாம நான் மட்டும் அரிக்கன் லைட்டை எடுத்துக்கிட்டுக் கொல்லைப்புறம் போய்ப் பார்த்தேன்.

ஒரு மரத்தடியில் யாரோ பயங்கரமா முனகிக்கிட்டிருந்தாங்க. 'என்னப்பா, என்ன நடந்தது' என்று அவன் நெத்தியில கை வைச்சுப் பார்த்தேன். அடுத்த கணம் அந்த வாலிபன் துள்ளி எழுந்து என் வாயைப் பொத்தினான். இன்னும் இரண்டு பேர் வர சப்தம் கேட்டது. மூணு பேரும் என்னை ஒரு காரில தள்ளினாங்க. கார் கன வேகத்தோட போச்சு. ஒரு பழைய டிராவலர்ஸ் பங்களா. அரிக்கன் லைட் வெளிச்சம். என் வாயைத். துண்டாலே கட்டினாங்க. அந்த மூன்று மிருகங்களும் என்னை...

(சொல்ல முடியாமல் தேம்பி அழுகிறாள். சர்மாவும் சிவராமனும் அருகில் வருகிறார்கள்.)

கல்யா: நினைக்கப் பார்க்க முடியாத கொடுமைக்கு நான் ஆளாக்கப்பட்டேன். அவுங்களுடைய மிருகத்தனமான வெறிக்கு நான் பலியாகிட்டேன். எனக்கு நினைவு வரும் போது அவுங்க காரை எடுத்துக்கிட்டுப் புறப்பட்டுப் போயிட்டாங்க.

அங்கிருந்து வீட்டுக்குத் தள்ளாடி வந்தேன். அப்பா கிட்ட இந்த விஷயத்தைச் சொன்னேன். அவர் பைத்தியம் பிடிச்ச மாதிரியாயிட்டார். மறுநாள் சாயந்திரம் நான் கிணற்றடிப் பக்கம் போயிருந்தப்போ குப்புன்னு வீட்டிலே இருந்து ஒரு புகை வந்தது. ஓடினேன். அப்பா ... அப்பா தீயால் வெந்து கருகிக்கிட்டிருந்தார்.

சிவரா: அக்கிரமம். அநியாயம். சர்மாஜி! கடவுள்னு ஒருத்தன் இருந்தா அந்த மூணு பேரையும் அந்த இடத்தில பொசுக்கி இருக்க வேண்டாமா?

கல்யா: இப்ப சொல்லுங்க, இந்த உலகத்தில எனக்கு நீதி கிடைக்குமா? அந்த மூணு பேரையும் கண்டு பிடிச்சுத் தண்டனை வாங்கித் தர உங்களால் முடியுமா?

சிவரா: நிச்சயமா முடியும். இந்த உலகத்தில இருந்து நீதி செத்துப் போகல்லேங்கறதை நிரூபிக்க என்னால முடியும்.

சர்மா: அவர்களை அடையாளம் காட்ட உன்னால் முடியுமா அம்மா?

கல்யா: ஒருத்தனைத் தெரியும்.

சிவரா: எப்படி?

கல்யா: எங்க கல்லூரி ஆண்டு விழாவுக்கு ஒரு பெரிய மனிதர் தலைமை தாங்க வந்தார். அவருடன் அவர் மகனும் வந்திருந்தார். அன்னிக்கு ராத்திரி அந்த மரத்தடியில முனகிக்கிட்டிருந்தது அந்தப் பெரிய மனிதருடைய மகன்தான்.

சிவரா: யார் அந்தப் பெரிய மனிதர்?

கல்யா: ''மூங்கில்பூ''ன்னு ஒரு பத்திரிகை நடத்துறாராம். பேரு சொக்கலிங்கம்.

சிவரா: சொக்கலிங்கமா?

(அதிர்ச்சி அடைகிறாள்.) (தொடரும்)

உங்கள் குழந்தைக்கு வாழ்வில் முன்னேற வழி வகுத்துக் கொடுங்கள்

குழந்தைகளின் அன்பளிப்புத் திட்டத்தில் சேருங்கள்.

அவனுக்கென்றே அவனுக்கொரு விசேஷ
முதலீட்டுத் திட்டத்தை வகுத்துக் கொடுங்கள்...
அவனோடு அதுவும் வளரும்—பாதுகாப்பாக,
பத்திரமாக. பிறகு என்ன? 21 வயதில் (பெண்கள்
என்றால் 18), ஒரு பெருந்தொகை கிடைக்கும்
அவன் கையிலே!—அவனுக்கு எப்போது பணம்
மிகத் தேவையோ அப்போது—ஆம், மேற் படிப்பு,
அல்லது அவன் வேலையில் சேர, அல்லது
இல்லறத்தைத் துவங்க, இந்த சமயத்திலேயே
பணம் தேவைப் படுமல்லவா? அதோடு எங்கள்
அதிர்ஷ்டக் குலுக்கலில் பெரும் ரொக்கப் பரிசுகள்
பெறும் வாய்ப்புக்களும் பல உண்டு உங்கள் குழந்தைக்கு.

யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா

மேலும் விவரங்களுக்கு அருகாமையிலுள்ள எங்கள்
அலுவலகத்துடன் தொடர்பு கொள்க:

- 45, வீர் நரிமன் ரோடு, பம்பாய் 400 023.
- 9, மாத்யூ ரோடு, பம்பாய் 400 004.
- 8, கவுன்சில் ஹவுஸ் ஸ்ட்ரீட், கல்கத்தா 700 001.
- 6, பார்லிமெண்ட் ஸ்ட்ரீட், புது தில்லி 110 001.
- போர்ட் கிளேசிஸ், சென்னை 600 001.

உங்கள் சேமிப்பைப் பெருக்குவீர், யூனிட் வாங்குவீர்



Sista's-UTI-735/76-A-Tam

அமிர்தாஞ்சனம்

தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு அனைத்துக்கும் குணமளிக்க இல்லந்தோறும் இருக்கவேண்டிய நல்ல மருந்து.








வலி, ஜலதோஷம், சுளுக்கு ஆகியவற்றிற்கு சிறிதளவு அமிர்தாஞ்சனம் தடவுங்கள். அதன் சிறப்பான பத்து மருந்துகளின் கலவை வியக்கத்தக்க வகையில் உங்களுக்கு நிமிஷத்தில நிவாரணமளிப்பதை உணர்வீர்கள். சிக்கனமான ஜாடி, சிறிய பாட்டில் மற்றும் மலிவு விலையில் அடக்கமான டப்பாவிலும் கிடைக்கிறது.

அமிர்தாஞ்சனம்
80 ஆண்டுகளுக்கு
மேலாக நம்பகமான
குடும்ப நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட்

AM-1255



வட்டமேஜை

பிரமாதப் படுத்திய புதிய எழுத்தாளர்!

☐ மர்மக் கதையில் திடீர்த் திருப்பங்கள்! எதிர்பாராத மாற்றங்கள் எல்லாம் இருந்தன. தெளிவான நடை. தங்குதடையற்ற போக்கு. புதிய எழுத்தாளர் இவ்வளவு அழகாக எழுதியிருக்கிறார் என்றால் அது பாராட்டுக்குரியதே!

சென்னை—31
17—12—76 வெ. சுப்புராமன்

☐ கார்த்திகாவின் மர்மச் சிறுகதைக்கு முதல் பரிசு கொடுத்தது மிகப் பொருத்தம். கடைசி வரை சஸ்பென்ஸ் காப்பாற்றப்பட்ட நல்ல கதை. இரவல் குரல் நல்ல திரில். இளம் எழுத்தாளர்களுக்கு வரவேற்புக் கொடுக்கும் உமக்கும் ஒரு சபாஷ்!

மன்னார்குடி.
17—12—76 சரஸ்வதி இராஜேந்திரன்

☐ 19-ந் தேதி இதழில் எல்லாம் இசை மயம்! விளம்பரமில்லாமல் அழகிய "இன்னிசைச் சிறப்பிதழை" வெளியிட்டு எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டு விட்டீர்களே!

20-12-76
வடலூர் வள்ளல்தாசன்

☐ இராஜாஜியின் பிறந்த தினமும் உலக மனித உரிமைகள் தினமும் எதிர்பாராத வகையில் ஒருங்கிணைந்து வருவது என்னை வியப்பில் ஆழ்த்தியது. எனது பாராட்டுகள், இராஜாஜி அவர்களின் உண்மையான பிறந்த தினத்தை வெளிப்படுத்தியவர்களுக்கு மட்டுமல்ல; அதனைத் தலையங்கமாகத் தீட்டிய உங்களுக்கும்தான்.

விருத்தாசலம்
13—12—76 வெ. சம்பந்தம்.

☐ "மாலை வாராராயினும் காலை காண்குவம்" என்று இறுமாப்புடன் மாதவி கூறியதாகச் சிலம்புச் செல்வர் கூறியிருப்பதைப் படித்துத் திகைத்தேன். தன்னைப் பிரிந்து விட்டானே என்ற தாளமுடியாத துயரத்தாலேயும், தாபத்தாலுமே அவ்வாறு கூறினளே தவிர இறுமாப்பால் அல்ல. இதற்கு இளங்கோவே சான்று.

"காலை காண்குவம் எனக்
கையறு நெஞ்சமொடு
பூமலர் அமளிமிசைப்
பொருந்தாது வதிந்தனள்
மாமலர் நெடுங்கண்
மாதவி தானென்."

கையறு நெஞ்சத்தோடு கட்டிலிலே கண்துயில் இன்றிக் கண்ணீர் விடுபவளா இறுமாப்புடன் பேசுவாள்?

மதுரை—3
12—12—76 சௌந்தர்

☐ ம. பொ. சி. அவர்களின் 'சிலம்புச் செல்வம்' படிக்கப் படிக்கத் திகட்டவில்லை. சிலம்புச் செல்வரின் இலக்கியப் புலமை தமிழார்வம் மிக்க கல்கி வாசகர்களைப் பரவசப் படுத்துகிறது.

பெங்களூர்-21
16—12—76 தே. மாயம்பெருமாள், பி.ஏ.

☐ "ஒரு பஞ்சப் பிரதேசத்தை நோக்கிச் செல்லும் ஒரு பாசஞ்சர் ரயில் வண்டி" போட்டிக் கதை ரசிக்கத் தக்க விதத்தில் இருந்தது.

அரிசி நடமாட்டத் தடையின்போது இரயில்வேயில் நடந்த அட்டகாசங்களை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். ஆயின் எக்காரணத்தைக் கொண்டும் இம்மாதிரி சட்டவிரோதக் காரியங்களில் ஈடுபட்டவர்களிடம் பரிவுணர்ச்சியே காட்டக் கூடாது.

அறந்தாங்கி
10—12—76 வி.எஸ். அனந்தராமன்

☐ திகழ்ச்சிக் குவியல்கள்; பல மன விகாரங்கள்; விகார மனங்களை வெளிப்படுத்தும் வலுவான வார்த்தைக் கோவைகள். என் பாராட்டுக்கள், பஞ்சப் பிரதேசம் செல்லும் ரயில் வண்டியின் ஆசிரியருக்கு.

பேராவூரணி
14—12—76 எஸ். சிவராமன்

☐ போட்டிக் கதை "அக்கினி மழை"யில் ஒரு வரி அநாகரிகமாக உள்ளது. அந்த வாசகம்: "ஆட்டுக்குக் கருவேலங்காய் அடிக்கப் போடற 'இடைப் பயல்களும்' அவ்வளவு தொலைவுக்கு வரமாட்டானுவ"

"இடைப் பயல்கள்" என்று சொல்லியிருக்க வேண்டாம். குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாபம் என்பதை மறந்தீரோ?

கீழக்கலங்கல்
18—12—76 ஐ. வேலுச்சாமி

☐ கல்லூரிக் கதை சொன்ன விஜயா பாலகிருஷ்ணன் மிக அழகாகவும், நகைச்சுவை ததும்பவும் கூறினார். எத்தனையோ கிருஷ்ணமூர்த்திகளும் லில்லிகளும் கல்வி நிபுணர்களுக்குச் சவாலாகத்தான் இருந்து வருகின்றனர்.

மாதர்பாக்கம்
10—12—76 மு. பாலசுப்பிரமணியம்

☐ 'வடிந்த வெள்ளம் நீடிக்கும் நிவாரணம்' என்ற தலையங்கத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிய பலரைப் பாராட்டியமைக்கு நன்றி. எனினும் "ஊர்க் காவல் படையினை"ரைக் குறிப்பிடாமல் விட்டது பெரும் குறை.

சென்னை—5
21—12—76 கோதண்டராமன்

குங்குமப் பொட்டுகள் யாவும் ஒரே வகை அல்ல!

சிங்கார் நிச்சயமாக மேன்மையானது
• சன்னமாகவும், சமனமாகவும் அணிந்திடக் கூடியது • எழில் மிகுந்தது • வழிந்து பரவாது
• உலர்ந்ததும் கீறல் விழாது • கறை ஏற்படுத்தாது
• சுகாதார முறையில் தயாரித்தது.

குறிப்பிட்டுக்
கேட்பீர் எப்போதும்

சிங்கார்

முழுமை எழில் கொஞ்சும்.
இந்தியாவின்
உச்ச விற்பனையுள்ள
குங்குமப் பொட்டு.

பாரமௌண்ட் ப்ராடக்ட்ஸ்,
809, ப்ரஸாத் சேம்பர்ஸ்,
பம்பாய் 400 004.



ஸிந்தூர்



சேரமான் காதலி

அத்தியாயம் 6

சதுரங்கத்தில் காய்கள்

முதலாம் சேரமான் பெருமான் நாயன்மார்கள் வரிசையில் சேர்ந்தார்.

இரண்டாம் சேரமான் பெருமான் ஆழ்வார்கள் வரிசையில் சேர்ந்தார்.

மூன்றாம் சேரமான் பெருமான் சைவ மெய்யன்பராகத் திகழ்ந்து வைணவத்தையும் ஆதரித்தார்.

யூஜியானாவின் பிரிவுக்குப் பிறகு, சலீமா யானையிடமிருந்து காப்பாற்றப்பட்ட பிறகு மூன்று ஆண்டுகள் மூன்றாம் சேரமான் பெருமாள் ஆட்சியில் மிகவும் அமைதியான ஆண்டுகள்.

யூஜியானாவின் பிரிவாலே ஏற்பட்ட வடு சேரமானின் நெஞ்சத்திலே இருந்தது என்பதைத் தவிர, இந்த ஆண்டுகளில் அதிலிருந்து வடிந்து கொண்டிருந்த இரத்தம் நின்றுவிட்டது.

திருவஞ்சைக்களத்திலிருந்து திருவிதாங்கோடு வரையில் திருக்கோயில்கள் எழுப்புவதில் சேரமான் முனைந்திருந்தார்.

இந்த ஆண்டுகளில் அவரது பொதுத் திறமை வெளிப்படத் துவங்கிற்று.

அவர் 'அஷ்டாவதானி' யாகத் திகழ்ந்தவர்' என்கிறது வரலாறு.

அவரைச் 'சகல கலா வல்லபன்' என்று பட்டம் சூட்டி அழைக்கிறது ஒரு பிற்காலக் கல்வெட்டு.

இந்த மூன்று ஆண்டுகளில் இக்கதையில் வரும் முக்கிய பாத்திரங்களில் ஒவ்வொருவர் நிலையையும் கவனிப்போம்:

இஸ்ரவேல் நாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த யூஜியானா, தாய்மைப் பேறு எய்தினாள். எல்லோரும் எதிர்பார்த்ததற்கு மாறாக அவள் ஒரு பெண் மகவை ஈன்றெடுத்தாள்.

அந்த வகையில் அவளுக்கொரு நிம்மதி.

அது ஆண் குழந்தையாகப் பிறந்திருந்தால், இஸ்ரவேல் மக்கள் அதை வைத்துக் கொண்டு சேர நாட்டு மகுடத்துக்கு உரிமை கொண்டாட முயற்சி செய்யலாம்.—

அது அவளது ஆருயிர்க் காதலனுக்கு இடையூறாக இருக்கலாம்.

பெண் மகவு, சேரமான் மகள் என்பதோடு ஆறுதல் அடைய வேண்டியது தானே!

அந்தச் செய்தியை அராபிக் கடலில் வரிசையாக, கருநாகங்கள் போல் நெளிந்து கொண்டிருந்த அலைகள் மூலமாகவே அவள் சேரமானுக்கு அனுப்பினாளே யன்றி, ஆள் மூலம் அனுப்ப விரும்பவில்லை.

'நினைவு நெருப்பை மீண்டும் கிளப்பி, அதிலே சேரமானை வேக வைக்க வேண்டாம்' என்று அவள் நினைத்தாள்.

'இந்தக் குழந்தையினால் சேர நாட்டுக்கு ஆபத்து வரும் என்று கூறினார்களே, அது எப்படி?' என்று திகைத்தாள்; சிரித்தாள்.

'எல்லோரும் பொய் சொல்லி விட்டார்கள்' என்றே முடிவு கட்டினாள். என்றாலும், பழைய வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்ள அவள் விரும்பவில்லை.

மங்கல விதவையாகத் தன்னை வரித்துக்கொண்டு விட்டாள்.

இஸ்ரவேலில் அவளது தந்தை யோகோவா வாங்கிய புதிய மாளிகையே அவளுக்குப் போதுமானதாக ஆகிவிட்டது.

குழந்தை பிறப்பதற்கு முன்பே சேர நாட்டுக் கப்பலையும், கப்பலில் வந்த ஊழியர்களையும் அவள் திருப்பி அனுப்பி விட்டாள்.

'காலம் கண் திறக்கும்வரை, ஜெருசலத்தின் தெருக்களிலே நடந்து செல்லும் மனிதர்களையும் பிராணிகளையும் மாடத்திலிருந்தே பார்த்தபடி மற்றவற்றை மறந்து விடுவது' என்று அவள் முடிவு கட்டினாள்.

திருவஞ்சைக்களத்தில் நம்பூதிரிகள் சபைத் தலைவர் நாராயண நம்பூதிரி, திட்டவட்டமான செயல் முறைகளில் இறங்கினார்.

சேரமானின் சமயப் பற்று அவருக்கொரு நிம்மதியை அளித்தது.

கண்ணதாசன்

கோயில் கட்டுவதற்கான இடங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவரது சுறுசுறுப்பு அதிகமாயிற்று.

அகஸ்தீசுவரம் காட்டில் மார்த்தாண்ட வர்மனைக் காப்பாற்றிய பழங்குடி மக்களுக்கு அந்தக் காட்டு நிலங்களையே அவர் உடைமையாக்கினர்.

கன்னியங்காட்டுக் கிருஷ்ணன் கோவிலுக்கு ஆயிரம் காராம் பசுக்களும், நூறு வேலி நிலமும் நிவந்தம் அளித்தார்.

நாடு முழுவதிலும் இருபத்தேழு வேத பாடசாலைகளை உருவாக்கினர்.

ஆண்டவன் அவர் மீது காட்டிய அக்கறையோ என்னவோ, பருவ மழை தவறாமல் பெய்தது.

இந்தக் காலங்களில், 'சேரமான் பத்மாவதியோடு முழு மனமும் இணைந்து வாழ வேண்டும்' என்று அவர் எடுத்துக் கொண்ட முயற்சி மட்டும் பலிக்கவில்லை.

பத்மாவதி—

பட்டத்து ராணி !

அந்த அந்தஸ்தைத் தவிர, மனைவி என்ற முறையில் அதிகம் அனுபவித்து அறியாதவள்; அரசியல் காரணங்களுக்காகவே தன் நாயகன் தன்னோடு இரண்டொரு முறை தொடர்பு கொண்டிருந்தான் என்பதை அறிந்திருந்தவள்.

காலை எழுந்து குளித்து, கரை போட்ட முண்டு கட்டி, கார் கூந்தலைக் கொண்டை யிட்டு, வஞ்சிப் பூச்சூடி, நெற்றியில் சந்தனம் தீட்டிக் குங்குமம் அணிந்து, மங்கல மடந்தையாகத் தினசரி பகவதி யம்மனைத் தரிசிப்பதையே தன் பாக்கியமாக அவள் கருதினள்.

தன் நாத்திமார்களான தாவளி சகோதரிகளின் திருமணங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள்.

மூத்த தாவளிக்குத் திருமணம் நடந்து முடிந்தது; அவள் மணந்து கொண்டது கண்ணனூரரைச் சேர்ந்த ராமவர்மா என்ற படைத் தலைவன் ஒருவனை.

சாலியூர்த் தாவளி மணந்துகொண்டது நாம் ஆரம்பத்தில் சலீமாவுக்கும், அவளது தந்தைக்கும் வழிகாட்டியதாகச் சொன்னோமே, அந்த மானிச்சன் என்ற தளபதியே.

அவன்தான் திருவஞ்சைக் களத்தின் சேனாதிபதி.

மூரின்னூர்த் தாவளி மணந்து கொண்டது, குலசேகர ஆழ்வாரின் தாயாதியான காசியபன் என்ற பெருநிலக்கிழாரை.

இந்த மூன்று திருமணங்களும் ஒரே நாளிலேயே நடந்தன.

அதிக ஆடம்பரமின்றி, இவற்றை அமைதியாகக் கொண்டாடியது, நாராயண நம்பூதிரியின் சிறப்பு.

திருமணத்துக்குப் பிறகும் அந்த மூவரும் அரண்மனையிலேயே தங்கும்படி பத்மாவதி கேட்டுக் கொண்டாள்.

'கொண்டவன் ஆதரவு இல்லாத நிலையில் அரண்மனை கலகலப்பாக இருந்தால்தான் தனக்கு நிம்மதி' என்று அவள் கருதினள்.

அவர்களும் அங்கேயே தங்கினர்கள்.

பள்ளிவிருத்தித் தாவளிக்கும் இளைய தாவளிக்கும் திருமணம் நடைபெறவில்லை.

திருவிதாங்கோட்டில், கணவன் மார்த்தாண்டவர்மனோடு தனியாக இருந்த மெல்லிளங்கோதைக்குத் துணையாகப் பள்ளிவிருத்தித் தாவளியும் இளைய தாவளியும் போய்ச் சேர்ந்தார்கள்.

காரணம் - அங்கிருந்து வந்த செய்தி.

'மார்த்தாண்ட வர்மன் மெல்ல மெல்ல அடிகளாகிக் கொண்டு வருகிறன்' என்ற செய்தியே அது.

பக்திப் பெருக்கில் அவன் பாடல்கள் பாடத் தொடங்கினன்.

தன் மூதாதையர்களில் ஒருவரான முதலாம் சேரமான் பெருமாள், 'இரண்



டாம் திருவிசைப்பா' பாடியது போல, தானும் 'மூன்றும் திருவிசைப்பா' பாடத் துவங்கினுன். தன் பெயரை 'வேணுட்டு அடிகள்' என்று மாற்றிக் கொண்டான்.

அரசனுக்குரிய அணிமணிகளைத் துறந்தான்; விபூதியைத் தண்ணீரில் குழைத்து அங்கமெங்கும் பூசிக் கொண்டான்.

நெற்றியிலே பிரகாசமாகச் சந்தனம் தீட்டி, அதன் மீதும் குங்குமம் அணிந்து ஜொலித்தான்.

செக்கச் சிவந்த அழகிய மேனிக்கு அவையே அணிமணியாக விளங்கின.

குலசேகர ஆழ்வார் காலத்தில் திருவஞ்சைக்களம் முழுவதும் வைணவத் துறவிகள் நிறைந்து காணப்பட்டது போல், திருவிதாங்கோட்டில் சைவத் துறவிகள் நிறையத் துவங்கினர்.

அரண்மனைக்குள்ளும் அடியவர் கூட்டமே காணப்பெற்றது.

'அரண்மனையில் பணி புரிவோர் சைவச் சின்னம் அணிய வேண்டும்' என்ற கட்டளை பிறந்தது.

(இதனை ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள 'கேரளத்தின் விரிந்த சரித்திரம்' விவரிக்கிறது.

(திருமந்திரமணி துடிசைக்கிழார் அவர்கள் எழுதியுள்ள 'சேரர் வரலாறு' என்ற நூலும் மார்த்தாண்டவர்மனின் சைவப் பற்றை உறுதி செய்கிறது. திரு மு. ராகவையங்கார் எழுதிய நூலிலும் இந்தச் செய்தி அப்படியே காணப்படுகிறது.)

அவன் சைவனுக வாழ்ந்தாலும் திருவிதாங்கூர் அனந்தபத்மநாப சுவாமிக்குத் தாசனுகவே விளங்கினுன்.

பத்மநாப சுவாமி கோயிலுக்குள் போகும் மன்னர்கள் கோடி வேட்டி கட்டிச் செல்லும் பழக்கத்தை இவன் உண்டாக்கினுன்.

அந்தக் கோயிலுக்கு இவன் அளித்த விளைநிலங்கள் பட்டியல் மிகப் பெரியது.

சேர வம்சத்தின் எட்டாம் நூற்ருண்டு வாரிசில்லாத நூற்ருண்டு.


ஆம். மெல்லிளங்கோதைக்கும் குழந்தை பிறக்கவில்லை.

இல்லறம் இனிது நடந்தும், மெல்லிளங்கோதை மகப்பேறை எய்தவில்லை.

அழகுச் சிலையாக விளங்கிய இளைய தாவளியை அவனுக்கு மறுமணம் செய்து வைக்க மெல்லிளங்கோதை முயன்றும் அவன் மறுத்து விட்டான்.

'ஆண் மலடோ பெண் மலடோ, யார் கண்டது? ஆண்டவன் விட்ட வழி' என்று கூறி மறுத்து விட்டான்.



விடை:  பதினொன்று.

பாண்டிய நாட்டில் வரகுணபாண்டியன் மறைவுக்குப் பிறகு, சீர்மாறன் சீர்வல்லபன் பாண்டிய நாட்டுப் பெருவேந்தனாக முடிசூட்டிக் கொண்டான்.

இந்த இடைக் காலத்தில், தற்பொழுது 'சீவலப்பேரி' என்று வழங்கப்படும் ஸ்ரீவல்லப ஏரியை இவன் உருவாக்கினான்.

வடமொழியில் பெரும் புலமை பெற்ற இவன், தென் மொழியிலும் வல்லவன்.

தெற்கே திருநெல்வேலியில் இருந்து மதுரை வரை சுமார் நாற்பத்தி ஏழு கோயில்களுக்கு நிவந்தங்களை அளித்தான்.

இவனது இணை பிரியாத் தோழனாக விளங்கியது திருவிதாங்கோட்டு மன்னன் மார்த்தாண்ட வர்மனே.

சமயக் கருத்துக்களையும், அரசியல் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வதற்காக மார்த்தாண்ட வர்மன் மதுரைக்குச் செல்வான். இல்லையென்றால் சீர்வல்லபன் திருவிதாங்கோட்டுக்கு வருவான்.

பூஜியானவை நாடு கடத்துவதற்குக் குறிகாரக் சூறத்தியாக நடித்த சீர்வல்லபனின் மனைவி மட்டும் 'மெல் விளங்கோதைக்கு ஒருநாள் ஆண் குழந்தை பிறக்கும்' என்று குறி சொல்லிக்கொண்டிருந்தாள்.

சுசீந்திரம் கோயிலுக்கு, சீர்வல்லபன் ஆயிரம் ஆடுகளை நிவந்தமாக அளித்தான்.

சோற்றுல் மடை அடைக்கும் சோழவள நாடு, நாம் முன்பு பார்த்தது போலவே அமைதியாக இருந்தது.

கொங்கு நாடு கவுடதேவனுக்குப் பிறகு மல்ல தேவன் ஆட்சிக்கு வந்தும் படை பலம் இன்மையால் கர்னாடக மன்னர்களால் கைப்பற்றப்பட்டுக் கப்பம் கட்டி வந்தது.

சேர நாட்டிலிருந்து கொங்கு நாட்டுக்கு அனுப்பப்பட்ட மாதவி, கொல்லப்பட்டு விட்டாள்.

மீண்டும் நாம் திருவஞ்சைக் களத்துக்கு வந்தால், சேரமானுக்கு இணை பிரியாத சகோதரியாக விளங்கிக்கொண்டிருப்பது தரங்கிணி மட்டுமே என்பதைக் காண்போம்.

அப்படியே மகமதியர் தெருவுக்குப் போனால், சலீமா என்னும் பச்சைக் கிளி, ஜெபுன்னிஸா என்னும் சுட்டிக் கிளியிடம் கொடுந்தமிழ் என்னும் மலையாளத்தைக் கற்றுக் கொண்டிருப்பதைக் காண்போம்.

அரண்மனை மண்டபத்தில் நடக்கும் விழாக்களுக்கெல்லாம் போக அவள் தவறுவதில்லை.

கேள்வி கேட்பது, பதில் சொல்வது என்னும் சுவையான விவாதங்களில் அண்மைக் காலங்களில் அவளும் கலந்து கொண்டாள்.

இன்னும் பத்து நாட்களில் தைத் திங்கள் பிறக்கப் போகிறது.

சங்கராந்தி அன்றுமாலை, மூன்றும் சேரமான் பல்பொருள் வித்தகர்களோடு இலக்கியச் சிலம்பம் விளையாடுவார்.

அந்த விளையாட்டில் தானும் கலந்து கொள்வது என்று சலீமா முடிவு கட்டினாள். (தொடரும்)



இது புதிதல்ல!

இன்று நம் நாட்டில் 'வெல்த் டாக்ஸ்', 'எஸ்டேட் டூட்டி' என்று பணக்காரர்களுக்கு வரி விதிக்கப் படுகிறது. இது நமக்குப் புதிதல்ல. சுமார் 100, 150 ஆண்டுகளுக்கு முன்பு ஆரிய வைசியர் சமூகத்தில் இந்த மாதிரி வரிகள் சமூக நன்மைக்காக வசூலிக்கப்பட்டு வந்தன. அப்பொழுதெல்லாம் வைசிய சமூகத்தில் கல்யாணங்கள் நிகழும் போது, சமூகத்துக்கு என்று குறிப்பிட்ட தொகையைப் பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் வழங்குவார்கள்.

சமூகத்தில் யாராவது செல்வந்தர் இறந்துபோய் விட்டால், அவர்களுடைய சொத்துக்களை, நிலபுலன்களை நான்கு பேர் முன்னிலையில் மதிப்பிட்டு, சமூகத்துக்கு நன்கொடையாகச் சொத்து மதிப்பில் ஒரு சதவிகிதமோ, இரண்டு சத விகிதமோ அளிப்பது உண்டு. சில சமயங்களில் தாங்கள் மற்றவர்களை விடப் பணக்காரர்கள் என்று காட்டி, மதிப்பைத் தேடிக் கொள்வதற்காகச் சொத்தின் மதிப்பை உயர்த்திக் காட்டி, அதிகமான தொகையைக்கூடச் சமூக நன்மைக்காக அளித்து வந்தார்கள். ஆனால் இன்றோ நிலைமை நேர் மாறாக இருக்கிறது.

அசோகா எம். கே. குப்புராஜ்

நன்றி: 'மேம்பாலம்'

ஒரு கேசச் சாயத்தில் நீங்கள் எதிர்பார்ப்பவை எவை?

குறித்துக் கொள்க:

- ☐ இயற்கைப் பொலிவு தருதல்
- ☐ எளிதில் பரவுதல்
- ☐ நீடித்திருத்தல்
- ☐ ஷாம்பூவாகவும் பயன்படுதல்
- ☐ உள்ளடங்கிய கேச கண்டிஷனர்
- ☐ விரைவில் பூசமுடிதல்
- ☐ நறுமணம்
- ☐ அதிகப்படி சாயத்தைக் கழுவுதலில் எளிமை.

புதிய நேச்சுரீன்

உண்மையான ஷாம்ப்பூ-இன் கேசச்சாயம்.

இவையனைத்தும் தரும்— இன்னும் தரும்.

நிகரற்ற நறுமணம்
மிகவும் மிகவும் இனிய மணம்—செடியுள்ள. செயற்கை மணமல்ல

சிந்தல் இல்லை சிதறல் இல்லை
பூசுதற்கோ மிக எளிது

தனித்த கேச கண்டிஷனர்
நேச்சரீனில் மட்டுமே இருக்கிறது 'அமைட்'—ஒரு கண்டிஷனர். தனிப்பட்ட முறையில் ஹெலீன் கர்ட்டிஸ் உருவாக்கியது; கேசத்தை மென்மையாகவும் படிந்தும் இருக்கச் செய்கிறது.

உறையிலே அதிக அளவு பொருள்—
உங்கள் பணத்திற்கு 25% அதி மதிப்பு. ஒருமுறை முயல்வீர்—ஏனை ஷாம்பூ-இன் கேசச்சாயம் எதும் விரும்பமாட்டீர்!



இயல்பான கருப்பு மற்றும் கரும்பழுப்பு நிறங்களில் கிடைக்கும்—ஆண், பெண் இரு பாலார்க்கும்.

கேச பராமரிப்பில் உலகில் தலையாய ஹெலீன் கர்ட்டிஸ் உறுதியளிக்கிறது.
ரே. கே. ஹெலீன் கர்ட்டிஸ் லிட. பம்பாய் 400 036.


நேச்சரீன்—ஜப்பான் மற்றும் அமெரிக்காவில் உடனடி வெற்றிகண்ட கேசச் சாயம்.


இவ்விடம் விசாரிக்கவும்: **பாரி அண்டு கோ. லிட்.**, சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சிக்கந்திராபாத், விஜயவாடா, விசாகப்பட்டினம, கோழிக்கோடு, கொச்சி, பங்களூர், மங்களூர.


மகளிர்க்கு!

குட்மார்னிங் டாக்டர்!

மூன்றாவது குழந்தையைப் பெற்ற மறுநாள் யசோதா என்னிடம் தனிமையில் பேச விரும்பியதாக அறிந்ததும் அவள் படுத்திருந்த அறைக்கு விரைந்தேன். யசோதா கேட்டாள்: '' 'இந்த மூன்று குழந்தைகளையும் நல்ல முறையிலே வளர்த்து உருவாக்கினால் போதும்; இனிமேல் குழந்தைகள் நமக்கு வேண்டாம்' என்று என் கணவர் காலையில் வந்திருந்தபோது சொன்னார். அது நல்ல யோசனையாக எனக்கும் படுகிறது. நான் இப்போது குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்துகொள்ள முடிவு செய்து விட்டேன். என்றைக்குச் செய்து கொள்ளலாம்?''







''பிரசவித்த மூன்றாவது நாளே செய்து கொள்ளலாம். உன்னுடைய உடல் நிலை திருப்திகரமாகவே இருக்கிறது. நாளைக்கு மறுநாளோ அல்லது அடுத்த இரண்டு நாட்களிலோ செய்யலாம். ஏற்பாடு செய்யட்டுமா, யசோதா?''

''செய்யுங்கள், டாக்டர். அதென்ன மேஜர் ஆபரேஷனா? எவ்வளவு நேரம் பிடிக்கும்? ஒன்றும் ஆபத்து இல்லையே?'' என்று தன் மனத்திலிருந்த இலேசான பயம் வெளியாகாதபடி சிரித்தவாறு கேட்டாள், யசோதா.

'' ஸால்ப்பிஞ்செக்டமி (Salpingectomy) எனப்படும் இந்த அறுவைச் சிகிச்சை அரை மணி நேரத்துக்குள் முடிந்து விடும். மிக எளிது. மயக்க மருந்து கொடுத்து விடுவார்கள். பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஃபாலோப்பியன் குழாய்கள் (Fallopian) எனப்படும் மெல்லிய குழாய்கள் துண்டிக்கப்படும். அவ்வளவே. ஆபரேஷன் முடிந்த பிறகு ஏழு—எட்டு நாட்கள் படுக்கையில் இருக்க வேண்டும். ஏழாவது நாள் தையல் பிரித்து விடலாம்'' என்று நான் விளக்கியதும் யசோதா தைரியம் அடைந்தாள்.

''உணவுக் கட்டுப்பாடு ஏதாவது உண்டா?''

''மூன்று நாட்களுக்குத் திரவ உணவு உட்கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு வழக்கம் போல் சாப்பிடலாம்.''

''இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட மகளிர் கடைப்பிடிக்க வேண்டிய விதிகள் யாவை?''

''ஒரு மாதத்துக்குப் பளுவான பொருட்கள் எதையும் தூக்கக் கூடாது. பளு என்றால் ஒரு குடம் தண்ணீர் என்று கொள்ளலாம். இரண்டு மாத காலத்துக்கு உடலுறவு கொள்வதைத் தவிர்க்க வேண்டும். இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளாத பெண்கள் கூட, பிரசவத்துக்குப் பின் இரண்டு மாத காலம் வரை உடலுறவு கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.''

''அதிகம் பேசக் கூடாது, நடக்கக் கூடாது என்று தடைகள் ஏதாவது உண்டா?''

''அப்படி ஏதுமில்லை. சகஜமாகப் பேசலாம். நடக்கலாம். நடப்பது நல்ல தேகப் பயிற்சியும் கூட. படத்தில் காண்பதுபோல் உடற்பயிற்சி செய்தால் வயிறு பருமனாவதைத் தடுக்கலாம். ஒரு மாதத்துக்குப் பிறகு இப்பயிற்சியைத் தொடங்கித் தொடர்ந்து செய்து வருவது நல்ல பலனளிக்கும்.''

''இச் சிகிச்சைக்குப் பிறகு உடல் பருக்கும் என்று சிலர் கருதுகிறார்களே — அது சரியா?''

''தவறு. அப்படி சிலருக்கு உடல் பருமன் கூடினால், வேளா வேளைக்குச் சாப்பிட்டுவிட்டு எந்த வேலையும் செய்யாமல் உட்கார்ந்து இருப்பதன் விளைவாக இருக்கலாம். அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள் ஆறு வாரங்கள் அல்லது இரண்டு மாதங்களுக்குப் பிறகு வீட்டு வேலைகளெல்லாம் வழக்கம் போல் செய்யலாம். செய்வது நல்லது. உடல் பருக்காமலிருக்கவும் இது வழிவகுக்கும். கால்களை வளைக்காமல் குனிந்து நிமிர்ந்து கைவிரல் நுனியால் தரையைத் தொட முயல்வது நல்ல பயிற்சி. தினமும் ஒரு மைலுக்குக் குறையாமல் நடப்பதும் நல்லது.''

''இந்த அறுவை சிகிச்சை செய்து கொண்ட பெண்மணிகளுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் ஏதாவது ஏற்படுமா? மாத விடாய் இடைவெளி (Periodicity) யில் வேற்றுமை தோன்றுமா ?''

''ஒரு சிலருக்கு ஏற்படக்கூடும். ஆனால் அப்படி ஏற்பட்டாலும் அது குறித்துப் பயப்படத் தேவை இல்லை. அறுவைச் சிகிச்சை

செய்து கொள்ளாத சில பெண்மணிகளுக்கும் இப்படி நேர்வதுண்டு. அது உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்காது.''

''அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின் நிச்சயம் குழந்தை பிறக்காதல்லவா?''

''இச் சிகிச்சையில் தோல்வி மிகவும் அபூர்வமே. ஒரு சதவிகிதம்கூட இராது எனலாம்.''

''அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பெண்மணி சில ஆண்டுகளுக்குப் பிறகு அவசியமான காரணங்களை முன்னிட்டு மீண்டும் ஒரு குழந்தைக்குத் தாயாக விரும்பினால் — அது சாத்தியமாகுமா?''

''இதற்கு மீண்டும் ஓர் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருக்கும். (Recanalisation) ஆனால், இதில் ஆண்களுக்கு மறு சிகிச்சை செய்து வெற்றி காண்கிற அளவுக்கு மகளிர்க்கு வெற்றி கிட்டும் என்று கூற இயலாது.''

''எந்த வயது வரை மகளிர் இந்த அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளலாம்?''

''அது தேவையைப் பொறுத்தது. சில பெண்மணிகளுக்கு 50 வயது வரை கூட மாதவிடாய் அகலுவதில்லை. பொதுவாக 40 வயது ஆன பெண்மணிகூட இந்த அறுவைச் சிகிச்சையை அவசியமானால் செய்து கொள்ளலாம். 'அபார்ஷன்' செய்வதை இப்போது சட்டம் அனுமதிக்கிறது. ஆனால், அதில் உயிருக்கு அபாயம் நேர்வதும் உண்டு. இதில் அப்படி அபாயம் ஏதுமில்லை.''

டாக்டர் **எம். வி. லக்ஷ்மி** கூறக்கேட்டு எழுதியவர்: **ருக்மிணி பாலகிருஷ்ணன்**



படத்தின் தலைப்பைப் பார்த்துத் தெய்வீகம் கலந்த கதை என்று எண்ணி ஏமாற வேண்டாம். மிகவும் பயந்து எதற்கெடுத்தாலும் நடுங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்மணி கொடூரமாகச் செய்யப்பட்ட ஒரு பயங்கரக் கொலையை நேருக்கு நேர் பார்த்து விடுகிறாள். சட்டத்தின் பிடியில் சிக்காத அந்தக் கொலைகாரனைப் பழி வாங்க முற்பட்டுப் பத்திரகாளியாகவே மாறிவிடுகிறாள்.

நல்ல குடும்பப்பெண்ணாக காயத்ரி அக்கொடுமையைக் காணு முன் பதிக்கேற்ற பத்தினியாக, குடும்பத்தின் குலவிளக்காக, அருமைக் குழந்தைக்குத் தாயாக இருக்கிறாள். அதன் பிறகு அவள் சித்த சுவாதீனத்தை இழந்து தன் குழந்தையின் உயிருக்கு யமனாகிறாள். அவள் கணவன் நிர்ப்பந்தமான சூழ்நிலையில், சட்டத்தின் உதவியால் விவாகரத்துப் பெறுகிறான். சித்த சுவாதீனம் இழந்த பெண்ணால் அவள் தந்தை சொல்லொணாத வேதனைக்குள்ளாகிறார். இடைவேளைக்குப் பிறகு இரண்டாம் பகுதி தொடங்குகிறது.

அண்மையில் பம்பாயில் நிகழ்ந்த கோர விமான விபத்தில் உயிர் இழந்த ராணி சந்திராதான் கதாநாயகி காயத்ரி. பாத்திரத்தை நன்றாய்ப் புரிந்து கொண்டு அருமையாக நடித்திருக்கிறார். தமிழ்ப் படத்துக்கு ஒரு சிறந்த கதாநாயகியாக விளங்க வேண்டியவர் விதியின் கொடுமைக்குப் பலியாகிவிட்டது மறக்க முடியாத துயரம்.

''பத்ரகாளி''யின் சிறந்த நடிகர், மேஜர்சுந்தரராஜன். காயத்ரியின் ஏழைத் தந்தையாக வந்து தம் நடிப்புத் திறமையால் ரசிகர்களின் கண்களில் நீர் மல்கச் செய்து விட்டார்.

கதாநாயகன் சிவகுமார். சந்தோஷத்திலும், துயரத்திலும் மிக அற்புதமான முகபாவங்களுடன் நன்றாக நடித்திருக்கிறார். காயத்ரிக்கு இளையாளாக வரும் பவானியின் நடிப்பு முதலிரவு அறையில் கணவனோடு விவாதித்தபோது பாராட்டும்படியிருந்தது.

மனோரமா, தேங்காய் சீனிவாசன் நகைச்சுவையின் நாயகர்களாக விளங்குகின்றனர்.

சிறந்த தமிழ் எழுத்தாளர் ''மகரிஷி''யின் மூலக் கதையைச் சிதைக்காமல் படமாக்கியிருப்பது பாராட்டுக்குரியது. திரைக் கதை எழுதிப் படத்தைச் சிறப்பாக டைரக்ட் செய்திருக்கும் ஏ. சி. திரிலோக சந்தருக்கு இது ஒரு வெற்றிப் படம். ஆரூர்தாஸின் வசனம் சுருக்கமாகவும் சுவையாகவும் இருக்கிறது.

''கண்ணன் ஒரு கைக் குழந்தை'' என்ற வாலியின் பாடல், ஜேசுதாஸ், ஜானகியின் குரலில் மிகவும் இனிமையாக ஒலிக்கிறது.

சினிபாரதத்தின் தயாரிப்பான ''பத்ரகாளி'' புதுமையான படம்.

—**காந்தன்**

பல் வைத்தியர்கள் கூறுகிறார்கள்—

தவறாமல் பற்களைத் துலக்குவதோடு, ஈறுகளையும் தேய்த்துக் கொடுத்தால், ஈறு உபாதைகளையும் பற் சிதைவையும் தடுக்கலாம்.



போர்ஹென்ஸ் உபயோகிப்பவர்கள் தாங்களாகவே என்ன கூறுகிறார்கள், பாருங்கள்.

"என் ஈறுகள் வலுப்பெற்று ஆரோக்கியமடைந்து விட்டன"

"கடந்த மூன்று ஆண்டுகளாக, தங்கள் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து வருவதன் மூலம் என் ஈறுகள் வலுப்பெற்று, ஆரோக்கியமடைந்துவிட்டன. முன்பு என் ஈறுகள் மிகவும் தொல்லை கொடுத்து வந்தன... இப்போது தங்கள் டூத்பேஸ்ட் மூலம் இந்த உபாதையிலிருந்து விடுதலை பெற்று விட்டேன்".

(கையொப்பம்) டி.என். தாஸ், ஷிகர்பூர்.

"என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் மீண்டும் நல்லபடியாயின"

"...ராஜ மகேந்திரத்திலுள்ள ஒரு பல் வைத்தியர்...பற்களும் ஈறுகளும் வலுப்பெற... போர்ஹென்ஸ் உபயோகிக்கச் சொன்னார், உடனே அப்படியே செய்தேன். சில நாட்களிலேயே என் மூச்சுக் காற்றும் ஈறுகளும் நல்லபடியாயின. அது முதல் போர்ஹென்ஸ் என் உயிர். இப்போது என் குடும்பத்தில் அனைவரும் (9 பேர்கள்) போர்ஹென்ஸ் உபயோகிக்கிறோம். இந்தப் பழக்கமும் நம்பிக்கையும் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருமென நம்புகிறேன்".

(கையொப்பம்) பி.ஜே. லாஸர், சிராலா, ஆந்திரப் பிரதேசம்.

(இக் கடிதங்களின் புகைப்பட நகல்களை ஜெப்ரி மேனர்ஸ் & கம்பெனி லிமிடெடின் எந்த அலுவலகத்திலும் காணலாம்).

பற்களை தக்க முறையில் பராமரிக்க, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் கொண்டு உங்கள் பற்களை சுத்தம் செய்யவும், ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கவும். கூடவே போர்ஹென்ஸ் டபிள்-ஆக்ஷன் டூத் ப்ரஷ் உபயோகியுங்கள். ஏனெனில் இது பற்களை சுத்தம் செயயும் போதே, ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கும் வகையில் விசேஷமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இலவசம்! பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். தபால் செலவுக்காக, 25 பைசா தபால் தலையுடன் போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, டிபார்ட்மெண்ட் நெ.T-1334681 த.பை. எண் 11463, பம்பாய் 400 020 என்ற முகவரிக்கு எழுதுக.

PIN CODE FOR FAST MAIL

எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.

போர்ஹென்ஸ்

பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

168 F-203 Tam

சிலம்புச் செல்வம்

ம.பொ.சி

வேத முதல்வனை நான்முகனை ஈன்ற திருமாலே இராமனாக அவதரித்தான் என்றும், இந்த நம்பிக்கை தமிழகத்தில் நெடுங்காலமாக நிலைத்திருக்கின்றதென்றும் கவுந்தியடிகள் கூறுவது சிந்தனைக்குரியதாகும். திருமாலின் அவதாரமாக இராமனை அறிமுகப்படுத்தியவர் கம்பர்தான் என்று புலவர்களிலே சிலர் கூறுகின்றனர். கம்பர் தோன்றுவதற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ராமனைத் திருமாலின் அவதாரம் என்று சிலம்பில் இளங்கோ கூறியிருக்கிறார். ஆய்ச்சியர் குரவையுள்ளும் இராமனைத் திருமாலின் அவதாரமாகவே இளங்கோ காட்டுகின்றார். இராமனை மக்கள் வழிபடும் தெய்வமாகச் செய்தது 'குற்றம்' என்றால், அந்தக் 'குற்றத்'தை முதன் முதலில் செய்தவர் கம்பர் அல்ல; இளங்கோவே!

மகாபாரதத்தின் கருப்பொருளாக உள்ள பாண்டவர்-கௌரவர் கதையேயன்றி அதிலே வரும் நளன் சரிதம் போன்ற குட்டிக் கதைகளும் சிலப்பதிகார காலத்துக்கு முன்பே தமிழ் நாட்டில் வழக்கில் இருந்தனவென்று அறிகிறோம்.



கவுந்தியடிகளின் அறிவுரைகளால் ஆறுதலடைந்த கோவலன், மதுரைக்குள் சென்று தானும் தன் மனைவியும் தங்குவதற்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து வருமளவும் கண்ணகியைப் பார்த்துக் கொள்ளுமாறு கவுந்தியடிகளை வேண்டுகிறான்.

''தொன்னகர் மருங்கின்
    மன்னர் பின்னோர்க்கு
என்நிலை உணர்த்தி
    யான்வருங் காறும்,
பாதக் காப்பினள்
    பைந்தொடி...''

கண்ணகியைக் கவுந்தியடிகளின் காப்பில் வைத்துவிட்டு மதுரைக்குள் செல்கிறான் கோவலன். நீண்ட துதிக்கைகளை உடைய யானைக் கூட்டம் செல்வதற்கென அமைக்கப்பட்டுள்ள பாதாளச் சுரங்கத்தின் வழியாகக் கோவலன் நகருக்குள் புகுந்தான். அங்கு தமிழகத்துக்கு அந்நியரான யவனர்கள் கையில் வாள் ஏந்தியவாறு காவல் புரிவதைக் கண்டவனாகச் சென்றான்.

மதுரையின் நுழைவாயிலைக் கடந்தவுடனே அந்நகரின் அமைப்பு முழுவதையும் கோவலனால் பார்க்க முடிந்ததாம். ஆம்; 'டவுன் பிளானிங்' என்று இந்நாளில் சொல்லப்படும் பொறியியல் திறமையோடு அந்நாளைய மதுரையம்பதி அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

சிலப்பதிகாரத்தில் ''ஊர் காண் காதை''யில் மதுரை நகர் வீதிகளிலே கோவலனை நடை போட விட்டு, அந்நகரம் முழுவதையும் நமக்குக் காட்டுகின்றார் இளங்கோ. இந்நாளில் திரைப் படத்தின் தொடக்கத்திலே, கதாநாயகன் தெருக்களிலே சுற்றி அலையும் காட்சிகளைக் காட்டிக் கொண்டே, அந்தக் காட்சியின் மீது நடிக, நடிகையரின் பெயர்கள் போடப்படுகின்றன. இந்தச் சினிமா டெக்னிக் போலத்தான் ஊர் காண் காதையை அமைத்துள்ளார் இளங்கோ.


இந்தக் காதையிலே கோவலன் மதுரை நகருக்குள் புகுந்தது, தன் குலத்தினரான வணிகர்கள் வாழும் வீதிக்குச் சென்று அங்கு தன் மனைவியுடன் தங்குவதற்குத் தகுதியுடைய இல்லத்தைத் தேடிப் பிடிப்பதற்காகத்தான். இதனை, ''மன்னர் பின்னோர்க்கு என்னிலை உணர்த்தி யான் வருங்காறும், பாதக் காப்பினள் பைந்தொடி'' என்று கோவலன் கவுந்தியடிகளிடம் கூறியதால் அறிகிறோம். 'மன்னர் பின்னோர்க்கு' என்பது நால் வருணங்களிலே அரச வருணத்தவருக்கு அடுத்தவரான வணிக வருணத்தவரையே குறிக்கும்.

சிலம்பிலே ஊர் காண் காதை இல்லையென்றால், மதுரை நகரம் பற்றிய பல செய்திகளைப் பிற்காலத்தவர் அறிந்து கொள்ள முடியாமல் போயிருக்கும். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.

இதோ! நீங்கள் துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் 'எரிபொருள்'



பூஸ்ட்

மால்ட் சாக்லெட் மில்க் ட்ரிங்க்

ரயிலுக்கு எரிபொருள் தேவைப்படுவது போன்றே, உங்களுக்கும் நீங்கள் ஒவ்வொரு தினத்தையும் சுறுசுறுப்புடன் தொடங்கவும், நாள் முழுவதும், சீராக நல்ல வேகத்துடன் செயலாற்றவும், ஒரு சக்தியளிக்கும் 'எரிபொருள்' தேவை. இதற்கு, நீங்கள் தினமும் காலையில் பூஸ்ட் பருக வேண்டியது அவசியம். முக்கியமாக பள்ளி வேலையிலும், விளையாட்டிலும் அதிக சக்தியை செலவழிக்கும் உங்கள் குழந்தைகளுக்கு பூஸ்ட் அவசியம் அளியுங்கள்.

பூஸ்ட் ஒரு புதிய, மால்ட், சாக்லெட், பால் சேர்ந்துள்ள பானம்.

உடலுக்குத் தேவையான போஷாக்கினைப் பற்றி அனைத்தையும் அறிந்துள்ள 'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது.

பூஸ்ட், முழு ஆடைப்பால், கோதுமை, பார்லி மால்ட், கோகோ மற்றும் இயற்கையான வைட்டமின்கள், கனிஜச் சத்துக்கள் முதலியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

மற்ற எந்த சாக்லெட் பானத்தையும்விட பூஸ்ட்டில் அதிக அளவு பால் சேர்க்கப்பட்டுள்ளது.
பூஸ்ட்டில் உள்ள அதிக அளவு பால், உங்கள் குழந்தைகளுக்கு அதிக போஷாக்கினையும், அதிக அளவு புரதச்சத்துக்களையும் அளித்து, அவர்கள் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஸ்ட்டில் உள்ள அதிக அளவு பாலினை, பூஸ்ட் பானத்தை அருந்தும் போது நீங்களே உணரலாம்.

பூஸ்ட்டின் மால்ட், சாக்லெட் கலந்த திருச்சுவையை உங்கள் குடும்பத்தினர் அனைவரும் விரும்புவர்.
பூஸ்ட், உங்களுடைய ஒவ்வொரு தினத்தையும் துடிதுடிப்பான முறையில் தொடங்குவதற்கு ஒரு அருமையான பானம்.

'ஹார்லிக்ஸ்' தயாரிப்பாளர்கள் அளிப்பது

B-4313 Tam.A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு



